கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

வடதிருமுல்லைவாயில் மான்மியம்.

இஃது,

திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீ. சிவஞானபாலயதேசிகராதீனத்துச்

சிதம்பரம் - ஈசானியமடம்

ஸ்ரீமத். இராமலிங்கசுவாமிகளவர்கள்

மாணாக்கர்களில் ஒருவரும்,

கடசபந்திரி

வரதப்பநாயடுவின் குமாரருமாகிய,

க. வ. திருவேங்கடநாயடுவினால்

கத்தியரூபமாக இயற்றப்பட்டு,

புதுவண்ணாரப்பேட்டை

வித்யாவிர்த்திநிலயத்தாரால்

சென்னை :

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

நந்தன௵ தைமீ.

உ

சிறப்புப்பாயிரம்.

ஷை வித்யாவிர்த்திநிலய
உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ
சே. சூரப்பநாயடவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொற்கடுக்கைத் தாதின்மதி பொலன்மயமாய் கோடீரப்
புனிதன் மேய வெற்றமைந்த வெயில்புடைசூழ் வடமுல்லை
மான்மியத்தை யெவரு மோர்வான், சொற்படுத்தித் தமிழினி
ற்கத் தியஞ்செய்தா னிராமலிங்க முனிவன் றாய, சிற்பதத்திற்
பதித்தமனத் திருவேங்க டப்பெயர்கொள் தெளிஞன் மாதோ.

கணபதிதுணை.

சுந்தரமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

வடதிருமுல்லைவாயிற்றேவாரம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி, யொருவரை மதியா துறுமைகள் செய்து மூடியு முறைப்பனுய்த் திரிவேன், முருகமர் சோலை சூழ் திரு முல்லை வாயிலாய் வாயினு லுன்னைப், பரவிடு மடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (க)

கூடிய விலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை யுமையவள் காண, வாடிய வழகா வருமறைப் பொருளே யங்கணு வெங் குற்று யென்று, தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பாற், பாடிய வடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (உ)

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர் வெருவிட வேழமொன் றுரித்தாய், செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் தேவர் தம் மரசே, தண்பொழி லொற்றி மாநக ருடையாய் சங்கிலிக் காவென்கண் கொண்ட, பண்பநின் னடியேன் படுதுயர் களை யாய் பாசுப தாபரஞ் சுடரே. (ங)

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டி சை பாட, வந்நலங் கமலத் தவிசின்மே லுறங்கு மலவன்வந் துலவிட வள்ளற், செந்நலங் கழனி சூழ்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பாற், பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய் பாசுப தாபரஞ் சுடரே. (ச)

சந்தன வேருங் காரகிற் குறடுந் தண்மயிற் பீலியுங் கரியின், றந்தமுந் தாளக் குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்து

கொண் டேந்தி, வந்திழி பாலி வடகரை முல்லை வாயிலாய் மாசி
லா மணியே, பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய் பாசுப
தாபரஞ் சுடரே. (ரு)

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே
பேசிக், குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்
கையான் மிகைபல செய்தேன், செற்றுமீ தோடுந் திரிபுர மெரி
த்த திருமுல்லை வாயிலா யடியேன், பற்றிலே னுற்ற படுதுயர்
களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (சு)

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய வார்குழன் மாம
யிற் சாய, லணிகெழு கொங்கை யங்கயற் கண்ணு ரருநட மா
டல ருத, திணிபொழி றழுவு திருமுல்லை வாயிற் செல்வனே
யெல்லியும் பகலும், பணியது செய்வேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. (எ)

நம்பனே யன்று வெண்ணெய்நல் லூரி னுயினேன் றன்னை
யாட் கொண்ட, சம்புவே யும்ப ரார்தொழு தேத்துந் தடங்கட
லஞ்சுண்ட கண்ட, செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வா
யிற் றேடியான் றிரிதர்வேன் கண்ட, பைம்பொனே யடியேன்
படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (அ)

மட்டுலா மலர்கொண் டடியிணை வணங்கு மாணிதன் மேன்
மதி யாதே, கட்டுவான் வந்த காலனை மாளக் காலினு லாருயிர்
செகுத்த, சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற் செல்வனே
செழுமறை பகர்ந்த, பட்டனே யடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. (கூ)

சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி
முல்லையாற் கட்டிட், டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்
பட் டருளிய விறைவனே யென்று, நல்லவர் பரவுந் திருமுல்லை
வாயி லுதனே நரைவிடை யேறீ, பல்கலைப் பொருளே படுதுயர்
களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (கo)

விரைதரு மலர்மே லயனொடு மாலும் வெருவிட நீண்டவெம் மானைத், திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனை நாவலா ரூர, னுரைதரு மாலையோ ரைஞ்சினோ டைஞ்சு முள் குளிர்ந் தேத்தவல் லார்க, ளரைதிரை மூப்பு நடலையு மின்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ - சுப்பிரமணியக்கடவுள்

வரப்பிரசாதியாகிய

அருணகிரிநாதர் அருளிச்செய்த

வடதிருமுல்லைவாயிற்றிருப்புகழ்.

மின்னிடைப தாகை தொங்கலொ டன்மயி லுண வுஞ்செலு
மெல்லியர்கு ழாமி சைந்தொரு தெருமீதே
மெள்ளவுமு லாவி யிங்கித சொல்குயில்கு லாவி நண்பொடு
வில்லியல்பு ரூர கண்கணை தொடுமோக
கன்னியர்கள் போலி தம்பெறு மின்னலிக லார கொங்கையர்
கண்ணியில்வி ழாம லன்பொடு பதஞானக்
கண்ணியிலு ளாக சந்திர பொன்னியல்ப தாத ரங்கொடு
கண்ணுறுவ ராம லின்பமொ டெனையாள்வாய்
சென்னியிலு டாடி ளம்பிறை வன்னியும்வி ராவு கொன்றையர்
செம்மணிகு லாவு மெந்தையர் குருநாதா
செம்முகவி ராவ ணன்றலை விண்ணுறவில் வாளி யுந்தொடு
தெய்விகபொன் னாழி வண்கையன் மருகோனே
துன்னியதி சூரர் மங்கிட சண்முகம தாகி வன்கிரி
துள்ளிடவெ லாயு தந்தனை விடுவோனே
சொல்லுமுனி வோர்த வம்புரி முல்லைவட வாயில் வந்தருள்
துய்யபர ஞான வும்பர்கள் பெருமாளே.

முகவுரை.

தொண்டைநாட்டிலே தேவாரம்பெற்ற திருக்கச்சியேகம்பம் திருக்கச்சிமேற்றளி திருவோணகாந்தன்றளி கச்சியனேகதங்காவதம் கச்சிநெறிக்காரைக்காடு குரங்கணின்முட்டம் திருமாகறல் திருவோத்தூர் திருவன்பாத்தான்பனங்காட்டூர் திருவல்லம் திருமாற்பேறு திருவூறல் (தக்கோலம்) இலம்பையங்கோட்டூர் திருவிற்கோலம் (கூவம்) திருவாலங்காடு திருப்பாசூர் திருவெண்பாக்கம் திருக்கள்ளில் திருக்காளத்தி திருவொற்றியூர் திருவலிதாயம் (பாடி) வடதிருமுல்லைவாயில் திருவேற்காடு திருமயிலாப்பூர் திருவான்மியூர் திருக்கச்சூராலக்கோயில் திருவிடைச்சுரம் திருக்கழுக்குன்றம் அச்சிறுபாக்கம் திருவக்கரை அரசிலி இரும்பைமாகாளம் ஆகிய (௩௨) க்ஷேத்திரங்களுள் ஒன்றாய் விளங்கும் இவ் வடதிருமுல்லைவாயிலானது க்ஷேத்திர தீர்த்த மூர்த்தி வைபவங்களை யுடையதென்பது இப்புராணத்தால் நன்குவிளங்கும்.

இருபத்தெட்டு அத்தியாயங்களடங்கியது என்று வழங்கும் இத்தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தை ஷை தேவஸ்தானம் ஸ்தானீகர் ஸ்ரீமத் - முத்துசாமிகுருக்களவர்களிடம் சிலநாளைக்குமுன் கல்வி யறிவொழுக்கமுடைய கனம்பொருந்திய கொல்லா - கன்னையசெட்டியாரவர்கள்பெற்றுத் தாம் ஆந்திரபாஷையில் வெளியிட்ட க்ஷேத்திர மான்மியத்துள் ஆதொண்டைச்சக்கரவர்த்தியார் சரித்திரத்தைமாத்திரம் சுருக்கிவெளியிட்டிருக்கின்றார். ஷை (௨௮) அத்தியாயங்களடங்கிய புராணம் கிடையாமையினாலேயே, தற்காலம் ஷை தேவஸ்தானம் ஸ்தானீகர் ஸ்ரீமத் - திரு - நாகேசுவரகுருக்களவர்கள் வைத்திருக்கும் (௬) அத்தியாயங்களோடுகூடிய புராணத்தை வட

மொழி வல்லவர்களால் மொழிபெயர்ப்பித்து, யான் தமிழில் கத்தியரூபமாகச் செய்து, திருக்கைலாசபரம்பரைப் பொம்ம புரம் ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசா ணியமடம் ஸ்ரீமந். இராமலிங்கசுவாமிகளவர்கள் முன்னி லையில் பரிசோதித்துப் புதுவண்ணாரப்பேட்டை வித்யாவிர் த்திநிலயத்தார்களின் முயற்சியால், சிலபுண்ணியர்கள் உபக ரித்த பொருட்சகாயங்கொண்டு, அச்சிட்டுமுடித்தேன். நல் லோர்கள் குற்றங்குறியாது இதைக் குணமாக அங்கீகரிப்பார்க ளாக. இதன்றியும், ம-ா-ா-ஸ்ரீ வித்வான் காஞ்சீபுரம் சபா பதிமுதலியாரவர்கள் தமிழில் செய்யுளாக ஒரு புராணஞ் செய்திருப்பதாகவுங் கேள்வி; அது முயன்றுங் கிடைக்கவி ல்லை: அப்புராணமும், (உஅ) அத்தியாயங்களடங்கிய ஷை வட மொழிப்புராணமும், இன்னும் இந்தக்ஷேத்திரத்தைக் குறித்த பழையநூற்களும் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் தயைகூர்ந் தனுப்பில் அச்சிட்டு வெளிப்படுத்துஞ் சித்தமுடையவனாக இரு க்கின்றேன். இத்தலத்திற்குத் தமிழ்ப்புராணம் இல்லாமையி னாலேயே தொண்டைமண்டலத்துளுவவேளாளர்களுடைய - இயற்றமிழ்ப்போதகசாலைத் தமிழ்த்தலைமை மகா-ா-ா-ஸ்ரீ வித்வான் மயிலை. சண்முகம் பிள்ளையவர்கள் தமிழில் புரா ணம் பாடிவருகின்றார்கள். அது, விரைவினே முடிந்தருளக் கடவுள் திருவருள் பாலிப்பாராக.

இங்ஙனம்,

தாழ்மையுள்ள

க. வ. திருவேங்கடன்.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௬ ல்	,,	௩௦ - க்ஷேத்திரத்தில் ஒன்று	ஆலாஸ்யம்
௸	௧௬	மங்கல	சகலமங்கல
௩௨	௭	தொடுத்தினிது	தொகுத்தினிது
௩௭	௫	சமத்து	சமித்து
௸	௨௧	சிந்தித்துத்	சிந்தித்து
௪௪	௧௨	தேழ்வரும்	தெழுவரும்
௪௬	௯	கைக்கொட்டி	கைகொட்டி
௫௭	௨	அக்கோபம்அவர்	கோபம்ஒருவர்
௬௩	௬	உஷத்	உஷஸ்
௸	௯	மூச்சியினுல்	மூச்சினுல்
௬௯	௯	பௌர்ணிமி	பௌர்ணிமை
௮௨	௧௧	ருத்திராக்ஷமே	ருத்திராக்ஷ
௮௪	௨௦	வர்த்திச்	வர்த்தி
௮௭	௯	குறிப்பாக	குறியாக
௯௬	௯	போகமே	லோகமே

௬௦-வது பக்கத்திலுள்ள பாடலில் 'புகலுமிச்சரிதந் தெரிக்குங்காலே.' என்பதை 'புகல்வன்றொகுத்தினிது தெளியுமாறே.' எனத் திருத்திக்கொள்க.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

வடதிருமுல்லைவாயில் மான்மியம்.

பாயிரம்.

முல்லைவிநாயகர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொற்பொருளாய் விளங்குமரன் வீற்றிருக்கும் வடமுல்லைத் தூய கோயிற், பொற்பகலா தமர்ந்தன்பர் போற்றிசைப்ப வேற்றவரம் புரித னோக்கி, யற்பகலார்ந் தமரர்குழாம் பரவவவர்க் கனவரத மருள்பா லித்தே, பற்பலநா மம்பெறுமோர் முல்லை விநா யகன்மலர்த்தாள் பணிகு வாமே. (க)

மாசிலாமணியீசுரர்.

பூமேவுங் கண்ணருமா யிரங்கண்ண ரும்பரவும் பொருவின் முல்லை, தாமேவுந் தனிமுதலை யொருமுதலை வாய்மதலை தருவான் றன்சொற், பாமேவுஞ் சுவலனையென் றவலனைத்தும் பாற்றியருள் பாலிப் பானை, மாமேவு மாசிலாமுல்லைமா சிலாமணியை வணங்கி வாழ்வாம். (உ)

சோழநாட்டிலே, தென்திருமுல்லைவாயில் ஒன்றிருத்தலின், இக்ஷேத்திரத்தை வடதிருமுல்லைவாயில் என வழங்குவர்.

கொடியிடையம்மை.

கனகமுடித் தேவருந்தன் னருளின்றேர் தரும்புமசை யாமை காட்டிப், பனகமுடிப் பரன்மறையப் டன்னவர்க்கங் கவனிலைமை பணித்தாட் கொண்ட, தனகனகக் குன்றுடையா டமணியக்குன் றத்தனுவோன் றன்பான் மேய, வனகமுல்லைக் கொடியிடையா டிணையிடையா வன்பினகத் தமர்த்து வாமே. (௩)

வரசத்திவிநாயகர்.

கலிவிருத்தம்.

சித்தி யாவுந் தவாதருள் செய்திடும்
புத்தி முத்தியும் போத வளித்திடும்
பத்தி முற்றிப் பணிவோர்க் கருள்வர
சத்தி மூர்த்தியின் றாளிணை நாளுமே. (௪)

சுப்பிரமணியக்கடவுள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருணகிரிப் பெரியோன்ற னணிதமிழ்மா லைகள்புனையு மசலந் தம்மைத், தருணவன மானும்வான் குஞ்சரமும் வேட்டருஇற் சார்ந்து நிற்கக், கருணைமழை பொழிந்துமுல்லைக் கடிநகரத் தளியமர்ந்த காங்கே யன்றன், வருண்கம லப்பதமென் மனவசனந் தனின்மலர வழுத்தல் செய்வாம். (௫)

கலைமகள்.

வெள்ளைமனாத் தவிசிலுறை வித்தகியை வேதமணம் விரியுஞ் செவ்வாய்த், தள்ளையையென் புன்மொழிக்குந் தாளநகை கோட்டிட்ட தகைமை யாளைப், பிள்ளைமதி யிகர்க்குநுதற் பெருமாட்டி தனைவணங்கிப் பெட்பி லாவென், கள்ளமிகு வெள்ளைமனக் கமலத்தும் வதிதலுறக் கருது வாமால். (௬)

சமயதாரவர்கள்.

நடத்தாலைங் தொழிலியற்றும் பரம்பொருளி னருட்பெருக்கை நானி லத்தில், விடத்தாலுங் கயத்தாலுங் தடத்தாலு மயத்தாலும் விளக்கிப் பொல்லாச், சடத்தாலா கியவிடரைத் தவிர்ந்துமுத்தி யடைந்துய்யத் தரணியெல்லாங், திடத்தாற்செந் தமிழுரைத்த நால்வர்பத கமலமென்றன் சென்னி சேர்ப்பாம்.

அடியார்கள்.

கலிவிருத்தம்.

உயர்வு மொப்பு மிலாத வுமாபதிக்
கயர்வி லாதுதொண் டாற்றி யருங்கதி
மயர்வு நீங்கப் பெறுந்தொண்டை மான்முதற்
செயிரி லன்பர்தாள் சென்னியிற் சேர்த்துமால். (அ)

இராமலிங்கசுவாமிகள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொங்குபுகழ்ச் சிவஞான பாலயதே சிகனருளம் போதி மாந்தி, மங்குலெனத் தொண்டர்மனப் புலநிறையத் தமிழ்மாரி வழங்கி யன்பாங், துங்கவிதை யிற்சிவபோ கம்விளைக்கு மிராம லிங்க முனிவன் றூய, பங்கயச்செஞ் சரணமித யத்திருத்திப் பவப்பிணியைப் பாற்று வாமே. (௯)

அவையடக்கம்.

வேறு.

தன்னிய கடுக்கை யோடு மத்தமுந் தழீஇய வண்ணல், புன்ணிய மிலாதேன் சொல்லும் புனையுமென் றுரைத்தே ளுயேன், வெண்ணிய புலத்தின் மேலோ ரிகழ்ந்திடா தேற்றல் செய்வர், கண்ணிய பெருமான் காதை யென்பது கருதி மாதோ. (௧0)

பாயிரமுற்றிற்று.

நைமிசாரணியப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்ணவர்க டபோவனமொன் றருள்கவென வயன்குசை யைப் பரிதி யாக்கி, நண்ணவுருட் டலுமதுசென் றேய்வனத் தை நைமிசவா ரணிய மென்றப், புண்ணியர்க ளடைந்துதவம் புரிந்துறுங்காற் சூதமுனி போந்த வர்க்கு, மண்ணிலுயர் மூல் லவன மான்மியஞ்சொல் வரலாற்றை வகுப்பன் மாதோ.

முற்காலத்திலே சௌனகர், உக்கிரசீலர், போதாயனர், விபாண்டகர், கண்ணுவர், கபிலர், முற்கலர், சதாநந்தர், ஜமதக்கினி முதலிய அருந்தவர்களெல்லாம் ஒருங்குகூடிச் சத்தியலோகஞ்சென்று, தம்வருகையைக் கடைகாப்பாளரால் பிரமதேவருக்கறிவித்து, அவர்கட்டளைப்படியே சந்நிதியையடைந்து நமஸ்காரஞ்செய்தார்கள். அப்பிரமதேவர் ஆசிகூறித் தக்க ஆசனங்களிலிருக்கச்செய்து, வந்தகாரியத்தைவினவ; அவர்கள் பணிந்து, எங்கட்குத் தவமும் மனவொருமைப்பாடும் கைகூடும்படித் தக்க புண்ணிய ஆரணிய மொன்றைக் குறிப்பித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

பிரமதேவர் மிக்க சந்தோஷசித்தராய் அவ்வாறே அனுக்கிரகிப்போமென்று கூறியருளி, ஒருதருப்பைப்புல்லை வட்டமாக முடிந்துருட்டி, "ஈது எவ்விடத்தில் ஒய்ந்துதங்குமோ அதுவே உங்களுடைய தவத்திற்குத் தக்க இடமாகும்; அங்கிருந்து நிகரற்ற தவம்புரிந்து மேம்படுவீர்கள்" என்று கட்டளையிட்டு அனுப்பினர். அத்தருப்பை நெடுந்தூரஞ்சென்று, ஒரு ஆரணியத்தில் ஒய; அவ்வோய்ந்த இடமே * நைமிசாரணியமென்று

---

* நேமி - சக்கரம், ஶி - கிடத்தல்; நைமிசம் - சக்கரமோய்ந்த இடம்.

வழங்குவர். அவ்வாரணியம் அம்முனிவர்கள்தங்கித் தவஞ்செய்யத்தொடங்கியபின், அத்தவமகிமையால் மிகச்செழிப்படைந்து, மந்தாரம் மாதுளை வாகை வகுளம் வெட்பாலை சண்பகம் வேங்கை கூவிளம் வருக்கை முருக்கு வாழை சிந்துவாரம் அகில் புன்னை அரசு அத்தி இத்தி தெங்கு முதலிய மரங்களாலும், மல்லிகை முல்லை இருவாக்ஷிமுதலிய கொடிவர்க்கங்களாலும், தாமரை அல்லி குவளை முதலியன பூத்துவிளங்கும் தடாகங்களாலும் விளக்கமடைய; அதில் எலியும் பாம்பும், அரவும் மயிலும், மஞ்ஞையும் ஓந்தியும், யானையும் சிங்கமும், புலியும் மானும், பகையின்றிக் களித்துவிளையாடத் தலைப்பட்டன. இவ்வாறு விளங்கும் அவ்வனத்தில் சகலலோகத்தையும் பரிசுத்தமாக்கவல்ல திவ்வியரூபத்தையுடைய அம்முனிவர்கள் தவங்களைப் பூர்வபக்ஷத்துச் சந்திரன்கலைபோல வளர்த்துக்கொண்டு வரும்போது, பெரும்பாதகங்களைப் போக்குவதும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருஷார்த்தங்களை எளிமையிலேயே தந்தருள்வதுமான * துவாதசவார்ஷிகமென்னும் பிரசித்தயாகத்தைச்செய்ய எத்தனித்துச் சிறப்பாக நடத்திவந்தார்கள். அந்த யாகதரிசனார்த்தம் மற்றுமுள்ள முனிவர்களும், வேதவேதாந்தங்களின் பொருள்களையும் தருமசாஸ்திரப் பொருள்களையும் நன்குணர்ந்த பிராமண சிரேஷ்டர்களும், நீதிகோடாத செங்கோலரசர் முதலியவர்களும் வந்துசேர்ந்தார்கள்.

அக்காலத்துச் சகல புராணார்த்தங்களையும் ஐயந் திரிபில்லாமல் வியாசமுனிவர்பால் ஓதியுணர்ந்து, சகல தருமங்களையுமறிந்த சூதபௌராணிகர் விபூதி யலங்கிருதமான திருமேனியும், உருத்திராக்ஷமாலிகைகள் அவளும் மார்பமும், தண்டு கமண்டலம் விளங்குங் கரங்களும் உடையவராய், கண்ட

* துவாதசவார்ஷிகம் - பன்னிரண்டு வருஷத்திற்செய்து முடிக்கும் யாகம்.

வர்களுடைய கண்ணும் மனமும் களிக்கும்படி அடிவைக்குந் தோறும் சிவநாம உச்சாரணையோடு எழுந்தருளினர். அவர் வருகையை நெடுந்தூரத்திற்கண்ட நைமிசவன முனிவர்கள் பொருக்கென இருக்கைவிட்டெழுந்து, எதிர்கொண்டு தீர்க்க நமஸ்காரஞ்செய்து, முகமன்கூறி யாகசாலைக்கு எழுந்தருளுவித்து, அங்கு வியாசமகாமுனிவருக்காக அமைக்கப்பட்டுள்ள உத்தமமான ஆசனத்தி லிருக்கச்செய்து, அருக்கிய பாத்திய ஆசமநீயமளித்து, பத்திரபுஷ்பங்களாலருச்சித்து எதிரே நின்று, "குணநிதியும் மகாநுபாவருமான முனீந்திரரே! தேவரீரிடத்தில் முன்பொருகாலத்திலே ஸ்ரீசைலம் கோகர்ணம் கேதாரம் விசுவேச்சுரம் ஏகாம்பரம் திருமயிலை துர்க்காக்ஷேத்திரம் தில்லைவனம் ஆடகேச்சுரம் வேதாசலம் விருத்தாசலம் ஔதும்பரவனம் ஜாரவைத்தீச்சுரம் பவவைத்தீச்சுரம் சங்கநாதவைத்தீச்சுரம் கஜாநாதம் சாளீசம் சுவேதாரண்ணியம் சீதளக்ஷேத்திரம் கும்பகோணம் காளஹஸ்தி ஜடாநாதம் மாலதிபுரம் முதலிய திவ்விய தேசங்களின் மான்மியத்தையும், அவற்றுள் வீற்றிருந்தருளும் பெருமானுடைய வைபவங்களையும், சிரவணஞ் செய்தோம். அவற்றுள் * மாலதீபுர மான்மியம் விரிவாகக் கேட்டிருந்தும் அதனிடத்துப் பின்னும் ஆசை மேவுதலால், இன்னும் கேட்க விரும்புகின்றோம்; சிவத்தியானந்தவிர்ந்தவனும், சிவபெருமான்மகிமை அறியாதவனும், சிவபூசை செய்யாதவனும், சிவபத்தியில்லாதவனுமாகிய ஒருவன் யாகாதி உத்தம காரியங்களைச் செய்யினும் அவைகள் பயன்றராமல் யானையுண்ட விளாங்கனியாகும் என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்; சிவகதா சல்லாபத்தோடு யாவன் எக்கியகாரியஞ் செய்கிறானோ அவன் சிவனேயாகின்றானென்று பெருமான் அருளிச்செய் திருக்கின்றா ராதலால், சிவசரித்தி

* மாலதி - முல்லை; இதன்பரியாய நாமமாக பூதிகாபுர மெனவும் வழங்குவர்.

ரம் அருமையைதவிர்ந்து கேட்கத்தக்கதல்லவா? எங்கள் தவப் பயனால் பௌராணிக ரத்தினமாகிய தேவரீரோ கிடைக்கப் பெற்றோம்: இவ்வுத்தம ஆசனத்திலேயே இருந்துகொண்டு அம்மான்மியத்தை அருளிச்செய்யவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது, சூதமுனிவர் புளகாங்கிதராகி, யூதிகாபுர மான்மியத்தைச் சிந்தித்து, ஆநந்த அருவி கண்களி லாறுகப்பெருக அஞ்சலியத்தராகி, உன்மத்தங் கொண்டவர்போலக் கூத்தாடிக்கொண்டே முனிவர்களை நோக்கி, "ஓ சௌனகாதி முனிவர்களே! நீங்கள் வெகுபுண்ணிய சீலர்கள்; அதற்கு யாதும் ஐயமில்லை; நீங்கள் கேட்டவிஷயம் வெகு உசிதமுடையது; எவ்விடத்திலாயினும் எவ்விதத்தினாலாயினும் மனிதராயினும் தேவராயினும் முனிவராயினும் முனிசிரேஷ்டராயினும் சிவகதா சிரவணத்துடனே சற்கருமஞ் செய்வாராகில், அவர் மகத்தாகிய ஆனந்தத்தை யடைவார்; பிராயச்சித்தமில்லாத மாபாதகங்களுக்குச் சிவநாம கீர்த்தனமே பிராயச்சித்த மாகுமென்று, சிவபெருமான் அருளியிருக்கின்றார்; எக்கிய காலத்திலும், பிராமணர்களுடைய கிருகத்திலும், தேவாலயங்களிலும், சுசியான இடத்திலும், சிவஸ்மரணை செய்பவர் சிவனாகின்றார்; இது சத்தியம்: எக்கியத்தில் சிவசரித்திர சிரவணஞ் செய்தால் சகல உத்தமபலனுண்டாகும்; அதிலும் மாலதீவன மான்மியத்தைக் கேட்பதினால் சகல யாகபலனையும், சகல க்ஷேத்திர யான்மியமும் சிரவணஞ் செய்தபலனையும், சகலதீர்த்த ஸ்நானபலனையும், சகல மூர்த்திதரிசன பலனையும், சகல தானபலனையும் வினாவிலேயே பெற்று சிவனாகுவார்: இதில் விசாரம் வேண்டுவதில்லை;'' என்று வற்புறுத்திக்கூறி ஆசனத்தமர்ந்து அத்தலவிசேடத்தை அறைவாராயினர்.

தலவிசேடப்படலம்.

கலிவிருத்தம்.

மல்லி கார்ச்சுன மாதிய மாதலத்
தெல்லை யுற்றங் கிறைஞ்சுநர் பேற்றினு
மொல்லை யிற்சென் றவர்க்குயர் பேறருள்
முல்லை மேன்மை மொழியலுற் றேனரோ.

அருந்தவம்பயிலும் அந்தணச்சிரேஷ்டர்களே! * பதினெண்புராணங்களுள்ளே, சிவபெருமானைக்குறித்துப் பிரதிபாதிக்கும் புராணம்பத்தில் ஒன்றாகிய பவிஷ்யபுராணத்துள், உத்தரபாகத்தில் சிவக்ஷேத்திரகண்டத்தில் மார்க்கண்டேயசங்கிதையில் மத்தியபாகத்தில் இந்த யூதிகாவனமான்மியம் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிற்சொன்னபடியே சிறிதுகூறுகிறேன். சிவசரித்திர சிரவணகாலத்திலே இதரசிந்தை சம்பந்தமில்லாமலிருப்பதே முக்கியவிரதமாகும்; ஆகையால் மனமமர்ந்து கேட்பீர்களாக. இம்மாலதீபுரம் † ஔதும்பரவனத்திற்கு நைருதிதிக்கிலும், ‡ மயூரபுரத்திற்கு வாயுதிக்கிலும், பரி

* பதினெண்புராணங்கள்:—சைவம் பவுடியம் மார்க்கண்டேயம் இலிங்கம் காந்தம் வராகம் வாமனம் மற்சம் கூர்மம் பிரமாண்டம் காருடம் நாரதீயம் வைணவம் பாகவதம் பிரமம் பதுமம் ஆக்கினேயம் பிரமகைவர்த்தம் என்பனவாம். இவற்றை முறையே, சிவபுராணம் (௰) விஷ்ணுபுராணம் (௪) பிரமபுராணம் (௨) அக்கினிபுராணம் (௧) சூரியபுராணம் (௧) எனக்கொள்க.

† ஔதும்பரவனம் - திருவொற்றியூர்; ஆதிபுரி என்பதும் இதுவே.

‡ மயூரபுரம் - திருமயிலை.

சுத்தமான * சுவேதத்துவாரபுரத்திற்குத் தெற்கிலும், பினுகி நதிக்கும் பாலிநதிக்கும் வடக்கிலும், விளங்குகின்றது. அன்றியும், பூமியிலே கைலாசம்போன்றதும், சாரத்திலும் சாரமாய் விளங்குவதும், சிவபெருமான் அம்பிகையோடு இனிதாக வீற்றிருப்பதுமாகியுள்ளது. இத்தலத்திற்கு யாவரேனும் ஒருதரம் யாத்திரைசெய்யில், அவர் அடிவைப்புகளொவ்வொன்றுக்கும் அசுவமேதபலனை யடைவதோடு, மறுபிறப்பை யடையாதவராகின்றார்கள். அல்லது, யாத்திரைசெய்ய இச்சைகொண்டாலும் அவ்விச்சைமகிமையினாலேயே, தேவேந்திரனாகின்றார்கள். ஒரு க்ஷணப்பொழுது பத்தியோடு வசிப்பவர்கள் குபேரசெல்வத்தைப் பெறுகின்றார்கள். அந்த யூதிகாவனத்தில் அந்தணர்களுக்கு அறுசுவையடிசிலை அளிப்பவர்கள் கோடிஎக்கியபலனை அடைகின்றார்கள். பிதிர்கர்மாதிகள் அங்குச்செய்ய விரும்பினாலேயே அப்பிதிர்க்கள் அம்மநுவந்தரம்வரையில் ஆநந்திக்கின்றார்கள். ஒருதரம் செய்வாரேயாகில் மூன்றுகற்பகாலம் திருத்தியடைகின்றார்கள். காய்கனிகளாலாவது அறுசுவை யடிசிலினாலாவது கேவலம் வெறும் அன்னத்தினாலாவது பிதிர்சிராத்தஞ்செய்தால் பதினாயிரந்தரம் கயாக்ஷேத்திரத்தில் செய்த சிராத்தபலனை அடைகின்றார்கள். அங்கு முளைத்துள்ள புற்பூண்டுகளை அடியவர்களுக்கு இடுக்கண் விளையாவண்ணம் களைந்தெடுத்தவர் பதினாயிரம் எக்கியபலனை அடைகின்றார்கள். நல்லபிராமணர்களுக்கு வீடுமனைமுதலியன தானஞ்செய்தால், சகலபாதகங்களினின்றும் எளிமையாகவே நீங்கினவராகி கைலாயத்தை அடைகின்றார்கள். முல்லைமலர்த்தோட்டங்களும், வில்வவிருக்ஷங்களும் மாலதீவனநாதனுக்காக விசேடமாக விருத்திசெய்தவர் கோடிபிதிர்க்களோடு சிவசாருபமடைகின்றார்கள். இவ்விஷயங்களில் யாதொருசந்தேகமும்

* சுவேதத்துவாரபுரம் - திருவெள்ளைவாயில்.

வேண்டுவதில்லை: இதுசத்தியம். என்று சூதபுராணிகர் வற்புறுத்திக்கூறி, முனிவர்கள் வேண்டுகோளின்படி தீர்த்தவிசேடங்களைச் செப்புவாராயினர்.

தீர்த்தவிசேடப்படலம்.

கலிவிருத்தம்.

கங்கை யாதி கணக்கில தீர்த்தத்தும்
பொங்கு சீர்த்தி பொருந்தியம் முல்லையுட்
டங்கு பல்வகைத் தீர்த்தத்துட் சார்ந்திடுந்
துங்க வண்மையைச் சொற்றிட லுற்றனன்.

சௌனகாதி முனிவர்களே! அந்த யூதிகாக்ஷேத்திரத்திலே சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஆலயத்திற்குக்கீழ்பால் தெய்வீகம்பெற்ற ஒருதீர்த்தமுண்டு; அது சுப்பிரமணியக் கடவுள் மானஸ சிருட்டியாற் றோற்றுவித்த தாகையால், மானஸதீர்த்தமென்றும், சுப்பிரமணியதீர்த்தமென்றும், ஐராவதத்திற்குப் பெருமான் தந்தவரத்தால் ஐராவததீர்த்தமென்றும், மூழ்கி நியமமுடிப்போர்க்கு இஷ்டசித்திகளையும் மங்களங்களையும் விளைப்பதால் சித்தி தீர்த்தமென்றும் கல்யாண தீர்த்தமென்றும், பிருகுமுனிவர் இரத்தினங்களைச் சேமித்து வைத்திருந்தபடியால் இரத்தினதீர்த்தமென்றும், தரிசித்தோர்க்கும் உட்கொண்டோர்க்கும் மூழ்கினோர்க்கும் சிவஞானச் செல்வத்தைத் தந்தருளுவதால் சிவஞானதீர்த்தமென்றும், பிரமதேவர்பெற்ற வரத்தால் பிரமதீர்த்த மென்றும், இன்னும் பல காரணங்களால் பலபெயர்களையும் பெற்று விளங்கும். ஆகையால், இவ்வுத்தம தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தோர்கள் இஷ்டசித்திகளை இம்மையிற் பெறுவதோடு மறுமையிற் கைலா

சத்தையு மடைகின்றார்கள். வைசாக பௌர்ணிமையில் ஸ்நானஞ்செய்தவர் சகல தீர்த்தஸ்நானபலனை யடைகின்றார்கள். மாசிமாத மகநக்ஷத்திரத்திலும் சுக்கிரவாரங்களிலும் மூழ்கிப் பிதிர்க்களுக்குத் தர்ப்பணாதிகள் முடித்து, அதிதிகளுக்கு அன்னம் படைத்தவர்கள் பிதிர்க்களும் தாமுஞ்செய்த பாவங்களையெல்லாம் அழலிற்பட்ட பஞ்சாக்கி முத்தியினை யடைகின்றார்கள். மாசிமாதத்தில் சோமவாரத்தோடுகூடிய அமாவாசையில் இத்தீர்த்தத்தில் ஸ்நானமுடித்து, ஆலயத்தையலங்கரித்து, நூற்றெட்டுப் பிரதக்ஷிணஞ்செய்து, நெல்முதலிய *எழுவகைதானியங்களாலும் நவரத்தினங்களாலும், முத்துக்களாலும் மாலதீபுரேசுரரையும் மாலதீபுரநாயகியையும் அருச்சித்து, நாரிகேளமுதலிய பலவர்க்காதிகளை நிவேதித்துச் சோடசோபசாரமு மியற்றித் தோத்திரஞ்செய்தவர் சாயுச்சியத்தையடைகின்றார்கள். ஸ்திரீகள் இவ்வாறு செய்தால் தீர்க்கசுமங்கலிகளாய் வாழ்வார்கள். பிரதோஷம் மகாசிவராத்திரி மாசசிவராத்திரி சோமவாரம் சித்திராபௌர்ணிமை ஆகிய உத்தமநாட்களில் ஸ்நானஞ்செய்து முல்லைமலர்களாற் பூசித்தவர்கள் செல்வம் புகழ் ஆரோக்கியம் சுபம் ஆகிய இவைகளைப் பெற்று முடிவில் சிவனாகின்றார்கள். இவ்விஷயத்தில் சந்தேகமில்லை: இத்தீர்த்தத்திற்கருகில் பந்மதீர்த்தமெனவும் இந்திரதீர்த்தமெனவும் பெயர்பெற்று ஒரு தீர்த்தமுண்டு; இதில் சித்திரைமாத சித்திராநக்ஷத்திரபௌர்ணிமையில் மூழ்கில் இஷ்டசித்திகளைப்பெற்று இந்திரபோகம் அனுபவிப்பார்கள். இதன்றியும் அக்கினிமுதலிய திக்குப்பாலகர்களாலும் சூரியசந்திரர்களாலும் ஒவ்வொருதீர்த்தம் உண்டாக்கப்பட் டிருக்கின்றன. அவைகள் அக்கினிதீர்த்தம் யமதீர்த்தம் நிருதிதீர்த்தம் வருணதீர்த்தம் வாயுதீர்த்தம் குபேரதீர்த்தம் ஈசானதீர்த்தம்

* எழுவகைதானியங்களாவன:—திவாரம் பயறு எள்ளு வெண்கடுகு உளுந்து மொச்சை கொள் என்பன.

சந்திரபுஷ்கரணி சூரியபுஷ்கரணி எனப் பெயர்பெற்று, அள விட்டு முடியாப் பெருமைகளைக் கொண்டிருக்கின்றன. இத் தீர்த்தங்களில், * அருத்தோதயம் மஹோதயம் சூரியகிரகணம் சந்திரகிரகணம் வருஷப்பிறப்பு மாதப்பிறப்பு அமாவாசை முதலிய புண்ணியகாலங்களில் ஸ்நானஞ்செய்தோர் இஷ்ட சித்திகளை யடைவார்கள். என்று சூதமுனிவர் தீர்த்தவிசேடங் களைக்கூறி முனிவர்கள் விருப்பத்தின்படி மூர்த்திவிசேடத்தை மொழிவாராயினர்.

மூர்த்திவிசேடப்படலம்.

கலிவிருத்தம்.

தக்க வேதங்க டாமு மறிகலா
முக்க ணன்வட முல்லையுள் வீற்றிருந்
தெக்கு லத்தரு மேத்த வருள்புரி
மிக்க மேன்மை விளங்க விரிப்பனால்.

அந்தணச்சிரேஷ்டர்களே! அந்தயூதிகாவனத்திலே ஆன்மா ககள் எளிமையிலேயே முத்திப்பே றடையும்படி வீற்றிருக்கும் பெருமான், மணிகளுக்குள் சிந்தாமணியும், தருமங்களுக்குள் சிவதருமமும், பசுக்களுக்குள் காமதேனுவும், பூக்களுக்குள்

---

* அருத்தோதய மகோதயம்:—"மங்கவிலா மகரமா தத்தி லாதி வாரத்தி லமாவாசை யாதி யுஞ்சிர்ப், பொங்குதிரு வோ ணத்தி னடுவுநன்மை பொருந்துவிதி பாதவந்த மும்பொ லிந் தே, தங்குமரு ணோதயகா லம்மருத்தோ தயமாகு மிம்மதியிற் சோம வாரந், துங்கமதா யுறமுன்போல் வருமே லஃதைச் சொல்வர்மகோ தயமெனநூற் றுணிபு ளோரே." என்னும் செ ய்யுளாலறிக.

தாமரையும், மனிதருக்குள் அந்தணரும், தேவர்களுக்குள் சிவ பெருமானும், எவ்விதமாகச் சிரேஷ்டமோ? அங்ஙனமே, மற்றெல்லா க்ஷேத்திரங்களினும் எழுந்தருளி விளங்கும் மூர்த்திகளில் சிரேஷ்டராவர். அக்கடவுளை வில்வங்களால் யாவர் அருச்சிக்கின்றார்களோ அவர்கள் சத்தியலோகத்துக்கு அரசராகின்றார்கள். பெருமான் சந்நிதியில் தீபங்களை ஏற்றுகிறவர்கள் கைலாய பதவியை யடைகின்றார்கள். சித்திரைமாதத்தில் மகோற்சவம் செய்விக்கிறவர்கள் சாயுச்சிய மடைகின்றார்கள். ஊமத்தை மலர்களால் அருச்சித்தவர்கள், இரத்தின மலர்களால் அருச்சித்தபலனை அடைகின்றார்கள். பாதிரி சண்பகம் தும்பை அலரி அகத்தி மகிழ் குங்குமம் ஜாதி செங்கழுநீர் தாமரை முதலிய புஷபங்கள் கோடிகணக்கிற் குறையாது அருச்சித்த பலனினும் சகஸ்திர நாமங்களாலருச்சித்த பலனினும் கோடிமடங்கு அதிகமான உயர்ந்தபலனை ஒரு முல்லை மலரா லருச்சித்தவர்கள் அடைகின்றார்கள். முல்லைமலரால் அருச்சிக்கும் பிரபாவமும், அதில் எம்பெருமானுக் குண்டாயிருக்கும் பிரீதியும், நாமுரைக்கும் தரத்தனவல்ல; ஒரு முல்லை மலரை அன்பில்லாமல் பெருமான் திருவடியிலிட்டவர் உசித தேசங்களுக் கரசராகி, மறுமையில் இந்திரபோக மனுபவித்துக் கடைமுறையிற் சிவசாருபமடைவார். சனிப்பிரதோஷகாலத்தில் நந்திதேவருக்கு எண்ணெய்க்காப்பிட்டு, பசுவின் பாலினாலும் திவ்விய பரிமள சந்தனசலம் மாக்கலந்தசலம் இவைகளாலும் அபிடேகஞ் செய்து, **மாலதீவனேசுரருக்கும், மாலதீவனநாயகிக்கும்** சந்தனமட்டித்து நந்திதேவருடைய சிருங்கமத்தியிற் றெரிசித்தவர்கள் அரசராகிவாழ்ந்து, மறுமையில் சாயுச்சிய மடைவார்கள். வில்வங்களால் அருச்சித்தவர்கள் ஏக சக்கராதிபத்திய மடைவார்கள். இவற்றில் சிறிதும் ஐயமில்லை யென்று சொல்லிமுடிக்க; சௌனகாதி முனிவர்கள் மனங்களித்து, "அண்ணலே! எச்சிறப்பும்வாய்ந்த இந்த யூதிகாபுர

மான்மியம் பூர்வம் யாவர்கேட்க எவர்களால் அருளிச்செய்யப் பட்டது; அதன் வரலாற்றையும் மற்றும் வைபவங்களையும் கருணைகூர்ந் தருளல்வேண்டும்; யாங்களியற்றும் யாகமும் இப்போதுதான் முழுப்பலனைத் தரத்தக்கதாகின்றது.'' என்று விநயத்துடன் வினவ; சூதபுராணிகர் விருப்பத்தோடு சொல் லுவாராயினர்.

பெருமானம்பிகையுட னெழுந்தருளியபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருக்கயிலா யத்தரனைத் தேவி நோக்கித் தேவரீ ரமர்தலத் துட்சிதைத லின்றி, யிருக்குமந்தத் தலம்யாதென் றோடு நீரங் கெழுந்தருளி வதியவிருப் பியைந்தே னென்ன, மருக்கமழுங் குழலுமைக்கு முல்லை வாயில் வளம்பலவு மொழிந்திடப வாக னத்திற், றருக்குகணம் புடைசூழப் போந்து மூர்த்தந் தனில மர்ந்த பரிசதனைச் சாற்றலுற்றேன்.

மகங்களிற்சிறந்த மாதவர்களே! முன்பு ஒருபிரளயகாலத் தில் அனேகவித ரத்தினங்களோடுகூடி விளக்கங்கொண்டதும், வில்வம் மந்தாரம் ஆத்தி முதலியமரங்கள் நிரைநிரையாகச் சூழப்பட்டதும், இனிய இசையோடு பக்ஷிசாலங்கள் சப்திக் கப்பெற்றதும், தும்புரு நாரதர் முதலியோர்களால் கானநாதஞ் செய்யப்பட்டதும், தேவர் சித்தர் சாத்தியர் யக்ஷர் தேவஸ் திரீகள் முதலியவர்களால் நெருங்கப்பெற்றதும், கணநாதர்க ளாலும் இரண்டாஞ்சம்புவென்னும் நந்திதேவராலும் காக்கப் பட்டதுமான கைலாசகிரியில் சொர்ணமயமான திவ்வியாலய

த்தில் நவரத்தினகசிதமாய் கோடிசூரியப் பிரகாசம்போலப் பிரகாசிக்கும் சிங்காதனத்தில் உலகமாதாவாகிய உமாதேவியாரோடு சிவபெருமானெழுந்தருளியிருந்தனர். அக்காலத்தில் உமாதேவியார்வணங்கிப் பிரதக்ஷிணஞ்செய்து, "தேவதேவனே! சரணமடைந்தோரைக்காக்குந் தயாநிதியே! தேவரீரால் சிருட்டியாதிகளுக்கு உட்பட்ட இப்பிரபஞ்சமானது இப்பிரளயத்திலே ஜலத்தில்மூழ்கிவிடும்போது மூழ்காது ஸ்திரமாய்நிற்கும் க்ஷேத்திரம்யாது? அத்தகைய உத்தமக்ஷேத்திரத்தைத் தேவரீரோடு யானுங்காண விரும்புகின்றேன்; அன்றியும், அப்படிப்பட்ட க்ஷேத்திரமே தேவரீருக்குப் பிரியமான தாகையால் அதில் தேவரீரோடு யானும் கற்பகாலம்வரையில் வசிக்கவும் விரும்புகின்றேன்; ஆதலால், மகாதேவரானசம்புவே! கைலாசகிரியிலும் வில்வவனத்திலும் அன்பரகத்திலும் தும்பைவனத்திலும் சிவபத்தசமூகங்களிலும் அரசவிருக்ஷத்திலும் ஆனினத்திலும் விபூதி ருத்திராக்ஷ அலங்கிருதரான அந்தணர்களிடத்திலும் சாதுக்கள்சபை முதலியவற்றிலும் இடைவிடாமல் எப்படிசாநித்தியமாக வீற்றிருப்பீரோ? அப்படியே அந்தக்ஷேத்திரத்தில் அடியேனோடும் வீற்றிருக்கவேண்டும்: இதுவே என் விண்ணப்பம்" என்று கூறியருளினர்.

சிவபெருமான் இவற்றைத் திருச்செவியேற்று, "அம்பிகையே! உனக்கு இவ்வெண்ணமுதித்தது ஆன்மாக்களிடத்து வைத்த பெருங்கருணையேயாம் வேறல்ல; பிரளயகாலத்தில் சகலசராசரங்களும், அழிந்துபோவனவே யாயினும், அனேக பிரளயங்களினும் அழியாது நமக்குக் கைலையைவிட மேம்பட்ட விருப்பமளிப்பதும், நமதுமனம் முழுதுங்கவருவதும், நமது திவ்வியஸ்தானங்களுள் முக்கியமானதும், வெகுஇரகசியமானதுமான ஓர் க்ஷேத்திரம் உளது; அதை, உனக்கு மிக்க விருப்பத்தோடு சொல்லுகின்றோம்; எமக்கு முக்கியதலங்கள் ஏழாயிரத்து நாற்பத்திரண்டு உண்டு; அவைகளுள் நமக்குப்

பிரியமானவை ஆயிரத்தொருநூறு; அவைகளுள் சிரேஷ்ட மானவை எழுநூறு; அவைகளுள்ளும் ஐஞ்நூறுஸ்தலங்கள் விசேடம்; அவற்றினுள்ளும் நூற்றெட்டுத்தலங்கள் கைலா யத்தோடொத்தன; அவைகளிலும் அறுபது க்ஷேத்திரங்கள் மேன்மையுடையவை; அவற்றினுள்ளும் முப்பதுக்ஷேத்திரங் கள் உத்தமோத்தமமானவை; அவற்றின்பெயரைக்கூறுவாம். அவை ஸ்ரீசைலம் கோகர்ணம் வேதாரணியம் கஜஸ்தலம் அரு ணாசலம் விசுவேசம் ஆடகேச்சுரம் வைத்தீச்சுரம் விருத்தாச லம் சுவேதாரண்ணியம் மத்தியார்ச்சுனம் மாயூரம் பிராமேசம் சிவகாஞ்சி தில்லைவனம் சுவேதகிரி சந்தனவனம் ஔதும்பர வனம் காளமேகபுரம் சீதளேச்சுரம் காளஹஸ்திச்சுரம் கும்ப கோணம் பஞ்சநதம் வேணுநாதம் ஜடானனம் வேதகிரி சாயா வனம் கழுக்குன்றம் மாலதீபுரம் ஆகிய இவைகளே.

இவற்றுள் மாலதீபுரம் என்னும்தலம் பலபிரளயத்திலும் அழியாததும் எமக்கு மகாஆனந்தத்தையுண்டாக்குவதுமானது; தேவர்முதலிய யாவர்கட்கும் அது மங்கலங்களையுந்தருவதால் **கல்யாணபுரமென்றும்**, பிரளயத்திலும் அழிவற்றுநிற்கை யால் **ஸ்திரக்ஷேத்திரமென்றும், சித்திக்ஷேத்திரமென்றும்,** கிருதயுகத்தில் நான்குயோசனை சுற்றளவுடையதாய் பிருகுமு னிவருக்கு இரத்தினமழையை வருஷித்தபடியால் **இரத்தினபு ரமென்றும்**, திரேதாயுகத்தில் மூன்றுயோசனை சுற்றளவுடைய தாய் **வில்வாரண்ணியமென்றும்**, துவாபரயுகத்தில் இரண்டு யோசனை சுற்றளவுடையதாய் **சம்பகாரண்ணியமென்றும்**, கலியுகத்தில் ஒருயோசனைசுற்றளவுடையதாய் **மாலதீக்ஷேத் திரமென்றும்** பெயர்பெற்றுவிளங்குகின்றது; அந்தக்ஷேத்திரத் தில் மரித்தவர்கள் எமது ரூபத்தையே பெறுவார்கள்; அங்கு செய்யுங்கருமங்கள் அழியாதபலனைத்தரும்; இத்தலத்தில் நம் மைத்தியானித்துக்கொண்டு வசிப்பவருக்கு நாம் அதிசுலபமா கப் பிரசன்னமாகின்றோம்; அவ்விடத்தில் உனது குமாரனை

சுப்பிரமணியனும் வசிட்டன்முதலியோரும் வழிபட்டு வேண்டியவரங்களைப்பெற்றிருக்கின்றார்கள்; இத்தகைப்பெருமையையுடைய அத்தலம் ஆதிபுரிக்கு ஒருயோசனைதூரத்தில் இப்பொழுதும் விளங்கிக்கொண்டிருக்கிறது. நமதடியாருக்குக் கலியில் இதஞ்செய்வதற்கும் உனது அபீஷ்டம் நிறைவேறுதற்கும் நாம் அவ்விடத்திற் கெழுந்தருளி வீற்றிருப்போம்." என்றருளிச்செய்து சிலாதரமுனிவர் புத்திரராய் வேத்திரப்படையோடுநின்ற நந்திதேவரை நோக்கியருளினர்.

அக்குறிப்பையுணர்ந்த நந்தியெம்பெருமான் சர்வபரிசனங்களையும் தேவர்களையும் முனிவர்களையும் திருவுளத்திலேநினைக்க, அவரவர்களும் பேரானந்தமுடையவராய் வந்துசேரலும், இவ்விஷயத்தை நந்திதேவர் விண்ணப்பித்தனர். நம்பெருமான் தருமவிடையில் அம்பிகையோடு ஆரோகணமாகி, பிரமன் இந்திரன் முதலிய தேவசமூகங்கள் புடைசூழ, பிருங்கிமுதலிய இருடிகள் துதிகூற, நாரதர் தும்புருமுதலியோர் கீதம்பாட, கணநாதர்கள் ஹரஹரஹரவென்று கொண்டாட, காந்தருவர் கின்னரர் முதலியோர் பேரி படகம் முதலியவாத்தியங்கள் கோஷிக்க, பானுகம்பன் தனதுஆயிரம்வாய்களிலும் சங்கநாதஞ் செய்ய, அரம்பையர் சதிபிசகாது நடனமியற்ற, குபேரன் பெருமானுக்கருகிலிருந்துகொண்டு அடப்பையேந்த, தேவர்கள் வேண்டிய உபசாரங்களைச் செய்துவர, விழாக்கொண்டு திருமுல்லைவாயிலுக்குச் சமீபமாக எழுந்தருளி, பார்வதியாரை நோக்கி, "நாயகியே! அதோ சிறிது சலத்திலமிழ்ந்த திவ்வியாலயத்தோடுகூடி விளங்குகின்றதே அதுவே பூதிகாபுரமாகும்; மூன்றுயோசனைபரியந்தம் சுகந்தம் வீசிக்கொண்டு புஷ்பித்துவிளங்கும் முல்லைக்கொடிகள் நமதாலயத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பதையும்பார்; இந்திரநீலரத்தின வடிவாகி விளங்கும் சிவலிங்கத்திற்கு வடபுறமாக முல்லைமலரால் அலங்காரம்பெற்று உனது வடிவாய்விளங்கும் மாலதிமோதநாயகியையும் பார்;

உனதுசெல்வனுன முருகனுல் பூர்வம் மானஸத்தால் சிருஷ்டிக் கப்பட்டதாய்த் துவாபரயுகக்கடையில் கஜேந்திரனுகிய ஐராவதத்தால் புதுக்கப்பட்டு, இப்பொழுது அதன்பெயரால் பிரசித்தியடைந்திருக்கிற இதுதான் கல்யாணதீர்த்தம். இக்தக்ஷேத்திரத்தில் இமைக்கும் நேரமாவது அதில் பாதியாவது பத்தியோடு வசித்தவர்களுக்கு நமது சாருபமளிப்போம்; பிரமதகணங்களுடனும் பரிவாரங்களுடனும் வீற்றிருக்கும் நம்மைப் பிரதோஷகாலத்தில் தரிசிப்பவரும், தரிசித்தவரைத் தரிசித்தவரும், தியானித்தவரும், நமது திருவடியைச்சேருவதில் யாதும் ஐயமில்லை; இலக்ஷமுல்லைமலர்களால் சனிப்பிரதோஷத்தில் உன்னையும் நம்மையும் பூசிப்பவர் நாமேயென நினைக்கத்தக்கவர்; ஆயிரம் வில்வதளங்களால் பூசித்தபலனை இக்தக்ஷேத்திரத்தில் ஒரு முல்லைமலரால் பூசிப்பவர்கட்குக் கொடுப்போம்; அநாதியாகச் சித்திபெற்ற இதை யாவர் யாத்திரைக்காலங்களிலும் தீர்த்தமாடுகையிலும் சங்கற்பித்துக்கொண்டு தியானிக்கிறுர்களோ அவர்களை ஒருபோதும் விலகேம்; நமக்குச் சாத்திக் களைந்த முல்லைமலர்கள் எத்தீர்த்தத்தில் விடப்படினும் நிர்மாலிய சம்பந்த விசேடத்தால், அது கல்யாணதீர்த்தமேயாகும்." என்றருளிச்செய்துகொண்டே வாகனத்திலிருந்தெழுந்தருளி, "பவானியே! நாம் இச்சிவலிங்கத்தில் ஆவிர்ப்பவிக்கின்றோம்; நீயும் உனது மூர்த்தத்தில் ஆவிர்ப்பவிப்பாயாக." என்று கருணையோடு கட்டளையிட்டனர்.

அவைகளைக்கேட்ட தேவியார் திருவடியில்வணங்கி, "சுவாமி! அடியேன் ஒருவரம்பெற விரும்புகின்றேன். அதாவது, கற்பகாலம்வரையில் தேவரீர் என்னுேடு பிரியாது இங்குவசித்தருளல் வேண்டும்: அடியேனிடத்தில் பிரீதியுடையீராகில் இக்தக்ஷேத்திரத்தில் யாவர் எப்பாவங்களியற்றினும் அவைகளைக்களைந்து உமது சாருபத்தையளித்து, இரக்ஷித்தருளல்வேண்டும்: ஸ்ரீசைலாதி திவ்வியதேசங்களில் ஒருசதுர்யுகம்வரையில்நியமமாக

வசிப்பவருக்கு வரும்புண்ணியம் இக்ஷேத்திரத்தில் பத்தியோடு ஒருக்ஷணம் வசிப்பவர்களுக்கும், உண்டாகவேண்டும்: பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளும் பஞ்சமர்களும் இங்கு வசிப்பார்களாகில் உமதுபதத்தையே பெறவேண்டும்: இதுவே என் விண்ணப்பம்." என்று பிரார்த்தித்த மாத்திரத்தில், சிவபெருமான் புன்முறுவல்கொண்டு "நாயகியே! நீ ஆன்மாக்களிடங்கொண்ட கருணைக்கு அளவில்லைபோலும்; அவ்வாறே தந்தருளினேம்; அஞ்சவேண்டாம்." எனக் கருணைகூர்ந்து கடாக்ஷித்து, அங்குள்ள மூர்த்தங்களிலே வசந்தகால வைசாகநக்ஷத்திரமும் பௌர்ணிமைத்திதியும் கடகலக்கினமுங்கூடிய சுபதினத்தில் அம்பிகையாருடன் அந்தர்த்தானமாயினர். அதுகண்ட பிரமாதி தேவர்களும் முனிவர்களும், சப்தசமுத்திரமும் ஒருங்கு கோஷித்தாற்போல, ஹர ஹர ஹரவென்று கோஷித்து, இருக்காதி வேதங்களை ஓதித் துதித்து, அன்புமேலீட்டால் ஆராதித்து வணங்கினார்கள். முனிவர்களே! இத்தலத்தின் வைபவங்களைச் சிவபெருமான் அம்பிகை நந்திதேவர் வியாசமகாமுனிவர் என்னும் இவர்கள் உள்ளபடி சொல்லுவதற் குரியவர்களன்றி, மற்றியாவர் தம்முடைய ஒருசிறிய நாவினால் அளவிட்டுக்கூறவல்லவர். நீங்கள் கேட்டமையால், அந்தக்ஷேத்திரமான்மியம் சொல்லும் புண்ணியத்தையடைந்தேன். இந்தமான்மியத்தைச் சிரத்தையோடு படிப்பவர்களும் கேட்பவர்களும் சிறந்த பிரமஞானமும் பத்தியும் செல்வமும் ஆரோக்கியமும் வித்தையும் பெறுவதன்றித் தேவர்கள் சித்தர் சாத்தியர் பிரமன் விஷ்ணு மகேச்சுரன் கிரகங்களாகிய இவர்களுடைய அநுக்கிரகங்களும் பெற்று, சதா மங்களத்தையே அடைவார்கள். இதில் யாதுஞ் சந்தேகமில்லை: என்று வற்புறுத்திக்கூறி, ஒரு முகூர்த்தகாலம் பரவசராயிருந்து தெளிந்தனர். அப்பொழுது, முனிவர்கள் வணங்கி, உடன்வந்த அப்பிரமதேவர் முதலியோர் வழிபட்ட

தையும் விளங்க விரித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவ்வாறே விரித்துணர்த்துவாராயினர்.

பிரமதேவர் விழாச்செய்படலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கங்கைதவழ் சடைப்பெருமான் கௌரி யோடு கடிமுல்லைத்
தலமமர்ந்த காட்சி நோக்கிப், பொங்குமல ரவன்பூசை புரிந்து
பெற்றே பொருவில்வரம் விழாவியற்றிப் போகுங் காலைத், துங்
கமுனி வரரொடுமிந் திரன்முன் னுகுஞ் சுரர்கணமுந் துதைந்
தன்பால் வழிபட் டேத்தித், தங்களுல கடைந்தினிது வாழ்ந்த
காதை சாற்றுவனிங் கெடுத்துலகு தழைக்க மாதோ.

சற்குண நிரம்பிய சௌனகாதிமுனிவர்களே! அம்முல்லைவனநாதர் அந்தர்த்தானமாயினவுடன், பிரமதேவர் அப்பெருமானைவணங்கிப் பூசையியற்ற விடைபெற்றுக்கொண்டு, கல்யாண தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, நியமமுடித்துப் பட்டாடை புனைந்து, திரிபுண்டரந்தரித்து உருத்திராக்ஷவடம்பூண்டு, பெருமான் சந்நிதியிலிருந்து, * சோஷண தாகன பிலாவன முதலியவற்றால் தனது தேகத்தைச் சுத்திசெய்து, சிவதேகமாக்கியபின் பெருமானைத் தியானித்தெழுந்து, விநாயகனை வழிபட்டு, விக்கினநிவாரணஞ் செய்துகொண்டு, சந்நிதியிற் பிரவேசித்தனர். பின்பு, போதாயன சூத்திரவிதிப்படி கலசஸ்தாபன முதலியவியற்றி, **யூதிகாபுரேசுரரையும் யூதிகாபுரநாயகியையும்** தைலம் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் பால் தயிர்

---

* சோஷணம் - உலர்த்தல்; தாகனம் - தகித்தல்; பிலாவனம் - நனைத்தல். இவை, முறையே வாயுபீசத்தாலும், அக்கினி பீசத்தாலும், வருணபீசத்தாலும், இயற்றப்படுவன.

தேன் கரும்பின்சாறு பழவர்க்கச்சாறு இளநீர் சந்தனம் ஸ்நப னகலசதீர்த்தம் முதலியவற்றால், ஸ்ரீருத்திரம் சமக நமகமுத லிய மந்திரங்களை ஓதி அபிஷேகித்து, முல்லை வில்வம் தும்பை ஊமத்தை அகத்தி அறுகு அக்ஷதைகளால் அருச்சித்து, சம்பா அரிசியாலமைத்த சித்திரான்ன முதலியவற்றை நைவேதித்து, தூபதீபமுதலிய சோடசோபசாரங்களையுமியற்றிப் பின், சுப் பிரமணியக்கடவுள் முதலிய பரிவாரங்களையும் பூசித்து, பல முறை பிரதக்ஷிணஞ்செய்து வணங்கி, ஆனந்தமடங்கா உள் ளத்தராய் ஒற்றைக்காலால் நிருத்தமியற்றிக்கொண்டே துதிப் பாராயினர்.

“எவரிடத்தில் சகலபுவனங்களும் உற்பத்தியாகி நிலைபெற்று இலயப்படுகின்றனவோ அந்த மஹேச்சுரனை நமஸ்கரிக்கின் றேன்; பரமபுருஷரும், காருண்ணியரூபியானவரும், இருக்கு முதலிய வேதங்களே தமது திருமேனியாகக்கொண்டவரும், ஞானனந்தசொரூபியானவரும், பிரமவடிவானவரும், சாமகா னஞ்செய்பவரும், வாமதேவருமாகிய சம்புவுக்கு வந்தனஞ் செய்கின்றேன்; திரிலோகத்தையும் மோகிப்பிக்கும் திவ்விய ரூபமுடையவரும், சகல கருமங்களுக்கும் ஈச்சுரரும், சரண மடைந்தோரைக் காப்பவரும், கங்காதரரும், சந்திரசூடரும், சர்வபூததமரும், சாந்தருமாகிய கடவுளுக்குப் பிரணமஞ்செய் கின்றேன்; சுகரூபியானவரும், ரூபமற்றவரும், துஷ்டநிக்கிர கத்தில் கொடியரும், எல்லாவற்றினும் மேலானவரும், எல் லாராலும் பூசிக்கப்பட்டவரும், தாம்பிரமுதலிய லோகரூபி யானவரும், சகலசராசரங்களிலும் சத்திவடிவாயிருப்பவரும், ஞானிகள்பால் அருளுடையவரும், சத்து சித்து ஆனந்தமாயிரு ப்பவரும், யூதிகாவனேசுரர் என்னும் திருநாமமுடையவரும், யூதிகாவனநாயகியின் நாயகரும், மனத்தாலும் வாக்காலும் எண்ணிமுடியாத நற்குணங்களே ஆகாரமானவரும், சகல ஞா னவிசேடங்களை யளிப்பவரும், சம்சாரபந்தத்தைச் சேதிப்பவ

ருமாகிய நாதருக்கு யான் போற்றிசெய்கின்றேன்; சகஸ்திரா தித்தர்போல ஒளியையுடையவரும், கோடிசந்திரர்போல விளங்கும் திருமுகமண்டலத்தையுடையவரும், சுவர்க்க மோக்ஷமானவரும், பாவாகிதரும், சிருஷ்டி திதி லயாதிகாரணமாய் மூவுருவெடுப்பவரும், தேவகணங்களால் துதிசெய்யப்பட்டவரும், பார்வதிக்கு ஆனந்தமளிப்பவரும், ஈசானுதி ஐந்து திருமுகமுடையவருமான சிவபெருமான்பொருட்டு அநேகநமஸ்காரம் செய்கின்றேன்." என்று, மாலதீவனநாயகனையும் மாலதீவனநாயகியையும் துதிசெய்து, கண்கள் ஆனந்தவருவிபொழியும்படிநிற்க; பெருமான் புன்முறுவலோடு காட்சிதந்து "பிரமனே! உனது துதிக்கும் பூசைக்கும் பத்திக்கும் எளியேமாகி எழுந்தருளினேம்; விரும்பியவரங்களைக் கேட்பாயாக." என்று கட்டளையிட்டனர்.

சத்தியலோக நாயகராகிய பிரமதேவர் தொழுது, "தேவதேவனே! நான் தன்னியனுயினேன்; தேவரீரது சாக்ஷாத்காரத்தைப்பெற்றும் இன்னும் பெறும்பேறு வேறுமுண்டோ? ஆயினும், இம்மாலதீவனக்ஷேத்திரம் இன்றுமுதல் **பிரமபுரமேன்றும்**, இந்தக்கல்யாணதீர்த்தம் **பிரமதீர்த்தமேன்றும்**, தேவரீருக்கும் அம்பிகையாருக்கும் **பிரமநாதேசுரர் பிரமநாதநாயகி** என்றும், திருநாமம் விளங்கவும், இந்தக்ஷேத்திரத்தில் க்ஷணநேரமேனும் தேவரீரைத் தியானித்துக்கொண்டு வசித்தவருக்கு சாய்ச்சியமேனும் சாருபமேனும் தந்தருளவும், இனி அடியேன் தேவரீருக்கு மகோற்சவம் செய்யக் கட்டளையிடவும் வேண்டும்." என்று பிரார்த்தித்தனர். பெருமான் திருவுளமகிழ்ந்தவராய் அவ்வரங்கள் முற்றுந்தந்தருளி, அச்சிவலிங்கத்திலேயே மறைந்தருளினர்.

உடனே, பிரமதேவர் மகோற்சவத்திற்கு வேண்டியவஸ்துக்களைச் சத்தியலோகத்தினின்றே கொணர்வித்து, நகரையுங்

டாக்கி, நடைக்காவணமிட்டு, கமுகு வாழை கரும்பு மகரதோரணம் இடபத்துவசம் முதலியவற்றை நாட்டி, முளைப்பாலிகைகளும் பூரணகடங்களும் ஸ்தாபித்து, ஆலயத்தை அலங்கரித்து, யாககுண்டங்களும் வேதிகைகளும் அமைத்து, வசந்தகாலத்திலே சுக்கிலபட்சத்தில் துஜாரோகணஞ்செய்து, வேதபாராயணம் சாஸ்திர புராண படன முதலியவற்றோடு படகம் பேரி காளம் சின்னம் முதலிய வாத்தியம் கோஷிக்கவும், தேவதாசிகள் நடிக்கவும், காலைமாலைகளில் உரியவாகனங்களில் உற்சவமியற்றி, ஐந்தாநாளில் இடபவாகனமும், ஏழாநாளில் இரதோற்சவமும், பத்தாநாளில் விசாகநக்ஷத்திரத்தில் பிரமதீர்த்தத்திலே தீர்த்தோற்சவமும், அன்றிரவு அவரோஹண உற்சவமும், அடுத்தநாட்களில் சாந்தியுற்சவமும் நடத்தி, வந்த பிராமணர்களுக்கும் யாசகர்களுக்கும் வேண்டியவாறு அன்னம் வஸ்திரம் தக்ஷிணை முதலியகொடுத்து, மனக்களிப்போடு அனுப்பினர். அப்போது, உடன்வந்திருந்ததேவர்களும் முனிவர்களும் அக்கடவுளைவழிபட்டு வேண்டியவரங்களைப் பெற்றார்கள். அவர்களுள்ளே திக்குப்பாலகர் எண்மரும் தமக்குரிய திக்குகளிலே தத்தம்பேரால் ஒவ்வோர்தீர்த்தம் உண்டாக்கித் தாமும் பூசித்து, வேண்டிய இஷ்டசித்திகளைப்பெற்று, தமது உலகமடைந்தார்கள். என்றுகூறுதலும், நைமிசவனமுனிவர்கள் பேருவகையுற்று, அப்பெருமானைக் குமாரக்கடவுள் முதலியோர் வழிபட்ட சரித்திரத்தையும் கூறியருளல்வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அச்சரித்திரங்களையெல்லாம் அறைவாராயினர்.

குமாரக்கடவுள்வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குமரநா யகன்முல்லைக் குழகற் கன்பாற் குறித்துமா னதீ
தொருதீர்த் தம்வ குத்தே, விமலனையம் பிகையொடுபூ சித்

துப் போற்றி விண்ணவர்கட் கதிபதியா மேன்மை யுற்றுப்,
பமராமுரன் றிடுமேலர்சூழ் தீர்த்தமோடு பதியுந்தன் பெயர்வழ
ங்கப் பரிவாற் பெற்றே, தமரொடுபோய்ச் சூரனெடுந் தம்பி
யோனைத் தாக்கிமண முடித்ததுசார்ந் துணைப்பன் மன்னே.

தற்போதமகற்றிய தபோதனர்களே! பூர்வத்திலே, காசிப முனிவருக்குப்பிறந்த சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் என்னு மசுரர்கள் தமது தாயாகிய மாயை உபதேசப்படியே பதினாயிரம் வருடம் அரியயாகமொன்றை இயற்றியும் சிவபெருமான் பிரசன்னமாகாமையால், சூரபதுமன் தனது உடற்றசையை யரிந்து அவியாகச்சொரிந்து, யாகத்தில்வீழ்ந்திறந்தனன். அது கண்ட சிங்கமுகன் சிறிதும் சலியாமல் அந்தயாகத்தைப் பூர்த்திசெய்ய; சிவபெருமான் பிரசன்னராகிச் சூரபதுமனை எழுப்பி, ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டுச் சதுர்யுகமளவும் அரசுபுரியும்படி வரந்தந்தருளினர். அவர்கள் பின்பு தங்களுடைய ஆசிரியராகிய சுக்கிராசாரியரது துர்ப்போதனையால் தேவர்கட்குப் பலஇடுக்கண்களை விளைப்பாராகி, தேவேந்திரன் குமாரனுன சயந்தன் முதலியதேவரைச் சிறையிடுவித்து தேவஸ்திரிகளையெல்லாம் வேண்டியவாறு கொள்ளைகொண்டு, தேவலோகத்தை யழித்துத் தமதாக்கி, ஆயிரத்தெட்டண்டங்களையும் ஆண்டுவந்தனர். தேவர்களெல்லாம் தம்முடைய பெருமை குலைந்து, சிற்றேவல் செய்தொழுகுங்கால், இந்திரன் இந்திராணியோடு உருமாறி உலகெங்கும் அலைந்துதிரிந்து பலமுறையும் கைலைக்குச்சென்று முறையிட; சிவபெருமான் அத்தேவர்கள் சிவாபராதியாகிய தக்கனது யாகத்திற் சம்பந்தப்பட்ட தோஷம் நீங்கும்வரையும் அத்துன்பங்களை நுகர்வித்துக்கொண்டு தாம் சனகாதியருக்கு உபதேசிக்குமாறு யோகத்திருந்து, பின்னர் இமையமலையிலவதரித்திருந்த பார்வதிதேவியாரைத் திருமணமுடித்து, கைலையில் எழுந்தருளியிருந்தனர்.

அக்காலத்திலே தேவர்களெல்லாருங்கூடி கைலைக்குச்சென்று, நந்திதேவரை வணங்கி, அனுஞைபெற்று, உள்ளேபிரவேசித்து, தாங்கள் சூரபதுமனால் படும்பாடுகளையெல்லாம் கண்ணீர் வாரப் பலவாறு முறையிட்டுக்கொண்டார்கள். அவைகளைக் கேட்டபெருமான் அவ்வசுரர்களை யழிக்கத் திருவுளங்கொண்டு, ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்துமுகங்களோடு அதோமுகமுந்தோன்ற ஆறுதிருமுகமாக வீற்றிருக்க; அம்முகங்களிலுள்ள ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் அம்பிகையும் தேவர்களும் அஞ்சியோடும்படி சுவாலையை வீசிக்கொண்டு தோன்றின. அவற்றைக்கண்டு பயந்து முறையிடும் தேவர்கட்கிரங்கிப் பெருமான் அக்கினிதேவனையும் வாயுதேவனையும் அழைத்து, அவர்கட்குத் தமதுகருணையைப் பூரணமாகப்பாலித்து, இவ்வக்கினிப் பொறிகளைக் கங்கையில் விடுவீர்களென்று கட்டளையிட; அவர் அப்பணியைப் பணிவோடு சிரமேற்கொண்டு, அச்சுவாலையைச் சகிக்கலாற்றாது மெல்லவேந்திச்சென்று, கங்கையில்விட்டனர். அக்கங்கையும் அவற்றைத் தாங்கும் சத்தியற்று தனது அலைகளென்கிற கரங்களால் மெல்லத் தாங்கிச்சென்று, சரவணப் பொய்கையில் விடுத்தலும், அந்த ஆறுபொறிகளும் ஆறு குழந்தை வடிவமடைந்து வீற்றிருக்க; அச்சரவணப்பொய்கையைச் சூழ்ந்து காவலராகிக் காத்திருந்த தேவர்கள் கார்த்திகைமுதலிய ஆறுபெண்களைக்கொண்டு பாலமுதூட்டி, சீராட்டி வளர்த்துவந்தனர். இவரிவ்வாறாக; முன் அஞ்சியோடிய உமாதேவியார் பயந்தணிந்து, மீண்டும் பெருமான் இடப்பாகத்தில் வீற்றிருக்கும்பொழுது, முன் ஓடுங்கால் சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்கலாலுதிர்ந்த நவரத்தினங்களில், அவ்வம்பிகையின் சாயைபதிய ஒன்பது சத்திகள்தோன்றிச் சிவபெருமானைக் காதலித்துத் தனித்தனி கருப்பமடைந்தனர். அதைக்கண்ட உமாதேவியார் சினந்து, அக்கருப்பம் வெளிப்படாவண்ணஞ்சபித்தலும், அவர்

அச்சாபத்திற்கு அஞ்சி வெயர்த்தமையின், அவர்வெயர்வையி னின்றும் இலக்கம்வீரர்களுதிக்க, பின்னர் அம்பிகைவரத்தால் அவர் கருப்பத்தினின்றும் வீரவாகுதேவர்முதலிய * நவவீரரும் உதித்தனர்.

இங்ஙனமிருக்க, ஒருநாள் சிவபெருமான் அம்பிகையோடு இடபவாகனத்தி லாரோகணித்து, அச்சரவணப்பொய்கைக்கெ ழுந்தருளி, அங்கே திருவிளையாடலோடுவீற்றிருக்கும் குழந்தை களைக்காட்டியருள; அம்பிகை அதிகவிரைவோடு அடங்காஆசை யால் குழந்தைகள் ஆறையும் தம்முடைய திருக்கரங்களால் ஒருங்குசேர்த்தெடுத்து, ஆறுதிருமுகமும் பன்னிரண்டு திருக் கரங்களும் இரண்டு திருவடிகளுமுடைய ஒரு திருவுருவாய் விளங்கக்கண்டு மகிழ்ந்து, சிவபெருமான் திருக்கரங்களிலளித் தனர். அப்பெருமான் திருக்கரமேற்று கந்தனென்று திரு நாமஞ்சாத்தி, உச்சிமோந்து மகிழ்வடைந்து, மத்தியில் வைத் துக்கொண்டு கைலைக்கெழுந்தருளினர். பின்பு, குமாரக்கடவுள் தேவர்களும் முனிவர்களும் கண்டு ஆச்சரியமடையும்படி, பல வித திருவிளையாடல்களை இயற்றிக்கொண்டு ஸ்கந்தகிரியிலிருக் குங்கால், மேற்சொன்னசூரபதுமனுல் மொத்துண்டு துக்கசா கரத்திலே மூழ்கியிருந்த தேவர்கள் பின்னுமொருநாள் கைலை யிற்சென்று, தங்கள் குறைகளைமுறையிட்டுக்கொள்ள; சிவ பெருமான் தமதுகுமாரரான முருகக்கடவுளைநோக்கி, “சூர பதுமன்முதலிய அசுரரையெல்லாம்வென்று தேவர்கட்கு முன் போலவே தேவலோக உரிமையை யளித்து வருவாயாக.”

---

* நவவீரர்:—வீரவாகு வீரகேசரி வீரமகேந்திரர் வீரமகேச் சுரர் வீரபுரந்தரர் வீரராக்கதர் வீரமார்த்தாண்டர் வீராந் தகர் வீரதீரர் என்போர்; இவர், நவரத்தினங்களின்பெயரைக் கொண்ட மாணிக்கவல்லி தரளவல்லி புஷ்பராகவல்லி கோமே தகவல்லி வைடூர்யவல்லி வைரவல்லி மரகதவல்லி பவளவல்லி இந்திரநீலவல்லி என்பவரிடத்து முறையே உதித்தவர்.

என்று கடடளையிட்டு உச்சிமோந்து, மார்புறத்தழுவி, அம்பிகை யின் கரத்திலளிக்க; அவரும் அவ்வாறே தழுவி முத்தமிட்டு, ஆசீர்வதித்து அனுப்பினர்.

முருகக்கடவுள் அங்கிருந்துபுறப்பட்டு, வீரவாகுதேவர்முத லிய இலக்ஷத்தொன்பது வீரர்களும், விஷ்ணுமூர்த்திமுதலிய தேவ கணங்களும், இரண்டாயிரவெள்ளம் பூதகணங்களும், முனிவர்களும் புடைசூழ்ந்துதுதித்துவர, இத்திருமுல்லைவாயி லுக்கு எழுந்தருளி, **சுமந்யாபதீசுரர் சுமந்யாநாயகியையும்** தரிசித்து, சந்நிதிக்கெதிரில் மானசத்தால் ஒருதீர்த்தமுண்டாக் கி, அதில் ஸ்நானமுடித்து, தேவர்களும் முனிவர்களும் பூதக ணங்களும் பல்லாண்டிசைக்க, வீரவாகுதேவர் முதலிய தம் பியர் உபசாரவர்க்கங்களையேந்திநிற்க, சிவபெருமானையும் அம் பிகையையும் பூசித்துவழிபட்டனர். இங்ஙனம்வழிபடுங்கால், பெருமானும் தேவியும் களிகூர்ந்து பிரத்தியக்ஷராகி, "குமா ரனே! நீ அன்போடியற்றிய பூசனைக்கு மகிழ்ந்தோம்; இனி உனது எண்ணமும் முற்றுப்பெறும்; நீ தேவசேனாதிபதி என் னும் பெயரும்பெறக்கடவாய்." என்றருளிச்செய்து தமதுசத்தி சொரூபமாய்விளங்கும் ஓர் வேலாயுதத்தையும் மற்றும் அஸ் திரசஸ்திரங்களையும் தந்து கூறுவாராயினர்.

"குமாரனே! உலகத்திற்குப் பிதாமாதாவென்னும் இருமுது குரவர் சொரூபமாய் விளங்கும் நம்மை இத்தலத்திலே விபூ தி ருத்திராக்ஷ தாரிகளாய் வழிபடுபவர்களின் பிரபாவத்தை நாமே சொல்லவல்லமல்லோம்; நம்மைவழிபடாதவர் சகலகலை களினும் வல்லராயினும் ஒன்றும்அறியாத விலங்குகளுக்கு ஒப் பாவார்; நம்மை வழிபடுவோர் ஒருவிடயமும் அறியாதவராயி னும் சகலகலைகளினும் வல்லராவர்; அன்றியும், நம்மை வழிபடு வோர் நரர்களுக்குள்ளே நீசராயினும் சுரர்களுக்குள்ளும் மே லோராவர்; நம்மை வழிபடாதோர் சுரர்களுக்குள்ளே மேலோ

ராயினும் நரர்களுக்குள்ளும் கீழ்மையராய்ப் புலையருட்புலைய ராவர்; இது உண்மையே: இஃதல்லாமலும் எக்குலத்தராயினும் மகிழ்வோடு இலிங்கபூசனை புரிபவரை நாமெனமதிப்போர் தேவராய் நம்பதமேபெறுவர்: அவ்வண்ணஞ்செய்யாது சாதி குல முதலியவைகளைக் கணிப்போர் நரகராய்க் கீழ்ப்பதவியைப் பெறுவர்: இவ்வுண்மைகளையெல்லாம் விளக்கிக்காட்டும்பொருட்டே நம்மை நீவழிபட்டனை: இன்றுமுதல் இந்தக்ஷேத்திரம் **குமாரபுரி** என்றும் இத்தீர்த்தம் **மானஸதீர்த்தம் சுப்பிரமணியதீர்த்தம்** என்றும் பிரசித்தமடையும்: உனதுபெயரைச் சங்கற்பித்துக்கொண்டு இத்தீர்த்தத்தில் மூழ்கி நம்மைவழிபடுவோரிடத்தில் உன்னிடத்துவைத்த பிரீதிபோலவே இடையறாத பிரீதிவைப்போம்.'' என்று கட்டளையிட்டு அம்மூர்த்தங்களில் மறைந்தருளினார்.

பின்பு குமாரக்கடவுள் அதிகசந்தோஷத்தோடுபணிந்து, விடைபெற்றுக்கொண்டு, சர்வபரிசனங்களும் புடைசூழ எழுந்தருளிச்சென்று, தாரகனையும் கிரவுஞ்சமலையையும் சேதித்து, திருச்செந்தூரையடைந்து, அங்கு வீற்றிருந்துகொண்டு, வீரவாகுதேவரை சூரபதுமனிடம் தூதனுப்பியும், அவன் தேவரைச் சிறைவிடாமல் போர்க்குச் சந்நத்தனாதலையுணர்ந்து, மகேந்திரபுரியையடைந்து, சிங்கமுகன் முதலியோரையடித்து, சூரபதுமனோடு கடும்போர்புரியுங்கால், அவன் அதற்கு ஆற்றாதவனாய்க் கடலில் மாமரமாய்நிற்க; அதனை வேலாயுதத்தால் இருகூறு கட்பிளந்தனர். அவ்விருகூறும் சேவலும் மயிலுமாய்நிற்க; அவற்றைத் தாம் முன்புகொடுத்துள்ள வரத்தின்படியே கொடியும் வாகனமுமாகக்கொண்டு, திருப்பரங்குன்றத்திற்கெழுந்தருளி, இந்திரன்வேண்டுகோளின்படி கிரியாசத்தியாராகிய தெய்வயானையம்மையைத் திருமணம்புரிந்து, தணிகைக்கெழுந்தருளி, அங்கே இச்சாசத்தியாராகிய வள்ளிநாச்சியாரைமணந்து, ஸ்கந்தகிரிமுதலிய குன்றுதோறும் அன்பருக்கு அநுக்கிரகித்தலாகிய

திருவிளையாடல் புரிந்துகொண்டு எழுந்தருளி யிருக்கின்றார். என்று சூதமுனிவர் சொல்லிமுடித்து, பிருகுமுனிவர் வழிபட்ட சரித்திரத்தைக் கூறுவாராயினர்.

பிருகுமுனிவர் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருந்தவங்கொள் பிருகுதவ சித்தி யோடு மரியவுயிர் களைப் புரக்கு மவாமேற் கொண்டு, திருந்துமுல்லைப் பதியமர்ந்தே நியதி பூண்டு செய்வழிபாட் டினுக்குகந்து தேவ தேவன், விரும்புமணி மழைபெய்வித் தந்த ரத்தே வெள்விடையில் விரைந்தேக வெய்ய பஞ்சத், தருந்துணவு மன்பதைகட் களித்து மேம்பட் டமைத்ததவ சித்தியுற்ற தறைவ னோர்ந்தே.

நற்றவர்பரவும்நைமிசவன முனிவர்களே! பூர்வம் பிருகு முனிவர் தமது தவத்தைச் சித்திசெய்துகொள்ள விரும்பினவராய்க் காசியையகன்று, ஓங்காரம் விருபாக்ஷம் கூடலசங்கமேசம் நிவர்த்திசங்கமேசம் ஸ்ரீசைலம் சீகாளத்தி திருக்காளகிரி திருவாலங்காடு முதலிய திவ்யதலங்களைத் தரிசித்துக்கொண்டு, தொண்டைநாட்டுக்குத் திலகம்போலவிளங்கும் இத்திருமுல்லைவாயிலையடைந்து, அங்கு பெருமான் அம்பிகையோடுவீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கண்பெற்ற பெரும்பேறுகத் தரிசித்து, குமாரதீர்த்தத்தில்மூழ்கி விதிப்படி திரிபுண்டரஃபுனைந்து, அப்பொழுதே, தமதெண்ணம் சித்திபெற்றாற்போன்ற குதூகலத்தோடு கோயிலுட்புகுந்து, முல்லைவிநாயகனையும் பிரமநாதனையும் பிரமநாதநாயகியையும் வணங்கி, இருக்குவேதாதி ஸ்துதிகளைமொழிந்து, முருகக்கடவுள்முதலிய மூர்த்திகளைப்பரவி, மும்முறைப்பிரதக்ஷிணஞ்செய்து, வெளிவந்து சுத்தமான ஒருபுறத்தில் ஓர்தவச்சாலைஏற்படுத்தி, எம்பெருமானை இடை

விடாதுமனத்திலிருத்தி, கனி காய் கந்தம் சருகு சலம் முதலிய வைகளையும் நாளுக்குநாள் குறைத்துண்டு, வேனிலில் ஐந்தழலி லும், மாரியில் வெளியிலும், பனியில் நீர்நிலையினுமாகநின்று கடுந்தவம் புரிந்தனர். இப்படித் தவஞ்செய்வதை எம்பெருமா னுணர்ந்து, இமையவல்லியாரோடு தருமவிடையி லாரோகணி த்து, பிரமதகணங்களும் தேவகூட்டங்களும் முனிவர்குழாங்க ளும் தம்மைப்புடைசூழும்படிக் காட்சிதந்தருள; முனிவர் ஆனந் தங்கொண்டவராய் சாஷ்டாங்கதெண்டஞ்சமர்ப்பித்து, "ஆண வமலத்திற் கட்டுண்டுகிடந்த அடியேனையும் பொருட்படுத்தித் தனுகரணாதிகளை இருவினைக்குத்தக்கபடி அளித்துப் பக்குவம் வருவித்து, ஆட்கொண்டருளஎழுந்தருளிய பெரியோய்போற் றி." என்று பலவாறுதுதித்துநிற்க; பெருமான் திருவுளமகிழ்ந் து, "பிருகுவே! உனது அன்பிற்குஉவந்தோம்; உனக்கு வேண் டும்வரம்யாது?" என்று வினவியருளினர். முனிவர் "சுவாமீ! தமியேன் தேவரீரது திருக்காட்சிபெற்றபோதே பெருப்பே றெல்லாம் பெற்றவனாயினேன்; ஆயினும் எப்பொழுதும் தே வரீருடைய திருவடிக்கமலத்தியானமும், இனிவரும் பன்னிரண் டுவருட வற்கடத்தில் ஏழைகள் அன்னத்திற்கு அலையாவண்ண ம் இந்நகரத்திலே அன்னதானஞ்செய்யவும் வேண்டுகின்றேன்" என்று பிரார்த்தித்தார். இவ்வாறுகேட்ட முனிவருடைய நற் கருத்துக்குச் சிவபெருமான் சந்தோஷித்துப் புன்முறுவல்கோ ட்டி, ஒருயாமநேரம் அந்தக்ஷேத்திரத்தில் இரத்தினமழை வரு ஷிக்கும்படிச்செய்து, அவற்றைச் சேமித்துக்கொண்டு உயிர் களைப் பேணும்படி முனிவருக்கு ஆஞ்ஞாபித்துத் தேவர்கள் மலர்மாரிதூவ அச்சிவலிங்கத்தில் மறைந்தருளினர்.

பின்பு, அம்முனிவர் அவ்விரத்தினங்களையெல்லாம் கல்யாண தீர்த்தத்தில் சேமித்துவைத்துத் தமது தவத்தைச் சித்திசெய் துகொண்டிருக்கையில், கிரகங்களெல்லாம் துர்பிக்ஷம் வருவ தற்குத் தக்கபடி நிலைமாறிநிற்க; மின்னலோடு முழங்கி வரு

ஷிக்கும் மேகசாலங்களெல்லாம் மறைந்துவிட்டன. மரங்களெல்லாம் வாடியுலர்ந்தன. மருதமுதலிய நீர்வளமுள்ள நிலங்களும் பாலைநிலங்களாயின. கள்ளிநிழலில் காட்டானை ஒதுங்க நேர்ந்தன. அக்கொடிய வற்கடத்தில் தேசங்கடோறுமுள்ள பிரசைகள் அன்னமென்பதையறியாது எதிர்ப்பட்ட கந்தமூலங்களைப் பிடுங்கித்தின்ன முயன்றுர்கள். இதையறிந்தமுனிவர் அந்நகரவாசிகளே யல்லாமல் மற்றும் பலதேசவாசிகளையும் பறையறைவித்துக்கூவித் தாம் பெருமானிடம்பெற்ற இரத்தினக்குவைகளைக்கொண்டு அறுசுவையுணவருத்தியும், ஆடைமுதலியவற்றைவழங்கியும், தாய்போல உபசரித்து வந்தனர். முனிவர்களே! பெற்றதாயும் தன்குழந்தைக்குப் பாலருத்தாது வற்றல்மரம்போல் நிற்றற்குரிய அக்கொடியகாலத்து, மன்பதைகளை யாதொருதளர்வும்வாராமல் காத்துவந்த அப்பிருகுமுனிவர் கருணைக்கு யாதுஒப்பாகும். இவ்வாறு போஷித்துவரும் புண்ணியமிகுதியினுலேயே தம்முடையதவத்தை விர்த்திசெய்துகொண்டு வாழ்ந்திருந்தனர். கல்வியுள் ஞானமும், வேதத்துள் சாமமும், பொருப்புகளில் மேருவும், தருக்களில் தேவதாரும், மேதங்களுள் அசுவமேதமும், எங்ஙனம் உயர்ந்ததோ அங்ஙனமே தானத்துள் உன்னதமான அன்னதானத்தைப் பிரீதியோடு கடைப்பிடித்து நடத்திவருநாளில், கிரகங்களெல்லாம் நல்லநிலைமைகளையடைய; மேகங்களெல்லாம் திரண்டு மழையைவருஷித்தமையால், எந்நாடும் செழிப்படைந்தன. மனிதர்களும் தங்கள்தங்கள் நாடுகளையடையவிரும்பிப் பிருகுமுனிவருக்கு வந்தனம்வழங்கிச் சென்றுர்கள். முனிவர்களே! இந்த காரணத்தினுற்றுன் அந்நகரத்திற்கு இரத்தினபுரம் என்றும், சுவாமிக்கு இரத்தினபுரீசர் என்றும், தேவிக்கு இரத்தினநாயகி என்றும், தீர்த்தத்திற்கு இரத்தினதீர்த்தம் என்றும் பெயர்வழங்குகின்றன. என்றருளிச்செய்து, வசிட்டமுனிவர் வழிபட்டசரித்திரத்தை வகுப்பாராயினுர்.

வசிட்டமுனிவர் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்தமினற் றவத்தர்பலர் வேண்டு கோளா லருந்ததியின் கொழுநன்வட முல்லை யண்மிச், சிந்தையரன் றிருவடிக்கே சேர்த்திப் போதாற் றினம்போற்றித் தேவருல கத்த தாகுஞ், சந்தமுறுங் காமதே னுவைத்தான் பெற்றுத் தவத்தரொடுஞ் சேர்ந்துலகஞ் சாலப் பல்க, முந்துமகம் பலபுரிந்து மேன்மை பூண்ட முறையினைத்துந் தொடுத்தினிது மொழிவ னன்றே.

சஞ்சலமொழித்த தாபதர்களே! முற்காலத்திலே, பிரமதேவர் புதல்வராகிய வசிட்டமுனிவர் அருந்ததியென்னும் மனைவியோடு இல்லறத்தைக் குறைவற நடாத்திக்கொண்டு பலமுனிவர்சமூகத்தோடு வனத்தில் வசித்துவருங்காலத்தில், ஒருநாள் பிருகு பிசிங்கி உக்கிரசிலர் துருவர் நாரதர் சுமதி சுப்பிரர் அத்திரி ஆபஸ்தம்பர் முதலியமுனிவர்கள் தங்கள் குறைபாடுகளைச் சொல்லிக்கொள்ளுநிமித்தம் வசிட்டமுனிவருடைய ஆச்சிரமத்தையடைந்தார்கள். அவர்கள் வரவைக்கண்ட வசிட்டமுனிவர் இருக்கைவிட்டெழுந்து உபசாரமியற்றி, தக்கஆசனங்களில் எழுந்தருளுவித்து, ஒவ்வொருவரும் திவ்வியப் பிரபாவமுடையவர்களாதலால் தக்கவாறு புகழ்ந்து, "சுவாமிகளெல்லாம் ஒருங்குதிரண்டு அடியேனது சிறுகுடிலுக்கு எழுந்தருள என்ன தவம்புரிந்தேன்." என்று வியந்தனர்.

அதைக்கேட்ட முனிவர்கள் "வசிட்டரோ! தேவரீர் தவத்தினும் ஞானசித்தியினும் மேம்பட்டமையன்றி, யாகாதி கர்மங்களினும் சிறந்திருப்பதால் தம்மால் முடித்துக்கொள்ளவேண்டிய ஒருகருமத்தை உத்தேசித்துவந்தேம். அதாவது, சிவபெருமானையே தலைவராகப்பெற்றதும், அக்கடவுளுக்கும் விஷ்ணு

மூர்த்திமுதலியதேவர்களுக்கும் பிதிர்களுக்கும்பெருமகிழ்வளிப்பதும், உலகத்தில் மழையை வருஷிக்கச்செய்வதும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் பெறுதற்கேதுவாகிய சகலபொருள்களையும் விர்த்திசெய்வதும், தானம் தவமுதலிய சற்கருமங்கள் பலவற்றிலும் சாலச்சிறந்ததும், யாவர்க்கும் இகபரமோக்ஷமென்னும் மூன்றையும் எளிதிற்றந்தளிப்பதுமாக வேதத்திற்பிரதிபாதிக்கப்படும் யாகங்களை நாம் பலகாலும் செய்துவரவேண்டியிருத்தலின், ஒவ்வொருயாகத்திற்கும் வேண்டுந்திரவியங்களுக்காக நமது நியமங்களைக் குறைத்துக்கொண்டு நாட்டிற்சென்று, அரசர்களைக் கண்டு, வேண்டுவனகூறி இரக்கநேர்கின்றது; இது பெருங்குறைவாக இருக்கின்றபடியால் அதுவிலகுமாறு தேவரீர் திருவுளம்பெறுதலேயாம். இதுதவிர எங்கள்கருத்துவேறில்லை." என்று விண்ணப்பித்துக்கொண்டார்கள்.

வசிட்டமுனிவர் அதுகேட்டு, மிகச்சந்தோஷத்தோடு முனிவர்களைநோக்கி, "சர்வசமனும் சாந்தனும் பாசரகிதனும் பரமபதியாய் விளங்கும் சிவபெருமானை அன்போடு வழிபடுவோர் எத்தொழிலையும் எளிதில்முடிக்க வல்லவர்களாகின்றார்கள். ஆதலின் அப்பெருமானை வழிபட்டே இதனையும் முடித்துக்கொள்ளலாம்; நீங்கள் முயன்றால் முடியாதகாரியமும் ஒன்றுண்டோ? ஆயினும், என்னை உத்தேசித்து வந்தமையால் யானே இக்கைங்கரியத்தை மேற்கொள்ளுகிறேனென்று, வந்தனபூர்வமாகச் சொல்லி அவர்கட்கு விடைதந்து அனுப்பிவிட்டுப், புறப்பட்டு, சித்திக்ஷேத்திரமாகிய இந்த யூதிகாபுரத்தைச்சேர்ந்து, இரத்னபுரேசரையும் இரத்னநாயகியாரையும் சேவித்து மனக்களிப்போடு தினமும் இரத்னதீர்த்தத்தில் ஸ்நானம்புரிந்து, விபூதி ருத்திராக்ஷ மாலிகாலங்கிருதராய் ஊணுறக்கமின்றி, விரதம்பூண்டு, சிவபெருமானைப் பூசிப்பாராயினர்.

இவ்வண்ணம் சிலநாள் பூசித்துவர; ஒருநாள் கருணையங்கடலாகிய சிவபெருமான் பிரசன்னராகி "வசிட்டனே! உனது பூசனையின் உறுதியைநோக்கி மனமகிழ்ந்தோம்; இந்த க்ஷேத்திரத்தில் நம்மைச் சிரத்தையோடு பூசிப்போர் அதிகசுலபமாகவே நம்மைப்பெறுவார்கள்; நாம் அவர்கட்கு எளியவராகவே அவர்பக்கலி லிருப்போம்; நீ விரும்பியவரத்தைக் கேட்பாயாக." என்று கட்டளையிட்டருளினர். அப்போது வசிட்டமுனிவர் ஆநந்தமேலிட்டுச் சிரத்தில் அஞ்சலிமுகிழ்த்து, என்புநெக்குருகவும், உரோமஞ்சிலிர்க்கவும், அழலிடைப்பட்ட நெய்யைப்போல மனமுருகவும், மலையாறு பெருகினாற்போல இடையறுது அன்புநீர் கண்வழிப்பாயவும், உடலம் நடுங்கவும், மொழி தழுதழுக்கவும், பரவசப்பட்டு, அடியற்ற தாருவைப்போல நிலமுறவிழுந்து வணங்கியெழுந்து, "ஹரஹரகங்காதர! நீலகண்ட! சம்போ! சங்கரா! தயாநிதே!" என்று துதித்து, "அடியேனியற்றும் யாகாதிகருமங்களுக்கு வேண்டுவன முட்டின்றியளிக்கவல்லதும், உலகத்தார் வேண்டுவனவற்றை வேண்டியவாறே தந்தளிப்பதுமாயுள்ள ஒரு அரியவஸ்துவைப் பாலித்தருளல்வேண்டும்." என்று பின்னும்பணிந்தார். அதைக்கேட்டருளிய சிவபெருமான் புன்முறுவல்கொண்டு, "முனிவனே! தேவரக்ஷணார்த்தம் விஷ்ணுவானவர் பாற்கடலைக் கடையப்போகின்ருர்; அதினின்றும் முன் துருவாசமுனிவன் இந்திரனுக்கிட்ட சாபங்காரணமாகப் பாற்கடலில் மறைந்துபோகிய சிந்தாமணி ஐந்தரு அமுதமுதலியவற்ருேடு காமதேனுவென்னும் பெயருடைய ஒருபசுவும் உண்டாகும்; அப்பசுவை, உனது வசமாக்கிக்கொண்டு, அது உதவும் அவிசுகளால் யாகாதிகளைக் குறைவறநடாத்தி, உலகத்தைக்காக்கக்கடவாய்; உனக்கேயன்றி மற்றை முனிவர்முதலியோர்கட்கும் யாகாதிகட்கு உரியவற்றையும் மற்றும் வேண்டுவனவற்றையும் அது அளிக்கும்." என்று ஆஞ்ஞாபித்து, அச்சிவலிங்கத்திலேயே கரந்தருளினுர்.

பின்பு அவ்வசிட்டமுனிவர் பெருமகிழ்ச்சிகொண்டு, அந்த க்ஷேத்திரத்தை விட்டுப்பிரிய மனமில்லாதவராய்ச் சிலதினம் வசித்து, பிரியாவிடைகொண்டு, தமதுவனமடைந்து, எதிர்நோக்கியிருந்த முனிவர்களைக்கண்டு, சந்தோஷங்கூறி, பெருமானுடைய கட்டளைப்படி காமதேனுவரவை எதிர்நோக்கிக்கொண்டுவசிக்குநாளில், தேவர்களும் அசுரர்களும் தாம் இறவாமையின் பொருட்டு, அமுதம் நுகரவேண்டிப் பிரமதேவரோடு விஷ்ணுமூர்த்தியையடைந்து, விண்ணப்பித்துக்கொள்ள ; அவர் மந்தரமலையே மத்தாகவும், சந்திரனே மத்தின் தம்பமாகவும், வாசுகியே கயிறாகவும், பாற்கடலே தாழியாகவுங்கொண்டு கடையும் பொழுது, அம்மந்தரமலை அழுந்துதல்கண்டு தாமே ஆமையுருவாகி அதனைமுதுகிற்றாங்கினர். அப்பால் ஒருபுறம் தேவர்களும் மற்றொருபுறம் அசுரர்களுமாகஇருந்து கடையுங்கால், மந்தரமலைசுழலாதுநிற்றலின் அவர்கள் வருந்தியிருக்குந்தருணத்தில் அங்கே தனது ஆன்மார்த்தமாகிய சிவபெருமானை ஆராதித்தற்பொருட்டுத் தெய்வகதியாகவந்த வாலி அவர்களைக்கண்டு வணங்கி, அவர்கள் வேண்டுகோளின்படியே வாசுகியின்பணத்தையும் வாலையும் இருகரத்திலும்பற்றி எளிதிற்கடைந்தனன். அது சகிக்கலாற்றாது வாசுகி விடத்தைக்கக்க; அது சுவாலித்து அண்டங்களெல்லாம் நீறாகும்படி எழக்கண்டு, இது சிவபெருமானுடைய அனுக்கிரகத்தைப் பெறாத்தீங்கால் விளைந்ததெனத் துணிந்து, விஷ்ணுவாதிதேவர்கள் அவ்விஷவேகத்தாற் கருகிய உடலோடு திருக்கைலையையடைந்து, சந்நிதியில் முறையிட்டனர்.

பெருமான் யாவும் அழியாவண்ணம் திருவருள்சுரந்து, அவ்விஷத்தையுண்டருளிக் கிருபைபாலிக்க; அப்பெருமான் அனுக்கிரகத்தால் மீட்டும் திருமால் கடைந்துழி முன்னர்ச் சுரையுண்டாக; அதனையுண்ணாது வெறுத்தவர் அசுரரும், உண்டவர் சுரரும் ஆயினர். பின்னர், அதினின்றும் உண்டாகியவற்றுள்

ஐராவதமென்னும் யானையையும், உச்சயிச்சிரவாவென்னும் குதிரையையும் ஐந்தரு காமதேனு சிந்தாமணி அமுதம் அரம்பையர் முதலியபொருள்களையும், இந்திரன்முதலிய தேவர்களுக்கு உரிமையாக்கிவிட்டு, இலக்குமியையும் கவுத்துவத்தையும் தாம்கொண்டு திருமால்சென்றனர். அதன்பின்னர், தேவலோகத்திற்கு உரிமைபூண்ட அக்காமதேனு சிவாக்கினையின்படியே வசிட்டமுனிவருக்கு வேண்டுவனகொடுத்துவர; அவர் யாகாதிகன்மங்களால் உலகத்தை விர்த்திசெய்தனர். ஆகையால், இந்த இரத்தினபுரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் பசுக்களாகிய ஆன்மாக்களுக்குக் கர்த்தாவாய் இருப்பதனாலுமல்லாமல், வசிட்டமுனிவருக்குப் பசுவையளித்ததனாலும் பசுபதீச்சுரரெனப் பெயர்பெற்று, சித்ரமத்யாநாயகியாரோடு விளங்குகின்றனர். என்று நைமிசவனமுனிவருக்கு உபதேசித்துச் சந்திரன் வழிபட்டசரித்திரத்தைச் சாற்றுவாராயினர்.

சந்திரன் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தங்குபுகழ்க் குருமனைவி தாரை யென்பா டணைமருவிப் பெற்றகொடுஞ் சாப நீங்கத், திங்கடிரு முல்லைநக ரெய்திச் சித்தி தீர்த்தத்திற் குடைந்தாடித் தேவ தேவன், பங்கயபா தங்களருச் சித்தோர் தீர்த்தம் பாங்கினெளிர் தரவகுத்துப் பாவம் பாற்றிப், பொங்குகய ரோகமொழித் தருள்கைக் கொண்ட புரைதபுகா தையைப்புகல்வன் புகலு மாறே.

மும்மலமொழித்தமுனிவர்களே! அத்திரிமுனிவரின் புத்திரனாகிய சந்திரன் தேவகுருவாகிய பிரகஸ்பதியினிடம் வேதாத்தியயனம் செய்துகொண்டு பிரமசரியமனுஷ்டித்து வருங்கால், ஒருதினம் பிரகஸ்பதி இந்திரனுக்கு யாகமியற்றுதலினி

மித்தம் தேவலோகஞ்செல்லவேண்டி, அவனைநோக்கி, "சந்திரனே! நீ நமது சிஷ்யர்களுக்குள் மிகத்தேர்ந்தவனாக இருக்கின்றாயாதலின் உன்தாயான எமது பத்தினியைப் பாதுகாத்துக்கொண்டும், நமதாச்சிரமந்தேடிவரும் அதிதிகளையாதரித்துக்கொண்டும், யாகாதிகளுக்கான சமத்துமுதலியவற்றைச் சேகரித்துக்கொண்டும், இருப்பாய்: நாம் சிலநாளுள் இங்குதிரும்புவம்." என்று ஆஞ்ஞாபித்துத் தம்மைத்தெண்டனிட்டுநிற்கும் சிஷ்யசமூகங்கட்கு ஆசீர்வதித்துப்போயினர். ஆசாரியர் நியமனப்படியே சந்திரன் அதிஜாக்கிரதையாக நடந்துகொண்டுவரும்போது குருபத்தினியாகிய தாரையென்பவள், அச்சந்திரனைத் தனித்துக் கண்டபோதெல்லாம் அவனது அழகென்னுங் கடலில் மூழ்கிக் காமவெதுப்படைந்து, நிலைதெரியாத தடுமாற்ற முடையளாய், ஒருநாள் சந்திரன் தனித்துள்ளஇடத்தையடைந்தனள்.

ஆசிரியரது பத்தினியார் வருகையைக்கண்டசந்திரன் எதிர்வந்துவணங்கி, "அம்மணீ! இங்கு தேவரீர் தனித்துவர யாதுநேர்ந்தது?" என்று வினவினான். இங்ஙனஞ்செய்த சந்திரனிடத்துச் சற்று வெறுப்புடையளான தாரை தன்னெண்ணத்தைக் குறிப்பில்வெளிப்படுத்தவே, அவன் இருசெவியும் பொத்திக்கொண்டு, "அந்தோ! இத்தகைய கொடியவசனம் கேட்கவும் நேர்ந்ததே! சிவமே! இது யாதுபாவம்." என்று சிந்தித்துத் தாரையைநோக்கி, "அம்மா! இந்தவிபரீதபுத்தி தேவரீருக்கு எங்கிருந்துதித்தது; நான் அழகுடையவனென்று பலவாறு வர்ணிக்கின்றீர்; தேவகுருவான எனதாசிரியர் என்னழகினும் எவ்வளவோ மேம்பட்டவர்; அங்ஙனம் அவர் அழகில்லாராயினும் கணவனையன்றிப் பிறருருவைக் கனவிலும் உம்மைப்போல்பவர் ஞாபகம்பண்ணலுமாமோ? இத்தகைய துர்ச்சிந்தனையுடையோர் பிசாசவடிவம்பெற்று, நெடுங்காலம் படாதஅவதிகளெல்லாம் படுவரென்று எனதாசிரியர் கற்பித்திருக்கின்றார்;

இது தங்கட்கும் முன்னமே தெரிந்திருக்குமே? இவ்வாறு நீர் நினைத்ததற்கும் யான் இவ்வசனம் கேட்டதற்குமே தீர்விலாது வெகுகாலம் நரகப்பிராப்தமாகும்; தெரியாதியற்றும் பாவத்திற்கே தீர்வுண்டல்லது, தெரிந்தியற்றும் இத்தகைய மகாபாதகங்கட்குத் தீர்வில்லையே! இது தக்கவார்த்தையுமன்று: தக்கசிந்தையுமன்று: இனி இப்படியான கெட்டநினைவை ஒழித்திருக்கவேண்டுகின்றேன்." என்று பலவாறு உறுதிவசனங்களைக் கூறிவணங்கினன்.

இவற்றையெல்லாங் கேட்ட தாரையானவள், "ஓ சந்திரனே! உன்னை மிகவும் என்மனதில் வியந்திருந்தேன்; உன்புத்தியையும் தைரியத்தையும் கமரிற்கவிழ்த்தனை; காமரச வல்லவனாயிருப்பாயென்ற என்னம்பிக்கையை வீணாக்கினை; காமக்கடலில் மூழ்கிசிற்கும் என்னை உன்னுடைய கலவியென்னுந் தெப்பத்தால் கரையேற்றிப் பின்பு கூறுவதுகூறுது, பேடிபோல் நீ படித்த ஏட்டின்படிப்பை ஓதவந்தனை; என் இந்திரியங்களெல்லாம் உன் அழகென்னும் ஆகாரத்தையே விரும்பிசிற்கின்றன; நீ எவ்வித கலைகளையோதினும் நான் உன்னைவிட்டுப்பிரியேன்." என்று பித்தங்கொண்டவள்போலப் புலம்பிக்கொண்டு மேல்விழுந்து வலுவிற்றழுவினள். சந்திரன் எவ்விதமுயற்சியினும் விலக்கிக்கொள்ளக் கூடாதவனாயிருந்தபடியால், அச்சமும் நாணமும் தன்னுயிரைத்தின்னும்படித் தான் அவளுடன் கலந்திருந்தனன். சிலநாளில் ஆசிரியராகிய பிரகஸ்பதியார்வந்து, நாயகியின் உபசாரங்களையும் சிஷ்யர்களுடைய வந்தனங்களையும் பெற்றபின், நடந்துள்ள விஷயத்தையறிந்து, கடுங்கோபங்கொண்டு, சந்திரனைநோக்கி, "ஓ சந்திரனே! உன்னை யான் மதித்திருந்தமதிப்பை முற்றும்போக்கிக்கொண்டதுமல்லாமல், அடாதகாரியத்திற்கும் உடன்பட்டாய்; நீ இதுமுதல் கயரோகனுகக்கடவாய்." என்று சாபமிட்டுத் தமதாச்சிரமத்தைவிட்டு நீக்கினர்.

அக்கடுஞ்சாபம்பெற்ற சந்திரன் குருவைவணங்கி, "எம்பெருமானே! யான் கனவிலும் விரும்பாதுநின்ற இவ்விஷயத்திற்குப் பாத்திரனானது என்னூழ்வினையேயல்லது வேறல்ல; இதுமுற்றும் தேவரீருடைய திருவுளத்தே வெளியாகும்; இக்கடுஞ்சாபத்தை யான்சகித்து உயிர்வாழத்தரியேன்; திரிலோகங்களும் பெரும்பாதகன் இவனெனச் சொல்லும்படி, யான் இப்பொல்லாச்சரீரத்தையேற்றதே போதுமானதண்டனையாகும்; இதற்குவிமோசனம் அருளல்வேண்டும்." என்று தண்டாகாரமாகவிழுந்து நமஸ்கரித்துக் கண்ணீர்விட்டனன். அவன் வருத்தத்தைக்கண்ட பிரகஸ்பதி சாந்தகுணராகி, "என்சாபம் எளிதில் விலகத்தக்கதல்ல; ஔதும்பர க்ஷேத்திரத்திற்கும் *பலிதாய க்ஷேத்திரத்திற்கும் மத்தியில் யூதிகாபுரமென்னும் சர்வசித்திக்ஷேத்திரமொன்றிருக்கிறது; அங்கடைந்து, நியமம்பூண்டு, எம்பெருமானைப்பூசிக்கில், அவர் அனுக்கிரகத்தால் இது விலகும்." என்று பிராயச்சித்தமுங் கூறியருளினர்.

அதைக்கேட்ட சந்திரன் அலைகடலில் கரைகாணாத மாலுமிக்குத் தான்குறித்துச்சென்ற தேசத்தின்கரை எதிர்தோற்றினாற்போலக் களிப்படைந்து, அந்தமாலதீபுரத்தை அப்போதேசேர்ந்து, குமாரதீர்த்தத்தில்மூழ்கி, விதிப்படி சிவபெருமானைப் பூசித்துவர; பசுபதீச்சுரர் காளகண்ட சதுர்ப்புஜ திரிநேத்திரதாரியாய் விடையிவர்ந்து பெருமாட்டியுடன் காட்சிதந்தருளினர். அதுகண்டசந்திரன் பன்முறைவணங்கி, என்புருகப் பத்தியோடுநின்று, "கர்த்தனே! கடைப்பட்டவனும் அதிபாதகனுமாகிய அடியேனை ஆண்டருளுவார் ஒருவருமில்லையென்றே தேவரீர் கருணைபாலித்ததுபோலும்: என்னிடத்தும் வைத்த இக்கருணையை என்னென்று புகல்வேன்; தேவரீரது பெருமையை

---

* இத்தலமான்மியம் இப்புராணஇறுதியில் சுருக்கி எழுதப்படுதலில் ஆண்டுக்காண்க.

நானே புகழத்தக்கவன் என்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்த னன். அப்போது, பெருமான் கடாக்ஷமுடையவராய், "சந்தி ரனே! உன்பூசையை அங்கீகரித்து உன்பாவத்தை விலக்கி னோம்; உன்கயரோகம் இத்தீர்த்த ஸ்பரிசத்தாலேயே ஒழிந் தது; இனிச் சுகமுற்றுவாழ்வாயாக." என்று அநுக்கிரகித்து அந் தர்த்தானமாயினர். சந்திரன் மாசுகழிந்த மணியைப்போலச் சுத்தனுகித் திருக்கோயிலுக்குத் தக்ஷிணத்தில் சந்திரபுஷ்க ரணி என்று ஒருதீர்த்தமுண்டாக்கிப் பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு, தன்னுலகமடைந்தனன். என்று உபதேசி த்து அச்சுவினிமுதலிய நக்ஷத்திரங்கள் வழிபட்டசரித்திரத் தை நவிற்றுவாராயினர்.

அச்சுவினிமுதலிய நாள்கள் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெண்மதியோன் மனைவியரோ ரிருபா னேழு விண்மீனும்
வனிதையர்தம் பிதாவாற் சாபத், தண்மையுறக் கணவனைச்
செய் தீமை தீர்ப்பான் றடமுல்லைத் தலமணுகித் தக்கோ ருள்
ளப், பெண்மயிலை மடப்பிடியை யிமவான் றந்த பெருமாட்டி
தனைப்பேணிப் பேறு பெற்றே, யண்மையின ராய்த்தலைவ னோ
டு வாழ்ந்த வருட்சரித மியம்பிடுவ னன்பு கூர்ந்தே.

சாந்தமிக்க தபோதனர்களே! பிரமதேவருடைய குமாரர்க ளான புலஸ்தியர் கிரது பிருகு அத்திரி மரீசி புலகர் வசிட்டர் அங்கிரா தருமர் தக்கன் என்னும் தசப்பிரமாக்களுக்குள்ளே தக்கனென்பவன் ஒருநாள் தனது தந்தையைநோக்கி, "பிதா வே! உலகத்தில் முத்தொழிலியற்று மூவருள் முதற்பொரு ளாவார் யாவர்; அவரெத்தன்மையர்." என வினவுங்கால்,

பிரமதேவர் நகைத்து, "மைந்தனே! எமக்கும் சர்வதேவர்கட்கும் சர்வபுவனங்கட்கும் நாயகராய் விளங்குபவர் சிவபெருமான் ஒருவரே; அவரே உத்தமர்; அவரே * தன்வயத்தனுதல் முதலிய எண்குண சகிதர்; ஆன்மாக்களிடம்வைத்த காருண்ணியத்தால் சிருஷ்டியாதி கிருத்தியங்களை நடாத்தற்குக் காளகண்ட சதுர்ப்புஜ திரிலோசன தரராய்க் கைலைமலையில் வீற்றிருந்துகொண்டு, அன்பர்களுக்கு அருள்செய்கின்றார்; அத்தகைய பெருமானை நீயும் வழிபடுவையேல் சர்வாபீஷ்டங்களைப் பெற்று, சிரஞ்சீவியாய் வாழ்வாயென்று பணித்தனர்.

அதுகேட்ட தக்கன் மனக்களிப்போடு அங்ஙனமே செய்வேனென்று பணிந்து புறப்பட்டு, மானஸதீர்த்தக் கரையையடைந்து, ஆயிரவருடம் கடுந்தவம் புரியுங்கால், பெருமான் வெளிவந்து, "தக்கனே! உனது தவத்திற்கு மகிழ்ந்தோம்; விரும்பினதுகேள்." என்று கட்டளையிட்டனர். அப்பொழுது அவன் வணங்கி அஞ்சலியத்தனாகி, "தெய்வநாயகரே! சர்வலோகங்களும் எனது சிருஷ்டியிலடங்கி நடக்கவும், அம்பிகை எனக்குத் திருமகளாக அவதரிக்கவும் தேவரீர் எனக்கு மருகராகித் திருமணமுடிக்கவும் வேண்டும்." என்று பிரார்த்தித்து, அங்ஙனமே வரம்பெற்று, அரசுபுரிந்துகொண்டு வேதவல்லியென்னும் பாரியாளோடு வாழுநாளில், ஆயிரம்பிள்ளைகளைப்பெற்றுத் தான் முன்பு தவம்புரிந்த மானஸதீர்த்தத்தையடைந்து, சிருஷ்டித் தொழிலைவிரும்பித் தவம்புரியும்படி அனுப்பினான். அவர்கள் நாரதர் கற்பித்தபடியே சிருட்டித்தொழிலைவெறுத்து, அருந்தவம்புரிந்து, சிவபெருமான் திருவடிநீழலையடைதலும், தக்கன்

---

* எண்குணங்களாவன:—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

மனம்புழுங்கிப் பின்னும் ஆயிரம்பிள்ளைகளைப்பெற்று முன்னைய படியே தவம்புரிய அனுப்ப; அவர்களும் நாரதர் உபதேசப்படியே முத்தியையடைந்தார்கள். இதையறிந்ததக்கன் கடுங்கோபங்கொண்டு, நாரதனை ஓரிடத்தும் தங்காது அலையும்படிச் சபித்து, பிள்ளைகளைப் பெறுவதால் பயனின்றெனமதித்து, இனிப் பெண்களைப்பெற்றுச் சிருட்டிகளை விருத்திசெய்வேனெனக்கருதி, இருபத்துமூன்றுபெண்களைப் பெற்று, தருமன் முதலிய முனிவர்கட்குப் பத்தினிகளாக்கினன். பின்னும் அச்சுவினிமுதலிய இருபத்தேழுபெண்களைப்பெற்று, அப்பெண்களைச் சந்திரனுக்குப் பாணிக்கிரகணஞ்செய்வித்து, "சந்திரனே! உன்அழகிலும்மேம்பட்ட என்புத்திரிகள் இருபத்தெழுவரையும் சமமாகநினைத்து, இன்பநுகர்ந்து வாழக்கடவாய்." என்று நியமித்தனன்.

அவ்வாறே அவர்களோடு சந்திரன், இன்பமனுபவித்து வருங்காலத்து, உரோகணியி னிடத்தும், கார்த்திகையி னிடத்தும், விசேஷ காதல்வைத்திருப்பதைத் தெரிந்த மற்றைப்பெண்கள் சகியாதவர்களாய்த் தமது தந்தையிடஞ்சென்று, முறையிட்டுக்கொண்டார்கள். அதுகேட்ட தக்கன் மிக்ககோபங்கொண்டு, நம்மை இச்சந்திரன் சற்றும்மதியாதவனாகி நமதாக்கினையையும்மறந்து, அலக்ஷியஞ்செய்தானெனமுனிந்து, சந்திரனையழைத்து, "நீ சற்று அழகில்மிக்கவனென்று எமது அருமைமக்களை உனக்குக்கொடுக்க; எல்லோரையும் உன்காதல் மனைவியர்களென்று கருதாது, பக்ஷபாதமாக ஒழுகினை; நீ உன் அழகின் செருக்கினால் இப்படி அவமதித்தமையால், இன்றுமுதல் உன்னுடைய அழகிற்கேதுவாகிய கலைகள் நாளுக்குநாள் தேய்ந்துபோகக்கடவதென்று பின்விளைவு நோக்காது, சபித்துவிட்டனன்." அச்சாபமேற்ற சந்திரன் மிக்கவருத்தங்கொண்டு, தினமும் ஒவ்வொருகலையாகத் தேய்வடைந்து, அழகுகுன்றி ஒற்றைக்கலைவடிவாகி, மிகக்கவன்ற உள்ளத்தனாய்ப் பிரமதேவனை

யடைந்து முறையிட்டு, அவர் கற்பித்தவாறே திருக்கைலையைச் சேர்ந்து, சிவபெருமானை வணங்கி வருந்துகிற்க; பெருமான் அச்சந்திரனுக்குத் திருவருள்பாலித்து, அன்றுமுதல் தமதனுக்கிரகத்தால் உலகத்திலே சுக்கிலபக்ஷப் பிரதமைமுதல் நாளுக்குநாள் ஒவ்வொருகலைவளர்ந்து விர்த்தியையடையவும், தக்கன் சாபத்தால் கிருஷ்ணபக்ஷப் பிரதமைமுதல் ஒவ்வொருகலை குறைந்து தேய்வையடையவும், தமதுதிருமுடியில்மாத்திரம் அடைக்கலமாகச் சேருங்காலுள்ள அவ்வொருகலையோடே அச்சாபந்தொடராது என்றும் ஒருதன்மையாகவிளங்கவும், வரமளித்துத் தரித்தருளினர்.

இங்ஙனமிருக்க, கார்த்திகையும் உரோகணியும் தவிர மற்றை இருபத்தைந்து பெண்களும், "நமது நாயகனுக்கு நேர்ந்தசாபத்திற்குக் காரணம் நாமேயல்லவோ?! இது கற்பினிலக்கணமல்லவே! நாயகன் ஒழுகும்வழி ஒழுகுதலே நாயகிக்குக் கடனல்லவோ? கணவன் வருந்தும்படி ஒருகாரியம் விளைத்தவள், அடைவது ரௌரவநரகமல்லவோ? சாமானிய இன்பத்தைமுன்னிட்டு இனியடையும்படியான பேரின்பத்தைக் கையிழந்தோமே!" என்று கண்ணிழந்தபின் சூரியநமஸ்காரம் செய்வதுபோலப் பலவாறு சிந்தித்து, பதியைவிரோதித்த பாவம்விலக அம்பிகையைப் பூசிப்பதே கடனெனத்துணிந்து, இந்த மாலதீவனம் அடைந்தார்கள். அதுகண்ட கிருத்திகை உரோகணியும், "நாயகனுக்கு இவ்வளவுகொடுமை நேருவதற்குக் காரணம் நாமாயினதுந்தவிர நம்முடைய சகோதரிகட்கும் வஞ்சகத்தை விளைத்தவரானோம்; இம்மகாபாதகம் நம்மைவிட்டுத் தொலையுமாறு நாமும் அம்பிகையைப் பூசைசெய்வோம்." என்று இத்திருமுல்லைவாயிலையே அடைந்தார்கள். ஆகஇருபத்தெழுவரும் குகதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தினமும் நியமமாக மஞ்சள் குங்குமம் சுகந்த புஷ்பமுதலியவற்றால் மாலதீவனநாயகிக்குப் பிரிதிவிலையும்வண்ணம் பூசித்துவருங்கால், அத்தேவியார் காட்சி

தந்தருள; வியப்புடையவர்களாய்ப் பிரதக்ஷிணநமஸ்காரஞ் செய்து நின்றனர். அம்பிகை அவர்களைக்கடாக்ஷித்து, "நக்ஷத்திரங்களே! உமது தவத்திற்குமகிழ்ந்தோம்: இத்தலத்திலே நமதுதிருவடியில் ஒருபத்திரம் இட்டவர்களையும் தேவர்களாக்கச் சித்தமாகஇருக்கின்றோம் : உங்கட்கும் பர்த்தாவிஷயமாக வந்த பாவத்தையொழித்தோம்: நீங்களும் சுத்தரானீர்கள்; உங்கள் நாயகனுகிய சந்திரனும் நமது நாயகராகிய மாலதீவனநாதனை முன்பூசித்துக் கயரோகமும் குருபத்தினியைச்சேர்ந்த கொடும்பாதகமும் விலக்கிக்கொண்டனன்; இனி, உமது கணவனேடு சுகமாகவாழ்ந்து, இறுதியில் நமதுலகமடையக்கடவீர்கள்." என்று கட்டளையிட்டு அம்மூர்த்தத்திலேயே மறைந்தருளினர். அவ்வாறே அவ்விருபத்தேழ்வரும் தமதுலகஞ்சென்று இன்பநுகர்ந்து வாழ்ந்தனர். என்றுணர்த்திச் சூரியன்வழிபட்டசரித்திரத்தைத் தொகுத்துக்கூறுவாராயினர்.

சூரியன் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏதமுறுந் தக்கன்மலே வில்வி யாகா யிகந்துசெயு மிட்டிதனி லெய்து மெய்ம்மைப், போதமுறுந் ததீசிபுகல் புந்தி கொள்ளாப் புலவர்களுட் கண்ணிழந்த பகனென் வெய்ய, சோதிமிகு சுடரவன்முல் லேத்த லத்திற் றுதைந்தமலர்த் தடமொன்று தொட்டுச் சின்னு, ளாதிமல ரடிபரவி நிந்தை கேட்ட வகத்தினைப்போக் கியபரிசிங் கறைவன் மாதோ.

முனிசிரேஷ்டர்களே! பிரமபுத்திரனுகிய தக்கனென்பவன் தான் சந்திரனுடையகலைகள்குறையும்படி அவனுக்கிட்ட சாபத்தைச் சிவபெருமான் மாற்றி, அவனைத் திருமுடியிற் றரித்த

தைக் கேள்வியுற்று, இச்சிவன் நமதுசாபத்தை விமோசனஞ் செய்தானல்லவா? என்று சினமூளும்பொழுது, அங்கிருந்த புலகமுனிவர் அவனைப்பார்த்து, "ஓ தக்கனே! சிவபெருமானிடத்து உன்கோபஞ் செல்லுமா? உனக்கடங்கிநிற்கும் சாமானிய தேவர்கள்போலவே தேவதேவனை சிவபெருமானையும் நினைத்தாய்போலும்; 'வலியவனைக் காய்ந்தவன் மலையைக்கல்லிய கோல்போலாவான்' என்பதையும் உணராயோ?" என்று தக்கவாறு கூற; ஒருவாறு கோபந்தணிந்து, பின்பு தன்பால் அவதரித்த அம்பிகையைச் சிவபெருமானுக்குத் திருமணமுடித்தனன். அந்நாளில், அப்பெருமான் தனது அனுமதியின்றி அம்பிகையை உடன்கொண்டுமறைந்ததும், தான் கைலைக்குச் சென்றபோது தன்னைமாதுலனென்று கருதி மரியாதை செய்யாதிருந்ததும், தனக்குக் குறைவாகநினைத்து, அதுகாரணமாக மீட்டும் கடுங்கோபங்கொண்டு, சிவபெருமானைப் பலவாறு நிந்தைகூறி, யாகத்தலைவராய் விளங்கும் அக்கடவுளுக்கு யாகத்தில் அவிர்ப்பாகம் கொடாமலே நான் ஒருயாகமியற்றுவேனென்று துணிந்து, சர்வதேவசமூகத்தோடே ஒருயாகஞ்செய்ய ஆரம்பித்தனன்.

அத்தக்கனுடைய ஆக்கினைக்கு அஞ்சிச் சர்வதேவர்களும் ஒருங்கு திரண்டுவந்துசேர்ந்தார்கள். அக்காலத்திலே தக்கனது வேண்டுகோளின்படி அங்குவந்திருந்த ததீசிமுனிவர் அவனுடைய விபரீத உணர்ச்சியை அறிந்திருந்தும், இரக்கத்தால் உண்மையை உணர்த்தாதிருப்பது தகுதியன்றெனச் சிந்தித்து, அவனைநோக்கி, யாகவிசேடத்தையும், முதலவிர்ப்பாகம் சிவபெருமானுக்கே கொடுக்கவேண்டுமென்பதையும் குறித்துப் பலவாறு வற்புறுத்திக்கூறியும், அம்மூர்க்கனான தக்கன் சற்றும் ஒவ்வாமல் ததீசிமுனிவனைப்பார்த்து, "ஓமுனிவரே! உம்மை யாரழைத்தது என்யாகத்தில்நடக்கும் விஷயத்தைக் காணுதற்கல்லது எனக்குப்புத்திகூறுதற்கல்ல, நீர் கொண்டாடும் சிவன்

மெய்ம்மையான பதித்துவம் பெற்றவனுகில் மாசடைந்த எலு ம்பும் சிரமும் சுமப்பனே? வெள்ளிய மயானச்சாம்பலைப் பூசு வனே? உயிர்களைக் காப்பதைக்கைவிட்டுக் கொல்லுவனே? யானை புலி மான்முதலிய மிருகங்களின்சருமத்தைச் சுமப்ப னே? எத்தனையோ உத்தமவாகனமிருக்கவும் எருதேறித் திரி வனே? பித்தனைப் போல நஞ்சுண்ணுவனே? சூலந்திரித்து மயானத்திலாடுவனே? ஒருத்தியை இடத்திலும் மற்றொருத்தி யைத் தலையினுஞ் சுமந்துழல்வனே?" என்று இன்னோரன்ன பல நிந்தைவசனங்களைக்கூறி நகைத்துக் கைக்கொட்டிச் சிரித் தனன்.

அங்ஙனம் கூறிய அத்தக்கனுடைய அறியாமைக்குத் ததீசி முனிவர் இரக்கமுடையராய்ப் புன்சிரிப்புகொண்டு ஒவ்வொ ரு ஆக்ஷேபத்துக்கும் தக்கவாறு மூலசமாதானங்களை உறுதி யோடு கூறியருள; அத்தக்கன் அவ்வுத்தம சரித்திரங்களைக் கேட்டும் 'மூர்க்கனுமுதலையுங் கொண்டதுவிடா' என்றபடித் தான்கொண்டமுயற்சியிலேயே இருந்தனன். அதுகண்டமுனி வர் அவனைநோக்கி, "எம்பெருமானையிகழ்ந்து நீ இயற்றும் இந் தயாகம் விரைவிலே அழியக்கடவது." என்று சாபமிட்டு, அங்கு நெருங்கியுள்ள தேவசமூகத்தைநோக்கி, "தேவர்களே! புண் ணியதேகிகளாகித் தெய்வசம்பந்தமுற்று, இத்தனை விபவங்களை யும் நீங்கள் அனுபவிப்பதற்குக்காரணம் நமதுசிவபெருமானைப் பூர்வம் பூசித்த பெரும்பேறென்று அறிந்தீர்களில்லை; பலகோடி ஜனன விசேடபுண்ணியத்தால் அடைந்துள்ள இவ்வுன்னதபத வியை வீணிலேகவிழ்க்க இஷ்டமுடையீர்களாகில், இந்த யாகத் திலிருங்கள்; இல்லாவிடில் இப்பொழுதே விட்டுப்பிரியுங்கள்; இந்தத்தக்கன் சற்றும் பாவமென்பதையறியாது சிவதூஷண வசனங்களை நிரம்பப் பிரயோகஞ்செய்ய; அத்தனையும் செவி குளிரக்கேட்ட பாவங்களே பலகாலம் துன்பம் அனுபவித்துத்

திரவேண்டிவரும்." என்று இனிமையாக நல்லறிவுகூறி அந்த யாகத்தைவிட்டுப் போயினர்.

அத்தக்கனுடைய கொடுங்கோன்மைக்கு அஞ்சி ஒருதேவரும் விலகக்கூடாதவராய் 'இருதலைக்கொள்ளியில் ஏறுண்ட எறும்பதுபோல' வருந்தியிருக்க; தக்கன் விஷ்ணுமூர்த்தியைத் தலைவராகக்கொண்டு, யாகத்தைத் தொடங்கினன். இதனை நாரதமுனிவரால் திருச்செவியேற்ற சிவபெருமான் மிகக்கொடியனாகிய தக்கனையும் மற்றும்தேவர்களையும் தண்டிக்குமாறு திருவுளங்கொண்டு, தமதுதிருமேனிவேர்வையில் வீரபத்திரக்கடவுளென்னும் ஒரு குமாரனைத் தோற்றுவித்து, அந்தயாகத்தையும் தக்கன்முதலியோனையும் அழித்துவரும்படிக் கட்டளையிட்டனர். அந்தக்ஷணமே வீரபத்திரக்கடவுள் அம்பிகைஅம்சமாகத் தோன்றிய காளியோடு சென்று, தக்கனுக்குப் பலவாறு நன்மைகள்கூறியும் கேளாமையால் விஷ்ணுமூர்த்திமுதலிய தேவர்களையும் அவர்மனைவியர்களையும் தக்கபடித் தண்டித்து, யாகத்தையுமழித்து, தக்கனையும் எச்சனையுஞ் சிரங்கொய்து, வீராவேசத்துடன் நிற்கையில், பிரமதேவர்வணங்கி வேண்டிக்கொண்டமையால், இறந்ததேவர்களையெல்லாம் உயிர்ப்பித்துத் தக்கனுக்கு ஆட்டுத்தலையொன்றை மாறுதலையாக அமைத்து எழுப்பி, பணிந்துநிற்கும் அவர்கட்குத் திருவருள்பாலித்து, கணங்கள்புடைசூழும்படிக் கைலையையடைந்தனர்.

அக்காலத்திலே, வீரபத்திரக்கடவுளால் தண்டனையடைந்த தேவருள் கண்ணிழந்தவனான பகன் என்னும் சூரியன் ததீசிமுனிவர்கூறிய உறுதிகளை உண்மையென்றுகொள்ளாது, சிவாபராதியாகி, எல்லாப்பாவங்களிலும் மேலான சிவநிந்தா சிரவணபாவத்தை அதிசுலபமாகத் தேடிக்கொண்டோமே! இதற்குக் கழுவாய் யாதிருக்கின்றதென்று யோசித்து, இதற்குமுன் நமதுநண்பனான சந்திரனும் அவன்பத்தினிமார்களும் மகாபாதகங்

களைப் போக்கிக்கொண்ட க்ஷேத்திரமே நமதுபாவங்களையும் போக்கத்தக்கதாகுமென்று நிச்சயித்து, உடனே தாழாது வட திருமுல்லையைச்சேர்ந்து நாடோறும் ஸித்திதீர்த்தத்தில்மூழ்கி, நியமப்படி பசுபதீச்சுரனையும், சித்ரமத்யாநாயகியையும் பூசித்துக்கொண்டு, அவ்வெல்லையைக்கடவாது வசிக்குங்காலத்தில், ஒருநாள் பெருமான் அம்பிகையோடு இடபவாகனருடராய்ப் பிரத்தியக்ஷமாகி, "ஓ சூரியனே! உன்பூசை நாம்விரும்பத்தக்கதாயிற்று; நம்மை அன்போடு வழிபட்டபடியால் உன்னேடொத்த மற்றைப் *பதினெருசூரியருக்குள் நீ சிரேஷ்டனாயினை; உன்பாவங்களெல்லாம் நம்மால் அரிக்கப்பட்டன; நீ யாதுக்கும் அஞ்சாது உன்பதவியையடைந்து, இனிது வாழ்ந்து முடிவில் நமதுதிருவடியைப் பெறக்கடவாய்." என்று அநுக்கிரகித்து மறைந்தருளினர். சூரியன் சந்நிதிக்குத்தென்பாலில் சந்திரபுஷ்கரணிக்குச்சமீபத்தில் **சூரியபுஷ்கரணி**யென்று ஒரு தீர்த்தமுண்டாக்கி, சுவாமியை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு, தனதுலகடைந்து விளங்கினன். என்றுரைத்துக் குசலவர்வழிபட்ட சரித்திரத்தைக்கூறுவாராயினர்.

குசலவர்வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்னுமயோத் தியர்பெருமா னிராக வன்றன் மைந்தராங் குசலவர்கள் வான்மீ கப்பேர்த், துன்னுமுனி வரன்சாலை யிருந்த காலைத் தொடுகணையாற் றந்தையனைத் துயர்த்த தீமை, தன்னனைவில குறுமாறு குருவாற் றேறித் தடமுல்லை வாயிலினிற்

---

* பதினெருசூரியர்:— தாத்துரு சக்கரன் அரியமன் மித்திரன் வருணன் அஞ்சுமான் இரணியன் திவச்சுவான் பூடன் சவித்துரு துவட்டன் என்பவர்.

றம்பேர் சாத்தி, யுன்னுமிலிங் கந்தாபித் தினுற்றிப் பூசை யுயர் கதியிற் புகுந்தவகை யுனாப்ப னன்றே.

மறைமுழுதுணர்ந்தமாதவர்களே! திரேதாயுகத்திலே, தேவரக்ஷணார்த்தமாக விஷ்ணுமூர்த்தியானவர் திருவவதாரஞ்செய்யத் திருவுளங்கொண்டு, தசரதசக்கரவர்த்தியினுடைய தவப்பேற்றால் சுமித்திரை திருவயிற்றில் ஆதிசேஷஅம்சத்தை இலக்ஷுமணனெனவும், சங்காம்சத்தைச் சத்துருக்கனெனவும் அவதரிக்கவும், கைகேசியின்திருவயிற்றில் சக்கராம்சத்தைப் பரதனென அவதரிக்கவும், நியமித்துத் தாம் கோசலையுடைய திருவுதரத்திலே அவதரித்து, இராமனெனத் திருநாமஞ் சாத்தப்பெற்று, தம்பியர்களுடன் உரியவயதில் உபநயனமாதி கிருத்தியங்களையடைந்து, வாழுநாளில், விசுவாமித்திரமுனிவருடைய யாகரக்ஷணைக்காக சக்கரவர்த்தியார் அரிதினனுப்ப; தம்பியாகிய இலக்ஷுமணருடன் சென்று, அம்முனிவருடைய யாகத்தைப் பின்னமுறாமற்காத்து, தாடகைமுதலியோரை அழித்து, அகலிகையின்சாபமகற்றி, மிதிலைநகரடைந்து, வில்லையொடித்து, சீதையைத் திருமணம்புரிந்து, பரசுராமருடைய வில்லையும் தவவெல்லையையும் இறுதிகண்டு, மீண்டும் அயோத்தியையடைந்து, வீற்றிருந்தனர்.

அந்நாளிலே, கைகேசியென்பவள் பரதருக்குப் பட்டம்நிலைக்கவேண்டி, இராமமூர்த்தியைப் பதினான்குவருடம் வனத்திற்குச் செல்லும்படிபணிக்க; அவர் அதற்குஉடன்பட்டு, இலக்ஷுமணருந் தேவியும் பிரிவுக்கஞ்சிப் பின்றொடரக் காட்டையடைந்து, குகனுடன்சிநேகித்து, பரதருக்குத் திருப்பாதுகையருளி, விராதனைவாட்டி, சரபங்கமுனிவருக்குக் கதியருளி, அகஸ்தியமுனிவராச்சிரமமடைந்து, வில்லம்போடு நல்லாசிகளையும்பெற்று, கரதூஷணாதிகளைச்சங்கரித்து, சூர்ப்பநகையின் பொல்லாக்கலகத்தால் இராவணன் சீதாதேவியை அபகரிக்கக்

கவன்று, சடாயுவுக்குத் தன்னடிச்சோதிதந்து, கவந்தனுதியோ னை யமபுரமனுப்பி, சுக்கிரீபனைச் சிநேகித்து, வாலியைவதை த்து, அநுமனுல் அறியவேண்டுவனஅறிந்து, சேதுபந்தித்து, இராவணகும்பகர்ணுதிகளைக்கொன்று, விபீஷணருக்குச் சிரஞ் சீவிபட்டத்துடன் இராச்சியபட்டாபிஷேகமுமளித்து, கற்புக் கரசியாகிய சீதாதேவியாருடன் அயோத்தியையடைந்து, பட் டாபிஷேகம்பூண்டு அரசுசெலுத்திவாழ்ந்தனர்.

அந்த இரகுநாயகரது அரசியலில் யாதுங்குறைவின்றி வளர்ந் தோங்கத் தர்மதேவதை தனக்கு வாழுமிடம் இதுவேயென்று அயோத்தியை உறையுளாகக் கொண்டுவாழப் பொதுவகற்றி, ஆறிலொருகடமைபெற்று, நீதிசெலுத்துங்காலத்து, ஒருநாள் பத்திரனென்னும் ஒற்றன் "இராவணன் கொண்டுசென்ற சீதையை இராமர் பின்னும் கைப்பற்றிவாழுதல் தகுதியோ?" என்று பிறர்இகழ்ந்ததைக் கேள்வியுற்று அறிவிக்க; அவர்மிக வும் மனம்வருந்தி, அருகிலிருந்த இலட்சுமணனைநோக்கி, "தம் பீ! பிறர் இகழும்படி இனிச் சீதையுடன் நான்வாழுதல் தக்க தன்று; ஆகையால், காட்டிலுள்ள அலங்காரங்களைக் காட்டுவ துபோலச் சீதையைத் தேரிலழைத்துக்கொண்டுசென்று, அங் கே தக்க ஓரிடத்தில் விட்டுவரக்கடவாய்." என்று பணித்தனர்.

அதுகேட்டஇளையவர் திடுக்கிட்டு நடுங்கி, உள்ளம்பதைத்து, உடலம்வியர்த்து, தமையனுருடைய திருவடிகளைவணங்கி, பல வாறு இனியவசனத்தால் அவர்கொண்ட சஞ்சலந்தணிக்கவும், அதுமாருது பின்னும் தன்னைநோக்கி வலியுறுத்தியுரைத்தமை யால், யாதும்பேசாமல் அந்தப்புரஞ்சென்று, சீதாதேவியைக் கண்டு வணங்கிநின்று, "அம்மணீ! தேவரீர் கர்ப்பிணியாயிருக் கின்றமையால் தங்கட்கு மனஉல்லாசமுண்டாகும்படி இரதா ரோகணஞ்செய்வித்துக்கொண்டு அடவிக்குச்சென்று, ஆங்காங் குள்ள விநோதங்களைக் காட்டிவரும்படி அண்ணனுர் பணித்

தருளினர்." என்று விண்ணப்பித்தார். அதுகேட்ட தேவியார் பெருமகிழ்வடைந்து, கணவனருளைவியந்து பழையனகளைந்து, புதியனவாய அணிகளைப்புனைந்து, உடுப்பனஉடுத்தி, பூசுவன பூசி, அலங்கரித்துக்கொண்டு, இளையவருடன் இரதமேறிச் செல்ல; அவர் ஆரணியங்களிற் கண்ட சிங்காரங்களையெல்லாம் காட்டிக்கொண்டேசென்று, தக்க ஓரிடங்கண்டு அவ்விடத்தில் சீதையை இறங்கச்செய்து, அவர் பத்மபாதங்களிற் கண்ணருவிபாயவணங்கி, உடல்நடுங்கி, உரைதடுமாறத் தமது அண்ணனுடைய அபிப்பிராயத்தைப் பயந்து மெல்லவிண்ணப்பஞ்செய்து, சோர்ந்துநின்றனர். அதைக்கேட்டபோதே இடியேற்றைக்கேட்ட நாகம்போல விழுந்து, மூர்ச்சையடைந்து, சற்றுநேரத்திற் றெளிந்து, ஒருவாறு மனந்தேறி, தன்முன் சோகத்தோடுநிற்கும் இளையவரைத் தேற்றி, அயோத்திக்கு அனுப்பி, தான் வான்மீகமுனிவருடைய, ஆச்சிரமமடைந்து, அவரால் போற்றப்பட்டிருக்க; இலக்ஷுமணர் தன்கண்களிலிருந்துபாயும் கண்ணீரினுல் பாலைநிலங்களை யெல்லாம் மருதநிலமாக்கிக்கொண்டு சோகத்தோடு அயோத்தியையடைந்து, இராமமூர்த்தியைவணங்கி நடந்ததைவிண்ணப்பித்து, அருகிலிருந்தனர்.

இப்பால் வான்மீகமுனிவரால் போற்றப்பட்ட சீதாதேவியார் பருவம்நிரம்பியபின் சூரியசந்திரர்களே உதித்தார்களென்று கண்டவர்களிக்கும்படி இரட்டைப்பேருக இரண்டு ஆண்குழந்தைகளைப்பெற்றனர். அதுகண்டமுனிவர் மிகுந்த சந்தோஷமடைந்து, அக்குழந்தைகளிருவரையும் கொணர்வித்துக் கண்டுகளித்து, ஒருகுழந்தையைத் தருப்பைநுனியாற்றடவி குசன் என்றும், மற்றொருகுழந்தையை இலவத்தினுற்றடவி இலவன் என்றும் திருநாமங்கள்சாற்றி, அவ்வப்பருவங்கட்குத் தக்கபடி விதிவழுவாது கிருத்தியங்கள்நடாத்தி, உபநயனஞ் செய்து, சகலவித்தைகளோடு தாமருளிய இராமாயணத்தை

யும் கற்பித்தனர். அந்நாளில், அயோத்தியில் அரசுபுரிந்து வரும் இராமமூர்த்தியானவர் அசுவமேதயாகஞ்செய்ய ஆரம்பித்து, இலக்கணமுற்று மமைந்த குதிரையை மந்திரபூர்வமாக அனுப்ப; அக்குதிரை வான்மீகமுனிவருடைய ஆச்சிரமவழியாக வந்தபோது, அங்கு விளையாடிக்கொண்டிருந்த குசலவர் அக்குதிரையைத் தகைந்தனர். உடன்வந்த இலக்ஷ்மணர் கோபாவேசங்கொண்டு, காலருத்திரனைப்போலச்சீறி, அச்சிறுவர்களைவளைந்து, அஸ்திரங்களைப்பிரயோகிக்க; சிறுவர்களும் விளையாட்டாகவே தமது கைகளிலிருந்த விற்களைவளைத்துக் குணத்தொனிசெய்து, அஞ்சாதெதிர்த்துப் பாணங்களை அமோகமாகவிட்டு, இலட்சுமணரை மூர்ச்சையுடையராக்கிப் பதாதிகளை மூலைக்குமூலையோட்டி, எதிர்த்துநின்றார்கள். இவ்விஷயம் ஒற்றாற்றெரிந்த இராமமூர்த்தி விரைவினேவந்து எதிர்த்து, இளையபெருமாளைப்போலவே மூர்ச்சையடைந்து, பின்னர்த்தெளிந்து, அவ்வான்மீகமுனிவர் ஆச்சிரமமடைந்து, அவர் ஆசீர்வாதம்பெற்று, சிறுவர்கள் இன்னாரெனத்தெளிந்து, உடனழைத்துக்கொண்டுசென்று யாகபூர்த்திசெய்தனர்.

பின்பு, குசலவர்கள் வசிட்டமுனிவரைத் தரிசித்துவணங்கி, "எங்கள்குலகுருவாகிய ஐயனே! நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போதே பிதாக்களை எதிர்த்துப் பகைகொண்டு, செய்யாதனசெய்தோம்; உடன்வந்த இராச இராசாக்களையும் பகையின்றிக் கொன்றோம்; இப்பெரும்பாதகங்களை யாங்கள் நினைக்குந்தோறும் பதைப்புறுகின்றோம்; ஆகையால், இதற்கு ஓர் கழுவாய் உரைத்தருளல்வேண்டும்." என்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். வசிட்டமுனிவர் அச்சிறுவர்கள் வசனித்த இனியவசனங்களைக் காதாரக்கேட்டுக் களித்து, அவர்களை ஆசீர்வதித்து, "குழந்தைகளே! நீங்கள் சீக்கிரமே சுபம் பெறுவீர்கள்; உங்களுடைய உத்தேசம் இதுவாயின், நாம் யாகநிர்வாகத்திற்காகக் காமதேனுவைப் பெறும்படிப் பூசித்த ஒரு

க்ஷேத்திரமுண்டு; அதில் சிவபெருமான் 'எக்காலத்தும் சாந்நித்தியமாக வீற்றிருப்போம்.' என்று அம்பிகைக்கு அநுக்கிரகித்திருப்பதுமன்றி, நமக்குங் காமதேனுவைக் கடாக்ஷித்துப், பசுபதீசர் என்ற திருநாமம்பெற்று விளங்குகின்றார். அத்தகையதான திருமுல்லைவாயிலை நீங்களடைந்து, வில்வவிருக்ஷ சமூகங்களினிடையில் வீற்றிருந்தருளும் **வில்வேசுவரரையும், சர்வலோகநாயகியையும்** பூசிப்பீர்களானால், இவ்வெளிய பாவமேயன்றி மகத்தான பாவங்களும் போக்கவல்லவராவீர்கள்." என்று கூறியருளினர்.

உடனே குசலவர்கள் முனிவரையும் தந்தையையும் வணங்கி, **வில்வாரணியமாய்** விளங்கும் அத்திருமுல்லைவாயிலையடைந்து, அங்குவிளங்கும் அற்புத விம்மிதங்களையெல்லாம் கண்ணாரக்கண்டு, இறும்பூதுடையவர்களாகி, இரத்னதீர்த்தத்தில் மூழ்கி நியமமுடித்து, பட்டாடை புனைந்து, விபூதி ருத்திராக்ஷங்களையணிந்து, பெருமானையும் பெருமாட்டியையும்வழிபட்டு, சுவாமிக்கு உத்தரபாகத்தில் மேற்குமுகமாக ஓர்சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, சிலநாள் நியமந்தவறாது பூசித்துவருகையில், சுவாமி அம்பிகையோடுவெளிவந்து, இரட்டையர்களைக் கண்டு, "செல்வர்களே! உங்களுடைய பிள்ளைமையன்புக்கு எளியவரானோம்; பத்திமுளைக்குப் பலந்தரத்தக்க எம்மை இத்தலத்தில் வழிபடுபவருக்கு எளிமையில் காட்சிதந்தருளுவோம்; உங்கள் பாவங்கள் தீயிற்பட்ட பஞ்சாயின; இனி புண்ணியர்களாக அரசுபுரிந்து, முடிவில் நமது திருநாட்டை யரசுபுரிவீர்கள்; நீங்கள் நம்மைவழிபட்டுப் பேரின்பம்பெற்றபடியால், இந்நகரம் இன்றுமுதல் **குசலவபுரம்** என்று பெயர்பெறக்கடவது; உங்களால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட நமதுவடிவம் **குசலவபுரீசர்** என்று கொண்டாடும்படி விளங்கும்." என்று திருவாய்மலர்ந்தருளி, அம்பிகையோடு அந்தர்த்தானமாயினர். குசலவர்கள் அஞ்சலியத்தராகிப் பன்முறைவணங்கி, தாங்கள்

கேட்டுக்கொள்ளவேண்டிய வரத்தைப் பெருமானே அருளப்பெற்றமையால், அக்கருணையை வியந்து, பூசைமுடித்துக்கொண்டு சிலநாள் அந்நகரத்திலேயே வசித்து, பின்பு சுவாமியைப் பணிந்து விடைபெற்று, அயோத்தியையடைந்து, தந்தையாருக்கும் ஆசிரியருக்கும் நடந்ததை விண்ணப்பித்து, வாழ்ந்தனர். என்று விளக்கியருளித் தூருவாசமுனிவர் வழிபட்டசரித்திரத்தை வகுப்பாராயினர்.

தூருவாசமுனிவர் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நற்றவஞ்சேர் துருவாச முனிவன் றன்பா னணுகுற்ற மகபதிக்கு நன்மை கூறிப், பொற்றமலர் மாலைதரப் போற்றிக் கொள்ளாப் புன்மையினு லவனையுமங் கதைச் சிதைத்த, குற்றமத னுலயிரா வதத்தை யுஞ்சூழ் கோபத்தாற் சபித்தந்தக் கோது.தீர்ப்பா, னற்றவர்வாழ் முல்லைநக ரணுகிப் பூசை நவிற்றியுய்ந்த திறமதனை நவில்வ னன்றே.

முக்குறும்பறுத்த முனிவர்களே! முன்னொரு காலத்திலே, தருமசீலரும் பிரமநிஷ்டரும், சிவாம்சரும் இந்திரிய ஜெயம் பெற்றவரும், உலோகோபகாரரும், கோபத்தையொழித்தவரும், சிவதத்துவமுணர்ந்தவரும், சிவபூசாதுரந்தரரும், விபூதிருத்திராக்ஷதாரணரும், சகலமந்திரங்களின்விதிகளை அறிந்தவரும், சகல மூர்த்தி தீர்த்த ஸ்தலவைபவங்களை நன்றாக உணர்ந்தவரும், வேதசாத்திரபுராணங்களை அறிந்தவரும், சைவப்பிரியரும், வேதாந்த சிரவணத்தில் வல்லவரும், சிஷ்யகோடிகளாற் சூழப்பட்டவருமாகிய தூருவாசமுனிவர் தவஞ்செய்துகொண்டிருக்கும் ஆச்சிரமவழியாகத் தேவலோகாதிபதியான இந்திரன்

இருபுறங்களிலும் தேவஸ்திரிகள் சாமரைவீச, பரிசனங்கள் ஆலவட்டம் சிவிறிமுதலிய கருவிகளால் உபசாரமியற்ற, அரம்பை ஊர்வசி திலோத்தமை முதலிய தேவதாசிகள் நடனமியற்ற, கந்தருவர் சித்தர் சாத்தியர் கீதங்கள்பாட, வசுக்களும் லோகபாலகர்களும் திக்குப்பாலகர்களும் தக்க யானங்களிற் புடைசூழ, பிரகஸ்பதி காசிபர் முதலிய பெரியோர் அருகில் ஆசிகூறிக்கொண்டு விமானங்களில்வர, கன்னியாமாத சுக்கில பக்ஷ மஹாநவமியில் * சமிவனபூசைக்காக மஹாவிபவத்துடன் பூலோகத்திற்குவந்தான்.

அவ்விபவத்தைக்கண்ட துருவாசமுனிவர் சந்தோஷித்தராய்த் தேவராசனுகிய இவன் நமதாச்சிரமவழியாக வந்தபடியால் இவனைச் சன்மானிக்கவேண்டுமென்று சமீபித்து, ஒரு முகூர்த்தகாலம் வேதவாக்கியங்களால் ஆசீர்வதித்துப் பாரிசாதமாலையொன்றை அவன் [illegible], தமது ஆச்சிரமத்தில் அதிதிபூசை ஏற்கவேண்டு[illegible]. இதைக்கேட்டஇந்திரன் புன்[illegible]முனிவர் பெருமையையும் அம்மாலையினது அரு[illegible]பாராமலும், பின்விளைவை நோக்காமலும், [illegible]செருக்கால் அயிராவதமென்னும் வெள்ளையானையின்பிடரியில் இறுமாந்திரு[illegible]கொண்டே முனிவனைநோக்கி, "ஓ முனிவரே! நாம் சமிவனபூசைக்காக இவ்வழிவந்தனம்; உமதுபெருமையைப் பிரசித்தமாகக் கேள்விப்பட்டிருந்தபடியால் இவ்வளவுநேரம் இவ்வுழிநின்றேம்; இந்தப் பழம்பூமாலைக்கு நாம்விரும்பினேமில்லை; இது எமது லோகத்ததேயல்லது உமதிடத்ததன்று; தவவலிமை சிறிது உண்டாதலால், யாதுதருவீரோவென்று எதிர்பார்த்திருந்தேம்; நித்தியஉபவாசியாகிய நீரோ எம்மை அதிதிபூசைக்கு விரும்புகிறது." என வெகுஅலக்ஷியமாகக்கூறி, தன்கையிற்றந்தமாலையைத் தானேறிவந்த யானையின் மத்தகத்தில்வீசினன். அம்

* சமி - வன்னிமரம்.

மாலையை அவ்வியானை துதிக்கையால்வீழ்த்தித் தாளால்மிதித்துத் துவைத்தெறிந்தது.

பின்பு, இந்திரன் தனதுசைந்நியங்களை நடாத்திக்கொண்டு அப்புறம்போக எத்தனித்தபோது, துருவாசமுனிவர் கடுங்கோபங்கொண்டு, பற்களைக்கடித்து, உதட்டைக்கவ்வி, கண்களிலே தீப்பொறிபறக்க காலருத்திரனைப்போல உக்கிரங்கொண்டு, "ஓ இந்திரனே! எம்மையும் எமதுதவத்தையும் அநாதரவு செய்ததேயல்லாமல் நாம் சிரத்தையோடு எம்பெருமானைப் பூசிக்க, அவர், பிரசாதமாய் அளிக்கப்பட்ட இந்நிர்மாலியத்தையும் அவமதித்தனை; உனது செல்வச்செருக்கல்லவோ இவ்வண்ணம்செய்தது; நாமேவிரும்பிவேண்டிய அதிதிபூசையையும் அலக்ஷியஞ்செய்தனை; இச்செல்வமுற்றும் எம்பெருமானைப் பூசித்தபேற்றால் வந்ததென்று உணர்ந்தாயில்லை; ஆகலின் நீபெற்ற செல்வமுற்றும் இன்றே ஒழியக்கடவது; நீ தேவர்கள் கண்ணுக்குத்தெரியாமல் பதினாயிரவருடம்மறைந்து வறுமையை அடையக்கடவாய்" என்றுசாபமிட்டு ஐராவதத்தைநோக்கி, "கஜேந்திரனே! நீ எப்போதும்மதங்கொண்டு உயர்ந்தோரையும் மதியாமல், திரிலோகஇரக்ஷகனாகிய தேவராஜனது வாகனமாயினேமென்றும், மற்றயானைகள்போலாது சுவேதநிறமும் நான்குகோடுமுடையோமென்றும், பலபராக்கிரமமுடைய சத்துருக்களை வென்றோமென்றும், செருக்கியிருக்கின்றனை; ஆகையால் உன்சிரத்தில் இவ்விந்திரன் பத்தியின்றிவைத்த இம்மாலையை இவ்வகைசெய்தனை; நீ கறுத்தசரீரமடைந்து, பலபராக்கிரமங்களுமொடுங்கி, யாவராலும்பழிக்கப்பட்டு, அலையக்கடவாய்." என்று சபித்தனர்.

அதைக்கேட்ட இந்திரன் மனநடுங்கி, உடல்பதைப்புற்று, சோர்ந்துநிற்குந்தருணத்தில், பிரகஸ்பதி அதிசீக்கிரமாக விமானம்விட்டிழிந்து, துருவாசமுனிவரைவணங்கி, "சுவாமீ! முனி

வர் இவ்வளவுகோபம் கொள்ளுதல் தக்கதல்ல; க்ஷணநேரத்திற்குமேல் அக்கோபம் அவர்களிடம் நிற்குமாயின், அது அவர் தவத்தை முழுதுமழித்து உலகத்திற்கும் தீமையை விளைவிக்குமாகலின், கோபந்தணிந்து இவ்வேழையாகிய இந்திரன்விஷயத்தில் சாந்தராகிச் சாபநிவிர்த்தியாமாறு தயைபுரியவேண்டும்." என்று பன்முறைபிரார்த்தித்தனர். அதைக்கேட்ட முனிவர் சாந்தமடைந்து, "பிரகஸ்பதியே! இவ்விந்திரனுக்கு யான் கூறியசாபம் ஒருபோதும் பொய்க்காது; ஆயினும், உமதுவேண்டுகோளால் ஒருவாறு விமோசனங்கூறுகின்றேம்." என்று இந்திரனைநோக்கி, "வச்சிரதரனே! ஔதும்பரக்ஷேத்திரத்திற்கு நைருதிதிக்கிலும், மயூரபுரத்திற்கு வாயுதிக்கிலும், சுவேதத்துவாரபுரத்திற்குத் தெற்கிலும், பிநாகிக்கு வடக்கிலும் ஒரு மஹாக்ஷேத்திரமுண்டு; அது தர்பிக்ஷைகளைநீக்கி இரத்தினபுரம்என்று பெயர்பெற்றுப் பிரளயகாலத்திலும் அழியாது சித்திபெற்றதாய்ச் சிவபெருமானுக்குக் கயிலாயத்திலும் அதிகப்பிரீதிவிளைவித்துக்கொண்டு விளங்குகின்றது; அதில் சிவபெருமான் கிருதயுகத்தில் மரகதநிறமாயும், திரேதாயுகத்தில் புஷ்பராகநிறமாயும், துவாபரயுகத்தில் வயிடூரிய நிறமாயும், கலியுகத்தில் இந்திர நீலநிறமாயும் விளங்குகின்றார். அவர் சந்நிதிக்கு எதிரில் கல்யாணதீர்த்தமென்று ஒருதீர்த்தமும், அதற்குஅருகில் பத்மதீர்த்தமென்றொரு தீர்த்தமும், மற்றும் பிரபலதீர்த்தங்கள் பலவும் விளங்குகின்றன. அங்கேசென்று, அப்பத்மதீர்த்தத்தில் நீ பிறர்அறியாவண்ணம் பதினாயிரம்வருடம் தாமரைநாளத்தில் ஒளிந்து, சிவநாம உச்சாரணை செய்துகொண்டிருப்பையேல், உன்சாபம் சாந்தமாயொழியும்; சாபவிமோசனமுடிவில் அங்குவாழும் பெருமானைச் சித்திரைமாத பௌர்ணிமையில் பூசித்துப் பானகம் பக்ஷியமுதலியவை நைவேதித்துத் தூபதீபங்கள்காட்டி வழிபடுவையேல், உன்இராச்சியம் உனக்குரிமையாகப்பெறுவாய்." என்று அநுக்கிரகித்தனர்.

உடனே அருகிலிருந்த ஐராவதமும் நடுக்குற்று அவர்பாதங்களில் பணிந்து, "சுவாமி! யான் எனதியல்பை யனுசரித்துச் செய்த இக்காரியம் கொடியதாயிற்று; என்மதத்தினால் இப்படிச்செய்ததல்ல; சிரத்தின்மீது ஒரு புல்லிருந்தாலும் அதையெடுத்துக் காலில்மிதித்து உழக்கலும், எண்ணெயிட்டுக்குளிப்பித்தாலும் உடனே புழுதியாடித் துதிக்கையால் தனக்குத்தானே மண்ணையிட்டுக் கொள்ளலும், யானையின் சுபாவம்; ஆகையால், நானறியாதியற்றிய இப்பிழையைத் தேவரீர் பொறுத்தருளல்வேண்டும்." என்று பன்முறை வேண்டித்துதித்தது. அதுகேட்ட துருவாசமுனிவர் மகிழ்வடைந்து, "ஓ ஐராவதமே! நீ இப்போது சொல்லிவந்த தருமமெல்லாம் சாமானிய யானைகட்கே யுரியன; பூர்வபுண்ணியத்தால் தேவயானையெனப் பெயர்பெற்று, தேவபோகங்களை அனுபவிக்கப்பெற்ற நீ இவ்வாறுசெய்தது முற்றும் மதமேயன்றி வேறல்ல; 'அடாதகாரியஞ் செய்தோர் படாதபாடுபடுவர்,' என்பதை உணராதுபோயினை; ஆனாலும் உன்பிரார்த்தனைக்கு இரக்கமடைந்தோம்; இந்திரனுக்குச் சாபவிமோசனத்திற்காகக் கட்டளையிட்ட க்ஷேத்திரம் எதுவோ? அதுவே உனக்கும்உரித்து; அதில் **சம்பகேசரையும் மனோபிரமணிநாயகியையும்** பத்தியோடு உன்துதிக்கையால் நீர்முகர்தாட்டி, புஷ்பத்தாலருச்சித்து, நியமந்தவறாது பதினாயிரவருடம் பூசைபுரிவையேல், உன்தலைவனோடு உனக்குஞ் சாபம்விலகும்." என்று கட்டளையிட்டு, தமதாச்சிரமத்தையடைந்து, சிஷ்யகோடிகள்நடுவிலிருந்துகொண்டு, "ஓகோ! இவ்விந்திரன் தேவர்கட்கெல்லாம் அதிபன்; அவன் மதியாதுசெய்த பாவகாரியத்திற்கு நாம் தண்டிக்கவேண்டியது கடமையாயினும், கடுஞ்சாபமீந்தோம்; கோபமே, கொலை களவு பொய் நரகு முதலியவைகட்கு ஏதுவாகும்; இச்சினத்தினாலேயே தவத்தர்முதலியோர் தங்கள் தவமுதலியவற்றை இழந்தார்கள்; ஒருவன் கொடியபிழைசெய்யினும் அதற்குப் பதிலாக நாமும் அக்கொடு

மையைச்செய்வது தகுதியோ! இதனுல் நம்மையணுகியபாவத்தைச் சிவபெருமானைவழிபட்டு ஒழித்துக்கொள்ளல்வேண்டும்." என்று நினைத்து, சிஷ்யவர்க்கங்கள்சூழ உடனேபுறப்பட்டு, இடையிலுள்ள பல திவ்வியஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு, **சம்பகாரணியமாய்**விளங்கும் திருமுல்லைவாயிலையடைந்து, கல்யாணதீர்த்தத்தில்மூழ்கி, நியமமுடித்துச் சைவாகமத்தின்படியே தேவதேவனையும் அம்பிகையையும் பூசித்துவந்தனர்.

அப்போது பெருமான் சித்ராபௌர்ணிமையில் நளாவிடையிவர்ந்து, பளாயொடுவெளிப்பட்டுப் பிரமதகணங்கள் ஹரஹரவென்று கோஷித்துப்புடைசூழக் காட்சிதந்தருள; முனிவர் இருகண்களினும் ஆனந்தவருவிபாய இருகரங்களையும் உச்சியிற்கூப்பி, "நீலகண்டனே! நெற்றிக்கண்ணனே! கொடியிடைபாகனே! அடியவர் நேயனே! காலகாலனே! கறைமிடற்றவனே! ஆனந்தக்கூத்தனே! அற்புதத்திர்த்தனே." என்று பலவாறு துதித்துநின்ருர். பெருமான் அவளைக்கடாக்ஷித்து, "முனிவனே! உனதுவந்தனைக்கு உள்ளமுவந்தனம்; நீ விரும்பியவரத்தைக் கேட்பாயாக." என்றருள; முனிவர் "எம்பெருமானே! அடியேன் எவ்வளவுதாழ்ந்தபிறவியில் உழலநேரினும் உமது திருவடிக்கமலம் என்மனக்கமலத்தில் நீங்காதிருக்கும் அன்பு ஒன்றையே வேண்டுகின்றேன்; அன்றியும் யான் இந்திரன்விஷயத்தில் அளவின்றிக்கொண்ட கோபத்தால் வந்த பாவத்தையும் ஒழித்தருளல்வேண்டும்; காருணியசமுத்திரமே!" என்று அடிபணிந்துவணங்கினர். சிவபெருமான் அவற்றையெல்லாம் தந்தருளி, "இனி அஞ்சாது தவஞ்செய்து, மேன்மைபெறக்கடவாய்." என்று ஆஞ்ஞாபித்து அச்சிவலிங்கத்திலேயே மறைந்தருளினர். முனிவர் மிகுசந்தோஷங்கொண்டவராய்த் தமது மாணக்கர்புடைசூழச் சம்பகேசனைப் பன்முறைவணங்கி விடைபெற்றுக்கொண்டு, தமதாச்சிரமத்திற்குச்சென்று, தபோநிதி

யாய்விளங்கியிருந்தனரென்று விளக்கி, ஐராவதம் வழிபட்ட சரித்திரத்தை அறைவாராயினர்.

ஐராவதம் வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருவாச நிவர்த்திபெறுந் துருவா சன்றன் கடுமொழியாற் கருநிறங்கொள் ககன நாட்டுப், பெருவாச முடையவயி ராவ தஞ்சேர்ப் பெருமுல்லைத் தலம்போந்து பிஞ்ஞ கன்முன், றரு வாச முல்லையினுன் முல்லை வாணன் றனைவழிபட் டருஞ்சாபந் தணிந்து முத்தித், திருவாச மிந்திரற்கு மீந்து வாழ்ந்த திறம் புகலு மிச்சரிதந் தெரிக்குங் காலே.

ஐம்புலனடக்கிய அருந்தவமுனிவர்களே! துருவாசமுனிவர் கட்டளைப்படியே ஐராவதமானது கருநிறங்கொண்டு, இந்திரனோடு அச்சம்பகவனமடைந்து, அவன் பத்மதீர்த்தத்திலுள்ள பத்மகாளத்தில் மறைந்திருக்க; தான் சம்பகேசுவரனைப்பூசிக் கநினைந்து, அங்குள்ள கல்யாணதீர்த்தத்தை முன்னையிலும் பெரியதாகப் புதுக்கி, ஸ்நானமுதலிய நியமமுடித்து, சிவசிந்தனையோடு நீர்முகந்து, சம்பகேசனையும் மனோபிரமணிநாயகியையும் ஆட்டுவித்து, பல்லவங்களால் அலங்கரித்து, “சம்புவே பார்வதீசா! கங்காதரா! மஹாதேவா! பிரபுவே! என் சாபம் விலகும்படித் தினமும் தேவரீரைப் பூசிக்க விடையருள்வதுமன்றி, எளிதாகவே இக்கொடிய சாபத்தினீங்குமாறு திருவருள்பாலித்தல்வேண்டும்.” என்று பிரார்த்திக்க; பெருமான் உடனே கஜேந்திரனுக்குக் காக்ஷிதந்து, தம்மைப்பூசிக்கும்படி அநுஞைதந்தனர்.

அதைப்பெற்ற யானையானது பின்னும்வணங்கி, "சர்வேசனே! தேவரீரை முன்பு, இலட்சுமி மல்லிகை சண்பகம் கூவிளங்களாலும், பார்வதி ஜாதிபுஷ்பத்தாலும், துர்க்கை அலரியினாலும், சரஸ்வதி அகத்திப்பூவாலும் சொர்னபுஷ்பத்தாலும், ஆதிசேடன் காட்டுமுல்லையாலும், கருடன் மந்தாரமலராலும், தக்ஷகன் சுரபுன்னையாலும், வாசுகி நாகமலராலும், பிரமதேவர் தாமரைமலராலும், மாவலிச்சக்கரவர்த்தி பாதிரிமலராலும், வீரபத்திரக்கடவுள் தாழைமலராலும், குபேரன் கோரகபுட்பத்தாலும், தேவராஜன் செவ்வந்திமலராலும், வருணன் ஊமத்தைமலராலும், துரோணன் தும்பைமலராலும், வாயு பாரிசாதமலராலும், சனகமுனிவர் செம்பாதிரிமலராலும், தேவர்கள் துளசியினாலும், அக்கினி செவ்வரத்தம்பூவினாலும், சனி நாரத்தைமலராலும், நிருதி குரவமலராலும், கிருஷ்ணர் கல்யாணபுஷ்பத்தினாலும், ஈசானதேவர் விரஜைமலராலும், காளி வச்சிரபுஷ்பத்தாலும், இலக்ஷுமணர் இரசிதமலராலும், இராமர் இராகமலராலும், பூசித்து வேண்டியவரங்களை வேண்டியவாறே தந்தருளப்பெற்றனர்; தேவரீரும் அம்மலர்களின் சுகந்தங்களை அனுபவித்திருக்கின்றீர்; முன்பொருவரால் பூசிக்கப்பட்ட புஷ்பத்தைக்கொண்டே பூசிக்க எனக்கு விருப்பமில்லை; தேவரீருக்குப் பிரீதியான ஒருமலரைக் கடாக்ஷித்தால் அதைக்கொண்டு பூசித்து, என்சாபத்தொடரை விலக்கிக்கொள்ளுகின்றேன்." என்றுவிண்ணப்பித்தது.

அதைக்கேட்ட திரியம்பகர் கருணையுடையவராகி, "கஜேந்திரனே! இதுவரையிலும் யாவரும் விரும்பாத பெரியவரத்தை விரும்புகின்றனை; நமது அன்புள்ளகுமாரனான முருகனுக்குக் கொடுக்கும்படி நாம் உள்ளத்தில்வைத்திருந்த மலர் ஒன்றுண்டு: அது முல்லைமலரேயாம்; அப்புஷ்பத்திற்கு ஒத்தபெருமையுடையது இப்பதினான்குலகத்தினுங்கிடைப்பதரிது; குகன் கஜமுகன், பார்வதி, நந்தி, சண்டிகேசன் ஆகிய இவர்களிடத்தி

லும், வில்வம், சூலம், கைலாயம் இவைகளிடத்திலும், நமக்குள்ள பிரீதியினும் கோடிபங்கு அதிகமான பிரீதியோடு அம்முல்லைமலரை அணிவோம்; ஒருமுல்லைமலரை எமக்குப் பத்தியோடு யாவர் அணிகின்றாரோ அவர் நமது சாருபத்தைப் பெறுவர்; அம்முல்லைமலரில் ஓரம்சமேனும் இதுவரையிலும் நாம் ஒருவருக்கும் பாலித்ததில்லை; அதை உன்பத்தியின்பொருட்டுக் கொடுக்கின்றோம்; மேற்கூறிய குகன் முதலியவர்களை ஒருபோது விட்டிருப்பினும் புத்தியுடைய அன்பர்களைப் பிரளயத்திலும் கைவிடோம்: இதுசத்தியம்: கிருகாதிசெல்வங்களும் களத்திராதி பந்துவர்க்கங்களும் எனதடியவர் விரும்பார்: கேவலம் பத்தியொன்றையே பற்றுகக்கொண்டு எம்மைப் பூசிக்கின்றபடியால் அவ்வடியார்களுக்கு வேண்டியவரங்களை ஒளியாதுபாலிப்போம்; நீ பசுசாதியிற்பிறந்தும் நமது திருவடியில் பூர்ணபத்தியை யுடைமையால், சண்முகனிடத்திற் கொண்ட பிரீதியினும் உன்னிடத்தில் அதிகபிரீதிகொண்டோம்; தானம் தவம் விரதம் ஸ்நானம் எக்கியம் புண்ணியஸ்தல யாத்திரை ஆகிய இவைகளால் யாம் திருப்தியடையோம்; கேவலம் பத்தி ஒருவரிடம் உண்டாகுமேல், அதற்கே முத்தியையளிப்போம்; ஜாதி குலம் சரித்திரம் செல்வம் இவைகள் அநுக்கிரகத்திற்குக் காரணமாகமாட்டா; ஆகையால், உனது பத்திக்காக நாம்தரும் இம்முல்லைக்கொடியைப்பதித்து, அதன் புஷ்பத்தால் நம்மை அர்ச்சிக்கக்கடவாய்." என்று அநுக்கிரகித்துக்கொடுத்து, அச்சிவலிங்கத்திலே மறைந்தருளினர்.

இவ்வாறு பெருமானளித்த முல்லைக்கொடியை வெள்ளையானை வணங்கிப்பெற்று, சந்நிதிக்குப்பின்புறத்தில் ஸ்தாபித்துப்போற்றிவர; அக்கொடி செழிப்புற்று, தளிர் இலை மொட்டு மலர் முதலியவைகளைப்பெற்று, மூன்றுயோசனை பரியந்தம் மணம்வீசத்தக்கதாய்ச் சகலலோகத்திற்கும் இன்பம்விளையப் பரிமளித்துக்கொண்டிருந்தது. அம்மலர்வாசனைக்கு ஆனந்தித்

தவராகித் தேவர்களெல்லாம் அச்சம்பகாரணியமடைந்து, தேவயானையின் கைங்கரியத்துக்கு மெச்சி, அவ்வற்புதத்தை எக்காலத்திலுங்கண்டு அனுபவிக்கவேண்டுமென்று கற்களாய்ச்சமைய; தேவஸ்திரிகள் கொடிவர்க்கங்களாகவும், கந்தருவர்கள் குயில்களாகவும், நாகரும் இயக்கரும் முனிவர்களும் அந்தணரும் புற்களாகவும் ஆனார்கள். ஐராவதமோ தினமும் உஷத்காலத்திலெழுந்து, கல்யாணதீர்த்தத்தில் ஸ்நானமாடி, சிவநாம உச்சரணையோடு இலக்ஷம் முல்லைமலர்களை யெடுத்துவைத்து, தனது பெருமூச்சியினால் சந்நிதியைவிளக்கி, கோமயத்தைக் கொண்டு தனதுரல்போலும் அடிகளால் மெழுக்கிட்டு, பல்லவங்களால் ஆலயமலங்கரித்துப் பின்பு துதிக்கையால் நீர்முகந்து காட்டி, சந்தனமட்டித்து, புஷ்பத்தால் அருச்சித்து, தூபதீபநைவேத்தியங்களால் ஆராதித்து, பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, சந்நிதியினின்று, "பரமதயாநிதியே! எனக்கும் எனதரசனுக்கும் சாபவிமோசனஞ் செய்தருளல்வேண்டும்." என்று தோத்திரித்துவந்தது.

இங்ஙனம் ஒன்பதினாயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டுவருடம் செல்லுங்கால், அம்பிகையின் கட்டளைப்படி இந்திராணியும் அங்ஙகரடைந்து பூசித்துவர; பதினாயிரவருடமும்நிரம்பின. அப்போது, சித்திரைமாத சித்திராநக்ஷத்திர பௌர்ணிமையில் கடகலக்கினத்தில் பகலில் சிவபெருமான் காட்சிதந்தருளினார். அதைக்கண்ட யானையானது தனது துதிக்கையைத் தலையிற்றூக்கிக்கொண்டு, ஆநந்தமேலீட்டால் தோத்திரம்செய்ய; கடவுள் அத்தோத்திரத்திற்கு மகிழ்ந்தவராய்க் கருணைபாலித்து, "ஓ ஐராவதமே! உனதுபூசைக்கு உவந்தோம்; நமது அடியவர்களுக்குள் நீ மிகச்சிரேஷ்டமடைந்தனை: உன்னை நிகர்த்தவர் மூவுலகங்களிலுங் கிடையார்கள்; நீவிரும்பியவரத்தை வேண்டியவாறு பெறக்கடவாய்." என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அதுகேட்ட அந்தயானையானது "சுவாமீ அடியேன் பத்தியில்லாமலியற்றிய இப்பூசையுள் எக்குற்றமிருக்கினும் க்ஷமித்தருளி, முன்பு என்கருநிறத்தைப் போக்கடித்தல்வேண்டும்; பின்பு விரும்பியவரங்களை வேண்டுகிறேன்." என்று அப்பெருமான் திருவடித்தாமரையில் தனதுசிரம் வண்டுபோலக்கிடக்கும்படித் தீர்க்கதெண்டனிட்டது. அதைக்கண்ட சம்பகேசர் தமது அருமைத்திருக்கரத்தால் அதனது தேகத்தைத் தடவலும், அந்தயானை முன்னையிலுங் கோடிபங்கதிகமான வெள்ளியகாந்தியையும் திடத்தையும்பெற்று, பன்முறை பிரதக்ஷிணஞ் செய்து, "சம்புவே! என்து தலைவரில்லாமல் யானும் என்னையின்றி அவரும் தேவலோகமடைவதாற் பயனில்லை: அவர் பஞ்சாக்ஷரசெபத்தோடு இப்பத்மதீர்த்தத்தில் மறைந்து தவம்புரிகின்றார்; அவருடைய சாபவிமோசனத்திற்காகவே இங்கே மனோபிரமணீநாயகியை இந்திராணியும் வழிபட்டு வேண்டிய வரங்களும் பெற்றிருத்தலால், அவ்விருவர்கள் தவத்திற்கேனும் கருணைபாலிக்கவேணடும்." என்று பலவாறு பிரார்த்தித்தது. அவைகளைக்கேட்ட சம்புவானவர் கருணையுடையராய்த் தேவேந்திரனைத் தமதுதிருவுளத்தில் சிந்தித்தனர். அவன் தாமரைக்காளத்தைவிட்டு வெளிவந்து, பெருமான் சரணகமலங்களில் தண்டனிட்டுப் பலமுறை பிரதக்ஷிணஞ்செய்து, தோத்திரித்து நிற்க; சம்பகேசுவரர் சகல தேவசமூகங்களும் புஷ்பமாரிபொழியும்படி மறைந்தருளினர். முனிவர்களே! ஐராவதம் வழிபட்ட இக்காரணத்தினாலேயே ஐராவதக்ஷேத்திரம் என்றும், ஐராவததீர்த்தம் என்றும், ஐராவதேசர் மாலதிமோதநாயகர் என்றும், ஐராவதேசுவரி மாலதிமோத நாயகி என்றும், பெயர் வழங்குகின்றார்கள். என்றுரைத்து, இந்திராணிவழிபட்டதை இசைப்பாராயினர்.

இந்திராணி வழிபடுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கேள்வன்மறைந் திடத்தனிய ளாய்வெ தும்புங் கேடிலயி ராணியுமா விரதந் தன்னின், மூளுநசை கொண்டுசிதங் குயிற்றி யந்த முற்றிழையா ளருளியவா முல்லை நண்ணிக், கோளுடை யை ராவதங்கண் டதுபெற் றிட்ட கொடிமுல்லை மலராலம் பிகையி னம்பொற், றுளிடையர்ச் சித்துவரங் கொண்ட தன் மை சாற்றிடுமிச் சரிதமதைத் தகையாற் சொல்கேன்.

உலகியல்பொழித்த உத்தமமுனிவர்களே! இந்திரன் தாமரை நாளத்தில் ஒளித்ததையறிந்த, ஜம்பன்முதலிய அசுரர்கள் இதுவே தக்கசமயமெனநினைத்து, தேவலோகத்தை முற்றுகை செய்து, கொடியயுத்தந் தொடங்கினார்கள். இதையறிந்த அமரர்கள் தங்களாற் கூடியமட்டும் அமர்புரிந்தும் ஆற்றாராய் அகல்வதைத் தேவகுருவறிந்து, அக்காலத்திலே அசுவமேதமியற்றிப் பூவுலகத்திருந்த சந்திரவம்ச நகுஷனென்னும் அரசனைத் தேவலோகத்திற்கு அழைப்பித்து, மகுடாபிஷேகமியற்றித் தேவேந்திரனாக்கினர். அந்தநகுஷன் இந்திரபட்டம்பெற்று, எதிர்த்த அசுரரைச் சின்னபின்னப்படுத்திப் புறங்கண்டு, தேவர்களைக்காத்து, முன்னையினும் தேவலோகம் சிறப்படையும்படி அரசுபுரிந்துவந்தனன்.

இங்ஙனமிருக்க, இந்திராணி தனது நாயகனை விட்டுப்பிரியநேர்ந்த ஊழைநினைத்துத் துக்கித்துக்கொண்டு தான் தனிமையாக இருக்கின்றமையால், தனதுகற்பு அசுரர்முதலிய துஷ்டர்களால் பழுதாகாமலிருக்கவும், தனது நாயகன்சாபம் விரைவில் விமோசனமாகவும், அம்பிகைவிரதத்தை மேற்கொண்டு, ஆகாயகங்கையில் நீராடி, விதிப்படி களபமுதலிய பரிமளவஸ்துக்க

ளால் அம்பிகையைத் தினமும் ஆராதித்துவந்தனள். அக்காலத்திலே, பார்வதியார் அச்சுந்தரிக்குக் காட்சிதந்து, "ஓ சசியே! நீ அன்போடு நம்மைவழிபட்டாயாகையால், பூலோகத்திலே கைலாயத்திற்கு நிகர்த்த பெருமையுடையதும், சித்திக்ஷேத்திரமென்று பெயருடையதுமான சம்பகாரணிய மொன்றிருக்கிறது. அங்கு வீற்றிருக்கும் சம்பகேசுரர் காதலியாராய்விளங்கும் மனோபிரமணீ நாயகியாகிய நமது மூர்த்தத்தை விதிப்படி வழிபட்டும், சைத்திரமாத சுக்கிரவாரங்களில் விசேடபூசையியற்றியும் வருவையேல், அம்மூர்த்தத்தில் விளங்கி, உனக்குச் சகலவரங்களையும் பாலிப்போம்." என்று ஆஞ்ஞாபித்து அந்தர்த்தானமாயினர். இந்திராணி மிக்க சந்தோஷமுடையவளாய்த் தேவகுருவையடைந்து, தேவியார் கட்டளையை விண்ணப்பித்து, அவரநுஞையும் ஆசீர்வசனமும்பெற்று, அப்பொழுதே சில தோழியர்களோடு புறப்பட்டு, இந்நகரத்திற்குச் சமீபமாக வரும்போதே முல்லைமலரின் அதிபரிமளவாடை வருவதைக்கண்டு, ஆச்சரியசித்தமுடையவளாய் நகரை நெருங்கி, அங்கிருக்கும் ஐராவதத்தின் கைங்கரியத்தை மெச்சி, அன்றுமுதல் கல்யாணதீர்த்தத்தில் ஸ்நானமாடி, உபசாரவர்க்கங்களைத் தோழிமார்கள் தாங்கிச்செல்லக் கோயிலைவலம்வந்து, மனோபிரமணீ நாயகியார் சந்நிதியடைந்து, விதிப்படி அபிஷேக வஸ்துக்களாலும் சுகந்த வர்க்கங்களாலும் முல்லைமலர்களாலும் பூசித்து, தனது நாயகனுடைய சாபம் விமோசனமாகும்படிப் பிரார்த்தித்துவருவாள். இப்படி பன்னிரண்டுவருடம் பூசித்து வருங்கால், பூசைமுடிவில் ஒருநாள் தேவியார் பிரத்தியக்ஷமாகி, "ஓ அயிராணி! உன் பூசையை நாம் மதித்தோம்; சீக்கிரமே சம்பகேசுரர்கடாக்ஷத்தால் வெளிவரும் கணவனோடு இன்பநுகர்ந்து, முடிவில் நமதுபதவியை அடைவாய்." என்று கட்டளையிட்டு, அம்மூர்த்தத்திலேயே மறைந்தருளினர். இந்திராணியும் அவ்வரத்தைப்பெற்று, நாயகன்வரவை எதிர்நோக்கியிருந்து,

பின்பு அவனோடு சுவர்க்கம்புகுந்து, சர்வபோகங்களையும் அனுபவித்து, அம்பிகை அடிநிழலடைந்தனள். என்றுரைத்து, இந்திரன்விழாச்செய்சரித்திரத்தை இசைப்பாராயினர்.

இந்திரன் விழாச்செய்படலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாசவனற் றுருவாசன் சாப முற்று வடமுல்லை தனிற்பதும தீர்த்தந் தன்னுட், பாசமுறப் பதுமநா ளத்தி னூற்றே பதினாயிரம்வருடம் பதிவி ருந்து, தேசுதரு மைந்தெழுத்தைச் செபித்துத் தீர்வு தெரிந்தணுகி யரற்குவிழாச் செய்து தன்பா, னேசமிகுஞ் சுந்தரியோ டெய்தி வான நிகரிலின்ப நுகர்சரித நிகழ்த்து வேனால்.

சடைமுடிபுனைந்த தாபதசிரேஷ்டர்களே! இந்திரன் தாமரைநாளத்திலிருந்து வெளிவந்து, பெருமானையும் அம்பிகையையும்வணங்கி, தனதுலோகத்திலிருந்து சகல சமூகங்களையும் வரவழைத்துக்கொண்டு, ஐராவத தீர்த்தத்தில் நியமமுடித்து, தேவகங்கையினும் புனிதமுடையதும் சகல பாவங்களையும் நிவர்த்திப்பதுமான அத்தீர்த்தத்தை இரத்தின கும்பத்தில் பூரித்து, ஐராவதத்தின் மத்தகத்தில் வைத்து, தேவதுந்துபிகள்முழங்க ஆலயப்பிரவேசமாக்கி, சந்நிதியிலிருத்திப் பின்பு, ஆசமனசுத்திகள் இயற்றிக்கொண்டு, சித்திரைமாத சுக்கிலபக்ஷ பௌர்ணிமையில் கடகலக்கினத்தில் மத்தியானகாலத்தில் அபிஷேகம்புரிந்து, முல்லைமலர்களால் அருச்சித்து, வெள்ளையானை பரிசாரகமியற்றத் தனது குலபத்தினியாகிய இந்திராணி ததியோதனம் பக்ஷியம் பானகம் பழம் தாம்பூலம் முல்லைமலர்மாலை சந்தனமுதலியவை தாங்கித்தந்து, சாமரை ஆலவட்டம் சிவிறி முதலிய உபசாரங்களியற்ற, முனிவர்களும் அந்தணர்களும்

வேதபாராயணமும் உருத்திரசெபமுஞ்செய்ய, தேவஸ்திரிகள் நடனமிட, சிலர் இனிமையானகானஞ்செய்ய, சிலர் கண்டாநா தமுழக்க, ஐராவதேசனையும் மாலதிமோதநாயகியாளையும் பூசி த்து, அருக்கிய பாத்திய ஆசமநீயந்தந்து, வஸ்திரமும் உபவீ தமும் சமர்ப்பித்து, பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, பலவாறு துதிகளைக்கூறி நின்றனன்.

இவ்வாறு பூசைமுடிக்குங்கால், கங்காதரர் காட்சிதந்தருளி, "வாசவனே! உனது பூசைக்கும் பத்திக்கும் அரியதவத்திற் கும் மனமகிழ்ந்தோம்; வேண்டும் வரங்களைக் கேட்பாய்." என்று கட்டளையிட்டனர். தேவராஜன் ஆனந்தபரவசனுய்ச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, "கருணையங்கடலே! நான் சகலபாவமும் விமோசனமாகப்பெற்றுத் தன்னியனுயினேன்; தேவரீர் தெரிசனமே பெறத்தக்க பேருயிருக்க, இனி விரும் புவது என்னவிருக்கின்றது; ஆயினும், தேவரீரிடத்தும் அடி யவர்களிடத்தும் குன்றாத அன்பும், அசுரர்களைச் செயிக்கும் வல்லபமும், அஸ்திர சஸ்திரங்களும் அளிப்பதுமல்லாமல், இத் தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் தேவரீருக்கும் பதினுயிரவரு டகாலம் என்பெயர்விளங்கவும், பின்னர்ப் பலதிருநாமங்கள் பெறினும், கலியுகமுற்றும் மாலதிவனம் மாலதீபுரம் எனவும், மாலதிவனநாதன் மாலதிவனநாயகி எனவும், இப்பதுமதீர்த் தம் யான் கரந்திருந்த காரணத்தால் இந்திரதீர்த்தம் எனவும் பெயர்வழங்கவும், இம்மாத சுக்கிலபக்ஷத்தில் வருடந்தோ றும் அடியேன் விழாச்செய்யவும், அநுக்கிரகிக்கவேண்டும்." என்று வேண்டிக்கொண்டனன். அவற்றைச் செவியேற்றருளி ய சிவபெருமான் புன்முறுவலோடு பாசுபதாஸ்திரமுதலியவ ற்றையும் மற்றைவரங்களையும் தந்தருளி, அச்சிவலிங்கத்திலே யே மறைந்தருளினர்.

பின்பு, இந்திரன் ஐராவதேசருக்கு உற்சவஞ்செய்ய எத்த னித்து, விசுவகர்மனைக்கொண்டு அதிவிசித்திரமாக இந்திரலோ

கமெனவிளங்கும்படி அந்தணர் அரசர் வைசியர் வேளாளர் அநுலோமர் பிரதிலோமர் சங்கரர் முதலியோர் வீதிகளும், சர்வமங்களங்களும் நிறைந்துள்ள ஆவணவீதிகளும் உண்டாக்கி, சுவாமிக்கும் தேவிக்கும் பரிவாரங்கட்கும் ஆலயமுதலியவைகளும், கல்யாணமண்டப முதலியமண்டபங்களும், கோபுரம், மதில் தீர்த்தம் வாகனம் திருவாபரணமுதலியவைகளும், செய்வித்து, புதிய இரதத்தையுமுண்டாக்கித் துவஜாரோஹணஞ் செய்து, ஒன்பதுநாளும் காலந்தவருது உற்சவமும், பத்தாவதுநாளில் சித்திரைநக்ஷத்திரத்தோடுகூடிய பௌர்ணிமியில் தீர்த்தோற்சவமுஞ்செய்து, உற்சவதரிசனார்த்தமாகவந்த அன்பர்களுக்கும் அந்தணர்களுக்கும் யாசகர்களுக்கும் அன்னம் வஸ்திரம் தக்ஷிணைமுதலியன வெறுக்கத்தந்து, அவர்கள் ஆசீர்வசனம்பெற்று, ஒருவருஷம் அத்தலத்திலேயேவசித்து, சந்நிதிக்குப்பின்புறத்திலே தனியாக ஓர்ஆலயம்வகுத்து, அதில் தனதுபேரால் ஓர்சிவலிங்கம் ஸ்தாபித்து, முல்லைமலரால் பூசித்து, பெருமானுக்கு நித்தியபூசனைக்காக நூறுகிராமமும், மகோற்சவத்திற்காக நூறுகிராமமும், பிராமணர்கட்கு வேண்டிய பொருள்களும் தானமாகத்தந்து, பெருமானிடம்விடைபெற்றுக்கொண்டு, ஐராவதத்தில் சசிதேவியுடனேறி முன்னையவிபவத்தோடு சொர்க்கலோகமடைந்தனன்.

இவ்வாறு அடைந்த இந்திரனையும் சசிதேவியையும் அங்குள்ள நகுஷன்கண்டு, இந்திராணியினிடம் காதல்கொண்டு காமபாணத்திற்கு இலக்ஷியமாகி, வருந்தி வாடி, தேவகுருவையடைந்து, தன்குறையை முறையிட்டுக்கொண்டனன். அவர் அவனுக்குச் சாந்தங்கூறி, "ஓ நகுஷனே! அஷ்டவசுக்கள் தாங்கும்படி நீ சிவிகையில் பவனிவருவையேல் உன்னை இந்திராணி இந்திரனுகப்பாவித்து, மருவுவள்." என்று கூறினர். அவ்வாறே அவர்களைச் சுமக்கும்படிசெய்ய; அவர்கள் வெறுப்பால் பூமியில்வீழ்த்தலும் இந்திரன் முன்போலவே அரசனாகிச் சர்வவிபவத்து

டன் அரசுபுரிந்து கடைமுறையில் சிவபெருமான் திருவடிநீழ லயடைந்தனன். ஆகையாற்றான் முனிவர்களே! இந்திரபுர ம் என்றும், இந்திரேசுரர் பாசுபதேசுரர் என்றும், பெயர் வழங்குதலோடு அம்பிகைக்கும் சாந்தமதீயாநாயகி என்றும் பெயர்வழங்கலாயின. என்றுரைத்தருளிச் சிவகைங்கரியவிசே டத்தைச் செப்புவாராயினர்.

சிவகைங்கரிய விசேடமுரைத்தபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சிவநிசியிற் திருமுல்லை வாயில் வாழுந் தேவர்பிரான் கோட் டத்துட் டிருவி ளக்கிட், டவமகல வரனுக்கா னைந்து மாட்டி யலங்கரித்து நைவேதித் தமல நாமம், பவமகல வேசெபித்து விழித்தி ருந்து பாரணங்கொள் வோர்பலனும் பரமற் கான, கவரொளிப்பூன் முதலியன வீவோர்ச் பேறுங் கட்டுரைப்ப னறிஞருளங் களிக்கு மாறே.

சிவபத்தியிற்சிறந்த முனிவர்களே! இந்த க்ஷேத்திரத்தில் பெருமானுக்கு எவ்வளவு சிறியவஸ்துவை உபகரித்தாலும், அதன் பிரயோசனம் பெரிதாகுமென்பதையும், சிவநிசி எல்லா விரதத்திலும் சிரேஷ்டமுடையதாய் அதிகபலனைத் தரத்தக்க தாயினும் அதை இம்முல்லைவாயிலில் அநுஷ்டிப்போர் பெரும் பிரயோசனத்தை அடைவார்களென்பதையும், சத்தியமாகக் கூறுகின்றோம். உள்ளமடங்கிக் கேட்பீர்களாக.

அடியவர்கட்கு மிகஎளியவராய் வீற்றிருக்கும் இம்மாலதீவன நாயகரை விதிமுறையே பூசிப்பவர் சூரியலோகாதிபதியும், முல் லைமலராற் பூசிப்பவர் தேவேந்திரனும், ஊமத்தைமலரால் அருச்சிப்பவர் குபேரனுமாகின்றனர். கரும்பின்இரசத்தால் அபி

ஷேகிப்பவர் கோவுலக மடைகின்றார். தேன் அபிஷேகிப்போர் தேவநந்தனவனத்தில் விளையாடுகின்றார். தைலத்தாலும் பஞ்சகவ்வியத்தாலும் ஆட்டினோர் பஞ்சமகாபாதகங்களை நிவிர்த்திகின்றார். இளநீர் எலுமிச்சைஇரசம் மா வாழை பலா இவைகளாலும், கந்தவஸ்துக்களாலும், திருமஞ்சனமாட்டினோர் சிவசாயுச்சியமடைகின்றார். கந்தம் வஸ்திரம் முல்லைமலர்மாலை திருவாபரணம் பொற்பூணூல் இவைகளை அலங்கரித்தவர் பிரமபதமடைகின்றார். பிரதோஷகாலத்தில் வில்வம் அரசு செங்கழுநீர் தாமரை கருநெய்தல் இவைகளின் இதழ்களாலும், புஷ்பத்தாலும், பூசிப்பவர் தேவராசனாகின்றார். பத்தியோடு ஆவினெய்யால் விளக்கிட்டவர் அக்கினிபோலவும் ஆதித்தன் போலவும் ஒளியையடைகின்றார். *நால்வகை அன்னங்களாலும், பருப்புவர்க்கங்களாலும், †பக்ஷிய போஜ்ஜிய லேஹிய சோஷிய பாநீயங்களாலும் நைவேதித்தவர் சிவலோகமடைகின்றார். கற்பூரம் ஏலம் ஜாதிக்காய் சுக்கு இவைகளோடு அடைக்காய் சமர்ப்பித்தவர் அரசராகின்றார். தினமும் கற்பூர ஆராதனைசெய்வித்தவர் சூரியப்பிரபைகளையுடைய விமானத்தேறி தேவலோகமடைகின்றார். அருக்கியவட்டில்களும், தீபதூபகலயங்களும், அபிஷேககுடங்களும், தீர்த்தகலசங்களும், புஷ்பத்தட்டுகளும், நீராஞ்சனபாத்திரங்களும், மற்றும்வஸ்துக்களும் சமர்ப்பித்தவர் ஏகசக்ராதிபதியாகின்றார். நூறு சலாகைகளாலடர்ந்து பூர்ணசந்திரனைப்போன்ற குடையைப் பிரீதியோடு சமர்ப்பித்தவர் சிவசாரூபத்தை அடைகின்றார். இரத்தினகசிதமான காம்புகளையுடைய சாமரம் சமர்ப்பித்தவர் சிவவிரதமனுஷ்டிப்பவர்போல் பூவுலகத்தில் அரசராகின்றார்.

---

* நால்வகையன்னங்கள்:—பருப்பு வெல்லம் தயிர் புளி இவை தனித்தனிகலந்து சமைத்தவைகள்.

† இவற்றிற்கு முறையே தின்னல் உண்ணல் நக்கல் உறிஞ்சல் பருகல் எனக்கொள்க.

உத்தமவிரதமாய்விளங்கும் சிவசிவிரதகாலத்து இம்முல்லை வனநாதருக்கு ஏதேனும் ஒருதிருப்பணிக்கு உபயோகமாம்படி ஒருகாசேனும் உதவி, அருச்சனைசெய்விப்பவர் இந்திரபதவியை யும், முல்லைமலரால் அருச்சித்தவரும் திவ்விய இரசவர்க்கங்க ளால் அபிஷேகித்தவரும், விசேடமாகத்தீபங்களையேற்றினவர் களும் சாயுச்சியத்தையும் அடைகின்றார்கள். சிவராத்திரியில் பூசிப்பவர்கட்கு உதவியாகவிருந்து, கிருத்தியங்களியற்றுபவர் தமக்குமுன் பதின்மரும் தமக்குப்பின் பதின்மருமாகிய சுற் றத்தாரோடும் கைலையை யடைகின்றார்கள். முதல்யாமத்தில் பூசிப்பவர் சொர்க்கலோகத்தையும், இரண்டாம்யாமத்தில் பூசி ப்பவர் சிவசாரூபத்தையும், மூன்றாம்யாமத்தில் பூசிப்பவர் சிவ சாயுச்சியத்தையும், நான்காம்யாமத்தில் பூசிப்பவர் அறம் பொ ருள் இன்பம் வீடு என்னும்புருஷார்த்தங்களையும் அடைகின்றார் கள். பத்தியோடு நமஸ்காரஞ்செய்தவர் பதினாயிரம் அசுவமேத பலனையும், பிரதக்ஷிணம் கிரமப்படிசெய்தவரும் வில்வபத்தி ரங்களால் பூசித்தவரும் ஸ்தலயாத்திரைப் பலனையும், ஒன்று அல்லது இரண்டுமூன்றுதீபங்களை ஏற்றினவர் சூரியலோகத் தையும் அடைகின்றார்கள். ஆராதனைசெய்ய உதவியாயிருந்த பரிசாரகரும் சொர்ணத்தாற்செய்த வில்வதளங்களைச் சமர்ப் பித்தவரும் தம்பிதிர்களோடு சிவலோக மடைகின்றார்கள். அவ்வாறு இலக்ஷம் வில்வங்களால் அருச்சித்தவர் நந்தீசரைப் போல அணுக்கத்தொண்டராய்ச் சிவபெருமானுடன் எங்குஞ் சஞ்சரிக்கின்றார்கள். திவ்வியபுஷ்பம் கந்தமுதலியவை சமர்ப் பித்தவர்கள் சிவனாகின்றார்கள். கடலையை நைவேதித்தவர் கை லாசத்தையடைந்து ஆநந்திப்பார். கல்யாணதீர்த்தத்தில்மூழ்கி நியமமுடித்து முதல்யாமத்தில் தரிசனஞ்செய்துகொண்டு விழி த்திருந்தவர் குபேரசெல்வத்தையும், இரண்டாம் யாமத்தில் அவ்வாறு செய்தவர் சிவஞானத்தையும், மூன்றாம்யாமத்தில் விழித்திருந்தவர் சிவசாயுச்சியத்தையும், நான்காம்யாமத்தில்

அங்ஙனஞ்செய்தவர் சிவசாரூபத்தையுமடைகின்றார். நான்கு யாமம்வரையிலும் விழித்திருந்தவர் சிவமாகின்றார். முனிவர்களே! இத்தலத்தின்பெருமை இத்தன்மையதாகும். என்று கூறித் தேவமித்திரன் சரித்திரத்தைச் செப்புவாராயினர்.

தேவமித்திரன்கதிபெறுபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மிக்கபுகழ்ப் பாண்டிவள நாட்டு வேத மித்திரன்சேய் தேவ
மித் திரனென் வெய்யோன், றக்கமறை விதிகடந்து தந்தை
செல்வந் தனையழித்துச் சிராத்தஞ்செய் தகைமை கூறு, மைக்
கருங்கண் மனையாளைப் புடைத்துக் கொன்று மாடமலி முல்லை
யினில் வரைவின் மாதர், புக்கிருந்த சூழலினுட் புகுந்தி றந்து
பொருவில்கதி புகுந்தகதை புகல்வ னன்றே.

தவசித்திமிக்க தவத்தர்களே! பாண்டிவளநாட்டிலே, காசிப கோத்திரத்திலே, வேதமித்திரன் என்னும் ஒருபிராமணனிருந்தான். அவன் கல்வி செல்வங்களில் குறைவற்றவனாய்ச் சிவபூசாதுரந்தரனாய்ப் பிராமணாசாரத்தில் மிகப்பெரியவனாய் ஒழுகிவருங்காலத்தில், உலகஞ்செய்துள்ள பாவங்களெல்லாம் திரண்டுதித்தாற்போன்ற ஒருபுத்திரனைக் கர்மவசத்தாற் பெற்று, அவனுக்குத் தேவமித்திரனென்று பெயரிட்டு, சீராட்டி வளர்த்து, உரியகாலங்களில் உபநயனாதி சடங்குகளியற்றி, விவாகமுடித்துவைத்தான். அத்தேவமித்திரன் துர்க்குணங்களையே, மேன்மேலும் அனுசரித்துக் கண்டோர்பலரும் இவன் தேவசத்துருவேயென இகழும்படி சிவத்துரோகம் குருத்துரோகம் துர்ச்சனப்பழக்கம் பரதாரகமனம் முதலியவற்றையே விதியாகவும், தனக்குரிய சந்தியாவந்தனம் தேவபூசை விபூதி ருத்திராக்ஷ

தாரணம் வேதபாராயணம் முதலியவற்றை விலக்காகவும்கொண்டு, வாழ்ந்துவந்தனன்.

இவன் மனைவி சுத்தையென்பவள் வெகுஉத்தமியாதலால், தன்கணவன் விட்ட நற்செய்கைகளையெல்லாம் தான் தழுவினவளாய்த் தன்பெயருக்குத்தக்கபடி ஆசாரத்தையும் பெரியோரிடத்துப் பத்தியையும் உடையவளாய், உலகமெல்லாம் கற்புக்கரசியென்றுகொண்டாடும்படி பார்வதிபூசையையும் புருஷன்பாற் பத்தியையும் விரதமாகக்கொண்டு, அவர்சொல்லுக்கு யாதுந்தடைகூறாது நடந்துவந்தனள். இவ்வதமன் அவள்பெருமையைச் சற்றும் நிதானியாதவனாய் அன்னம் ஆடை ஆபரணம் முதலியவையுங்கொடாமல், ஒருபோதும் முகநோக்கி வார்த்தையுமாடாமல், அடித்தலும் வைதலுமே செய்துகொண்டு வருநாளில், இவன்தந்தை உயிர்துறக்க; அவனுக்குரிய கர்மங்களைமுடித்த மறுதினமே அவன் சொந்தசொத்தாயிருந்த ஐயாயிரம் பொன்னையும் சூதுமுதலிய துர்ச்செய்கைகட்கும், வேசிமுதலிய துர்ச்சங்கத்திற்கும், செலவிட்டு, அதுவும்போதாமல், வீடு நிலம் பாத்திரவகைகள் தன்மனைவிக்குள்ள சீதனசொத்துக்கள் முதலியவற்றையும் விற்று, அப்பொருள்களையும் இம்மை மறுமையை யோசியாது துர்விஷயத்திலேயே போக்கடித்து வறியனாய், தான் முன்புபழகியிருந்த கானம்பாடுதலும், மத்தளமுழக்குதலுமாகிய தொழிலினால் சொற்பப்பொருளைச் சம்பாதித்துக்கொண்டு அதனையும் அவ்வாறே செலவுசெய்து, வீட்டில் ஒருபோதும் தங்காமற்றிரிந்தனன்.

இவ்வாறுதிரியும் அப்பிராமணஅதமன் ஒருநாள் அத்திபூத்ததுபோல் தன்வீட்டுக்குவர; அவன்மனைவி நாயகன்வரவுகண்டு சந்தோஷங்கொண்டு, அவனது துர்க்குணத்தைச் சிறிதும்நினைத்து இகழாமல், பயபத்தியோடு உபசாரமியற்றி, உள்ளே அழைத்துப்போய் ஆசனத்திலிருக்கச்செய்து, தீர்த்தந்தந்து, சொல்லுவாள். "தேவரீர் என்னைப்பார்த்து வெகுநாளாகின்

றன; அது உமதிஷ்டம்; யான் கூறுவதல்ல: இன்று உமது பிதா பிதிர்தினமாகையால் சிராத்தஞ் செய்யவந்தீர்போலும்." என்று பிரியமாக இனியவசனங்களைக்கூறி நின்றாள். அதைக் கேட்ட பிராமணன் "ஓ பேதாய்! பிதிர்என்றால் என்ன? சிராத்தமாவதுயாது? அதைநான்செய்வது எதற்கு?" என்று பரிகசித்தான். அதுகேட்ட அந்தப்பிராமணி பதைபதைத்து, "நாயகனே! பிதிர்விஷயத்தில் பரிகாசமாக வார்த்தையாடினாலும் பாவஞ்சித்திக்கும்; அவசியம் தேவரீர் பிதிர்சிராத்தம் செய்தற்குப் பிரயத்தனஞ்செய்யும்; அது செய்திற்றான் நமதுகுலம் விருத்தியாகும்; செய்யாதொழியில் ஜீர்ணமாகும்; இது தேவரீருக்குத் தெரிந்ததுதானே?" என்று வணங்கினாள். அதைக் கேட்ட அவ்வதமன் கடுங்கோபங்கொண்டு, பின்னும்பழிக்கத் தொடங்கி, "பேதையாகியஉனக்கு சிராத்தமென்பதும், அது அவசியம் செய்யவேண்டுமென்பதும், அது விசேடமுடையதென்பதும், எவ்வாறுதெரியும்; நான் அறியாதவிஷயங்களை எனக்குப்போதிக்கின்றாய்." என்று கடுகடுத்தான்.

அதைக்கேட்ட அப்பத்தினி "கொழுநனே! என்மீது கோபிக்கவேண்டாம்; நான் சிறுவயதில் எனது தந்தைசொல்ல இச்சிராத்தவிசேடங்களைக் கேட்டிருக்கின்றேன்; தேவரீருக்கும் தெரிந்தபோதிலும் ஞாபகம்பண்ணினதாகக் கொள்ளவேண்டும்." என்று வணங்கிச்சொல்லுகின்றாள். "யாதொருவன் பிதிர்சிராத்தத்தைச் செய்யும்பொருட்டு யாசகஞ்செய்யாமல் உத்தமவிஷயத்தில் பொருள்சேர்க்கிறானோ அவனுக்கு அப்பிதிர்தேவதைகள் சகலபலன்களையும் அளிக்கின்றார்கள். சிராத்தகாலத்தில் ஔபாசனமுடித்தவன் கயாசிராத்தபலனை அடைவான்; என்று சிவபெருமான் அருளிச்செய்திருக்கின்றார். பத்தியோடு பத்தினியுடன் ஔபாசனமுடித்து, அந்த அக்கினியால் பிதிர்களை உத்தேசித்து அவிசைச் சமைத்து, மௌனமுடையவனாய் இருப்புப்பாத்திரங்கள் கலவாமலும் தன்னிழல்படாம

லும் பாகஞ்செய்தால் பிதிர்களுக்குப் பிரீதியாகும்; தக்ஷிணையில்லாத சிராத்தமும், அதிசீக்கிரம் செய்ததும், அகாலத்திற் செய்ததும், கெட்டதாகும்; காணாவல்லியென்னும் பூடோடு காட்டுக்கீரையுங்கூட்டி இராசத தாமத திரவியங்களில்லாமல் சாத்துவித திரவியங்களோடு உலோபம் டம்பம் இவைகளைவிட்டுச் சுசியாகச்செய்த சிராத்தம் கோடிபலனைத்தரும்; பிதிர்தினத்தில் எள்ளும் தருப்பையும் அவ்வீட்டில் கண்டமாத்திரத்தில் அப்பிதிர்கள் திருப்தியடைவார்களாகையால், * துரோணஅளவு எள்ளை வீட்டிலிறைத்து மேலேதருப்பைகளைப் பரப்பியே சிராத்தம் செய்யவேண்டும்; சுசியும் பத்தியுமின்றிச் செய்யில் அச்சிராத்தம் அசுரப்பிரீதியாகும்; இழிந்தோர் வீட்டில் தானம்வாங்காமலும், சிராத்தத்திற்காகப்பொருள் யாசிக்காமலும், ஸ்திரிசங்கமம், துஷ்டஜனசமூகப்பழக்கம், சூதாடுதல், பிறர் அன்னத்தைப்புசித்தல், சூத்திரசம்பாஷணைசெய்தல், எண்ணெயிட்டுக்கொள்ளுதல், பகலில் நித்திரைசெய்தல், கட்டிலிலும் மெத்தையிலும் துயிலல், விலக்கியுள்ள பதார்த்தங்களைப் புசித்தல், பகலில் இரண்டு வேளைபுசித்தல், இராவிற்புசித்தல், வீண்வார்த்தையாடல், வீட்டிலே கிணற்றில் ஸ்நானஞ்செய்தல், கந்தம்பூசல், புறம்பான ஸ்திரியோடு வார்த்தையாடல், ஆகிய இவைகள் செய்யாமல் கிருதயுகத்தில் ஒருவருஷமும், திரேதாயுகத்தில் ஆறுமாதமும், துவாபரயுகத்தில் மூன்றுமாதமும், கலியுகத்தில் ஒருமாதமும், விரதமனுஷ்டிக்கவேண்டுமென்று முனிவர் வாக்கியங்க ளிருக்கின்றன. சத்தியிருந்தால் சிராத்தம் நெருங்கிவர விரதத்தைவிசேடமாக அனுசரித்து, திவசத்திற்கு முந்திய நாள் பிராமணசமாராதனையும் இயற்றுதல் வேண்டும்.

பின்பு, சிராத்தநாளில் புண்ணியநதியில் ஸ்நானமாடி, நித்தியகருமமுடித்து, ஔபாசனஞ்செய்து, அந்த அக்கினியைப்

---

* துரோணம் - இரண்டுமரக்கால்.

பாகஞ்செய்தற்கு இல்லாளிடம் கொடுத்துவிட்டு, பத்தினியில்லாதவிதுரனும், கர்ப்பிணியான பாரியாளையுடையவனும், ஔபாசனஞ் செய்யாதவனும் வேறுவேதசாகை யோதுபவனும், வேதத்தையே ஓதாதவனும், பிறராற்பழிப்படைந்தவனும், தன் விரதத்திலே நிலையற்றபிரமசாரியும் ஆகிய இவர்கள்தவிர உத்தமபிராமணர்களைச் சிராத்தபோசனத்திற்காக வரித்து, அவர்கட்குத் தாம்பூலந்தந்து எண்ணெயும் எள்ளின்பிண்ணாக்குங் கொடுத்து, அப்பியங்கனஞ்செய்விக்கவேண்டும். இவ்வாறு யோசியாமல் வரித்தால், அப்பிதிர்கள் பற்களைக்கடித்துக்கொண்டு 'அதமனே உலகில் பழிக்கப்படுவாய், என்று சபிப்பார்கள். கர்த்தாவும் ஒருகண்ணை இழப்பான். அவ்வாறு ஆராய்ந்து வரித்த பிராமணர்களும் * அபிசிரவணம் என்னும் வேதமந்திரத்தைக் கேட்டுக்கொண்டே அவ்வன்னத்தைப்புசியாராகில் அச்சிராத்தம் அசுரப்பிரீதியாகும். என்று இவ்வாறான பல உத்தமசிராத்த விதிகளை என்தந்தை தனதுசீஷர்களுக்கு உபதேசிக்கக் கேட்டிருக்கின்றேன். புருஷரே! நீர் ஸ்நானஞ்செய்யவில்லை! சிராத்தபண்டங்களை விதிப்படி ஆராய்ந்து தேடவில்லை! பிராமணார்த்தமாக நல்லபிராமணர்களை வரிக்கவுமில்லை! பகற்போதும் ஆய்விட்டது; சிராத்தகாலம் தவறுகிறது; எவ்விதத்தினும் பிதிர் சிராத்தஞ் செய்தேதிரவேண்டுமே! தரித்திரன் இயன்றபொருளைக்கொண்டாவது சிராத்தம் தவறாது செய்யவேண்டும்; இது சாத்திரசம்மதமாகும்; அதற்கும் வழியற்றவனாயின் விரதமனுஷ்டித்து மனித சஞ்சாரமில்லாத காட்டிற்சென்று, சூக்குரலோடு அழவேண்டுமென்றல்லவோ விதிபிறந்திருக்கிறது: இவ்விதங்கூறிய உத்தம மத்திம அதம விதிகளில் ஏதுஞ்செய்யாதவன் மகாபாவியாகி, இரௌரவ நரகம்புகுந்து, ஒருமனுவந்தரகாலம் துன்பமடைந்து, அப்போதும் தீர்வில்லாமல் குள்

* அபிசிரவணம் - சிராத்தகாலத்தில் பிராமணர்கள் புசிக்கும்போது கர்த்தாவும் அவரைச்சேர்ந்தோரும் ஓதும்மந்திரம்.

ளாகரியாய்ப்பிறந்து, பலபிணங்களைத்தின்று இறந்து; அட்டையாய்ச்சனித்து, பின்பு மிலேச்சனுய்ப் பின் வேடனுய்ச் சனிப்பான். என்பிரியநாயகரே! எவ்விதத்தினுலாவது தயைசெய்து பாவத்துக்காளாகாமல் சிராத்தஞ்செய்து என்னையு மீடேற்ற வேண்டும்.'' என்று நமஸ்கரித்தாள்.

அவ்வுத்தமிசொல்லிய உத்தமவசனங்களை அவ்வதமன்கேட்டுப் பிரியமடையாமல், கடுங்கோபங்கொண்டு, கண்சிவக்கவும், உதடுதுடிக்கவும், மீசைநெறிக்கவும், உறுத்திநோக்கி, "அடீ பாவீ! அதமீ! எனக்கு நீயா புத்திகூறுகின்றவள். என்தந்தைக்குச் சிராத்ததினம், இன்னும் ஐந்துமாதமிருக்கிறது; கொடிய நினைவையுடைய நீ பலநூல்கள்வல்லவள்போலக் கூறவந்தாய்; குரு பதி பிதா இவர்களுக்கு ஒருதரமாயினும் தருமமாவது அதருமமாவது உபதேசிப்பவர் நரகமேயடைவாரன்றே? ஆகலின், நீயடைவதும் நரகமே:'' என்று வெருட்டி நன்ருகஅடித்து மூர்ச்சையடையச் செய்துவிட்டு, ஸ்நானம் சந்தியாவந்தனம் முதலியசெய்யாமல் பழயஅன்னத்தை விலாப்புடைக்கவுண்டு, தாம்பூலம் கைந்நிறையக்கொண்டு, வேசிவீட்டைச் சேர்ந்தான். அடுத்தவீட்டிலுள்ளோர் செய்தஉபசாரத்தால் ஒருவாறு மூர்ச்சைதெளிந்த அந்தப்பதிவிரதை தன்னை இவ்வாறு செய்த நாயகனிடத்தில் சற்றும் வெறுப்புவையாதிருக்க; வேசிவீட்டையடைந்த அந்தகுரூரன் சிலநாள்பொறுத்து மறுபடியும் வீட்டிற்குவந்தனன்.

அவன்வருகையைக்கண்ட சுத்தையென்பவள் முன்னையபடி உபசாரமியற்றிச் "சுவாமீ! ஐந்தாவதுமாதம் சிராத்தமென்றீரே அது எப்போது; அதைத் தெரிவித்தால் என்னுற்கூடிய மட்டும் வேண்டிய பதார்த்தங்களைச் சேகரிப்பேன்.'' என்று விநயமாகவினுவ; அப்பிராமணன் "அடீபாவி! நான் வேறுகிராமம் செல்லவேண்டியிருந்தது; அச்சிராத்தநாள் அங்குநேர்ந்

தபடியால், ஆறுநாளைக்குமுன்னமே நடத்திவிட்டேன்; அது இருக்க; சுமங்கலியாகியநீ எந்நேரமும் சிராத்தம் சிராத்தம் என்ற நினைவையேகொண்டு ஏன் என் ஆயுசை ஜீர்ணஞ்செய்கின்றாய்; என் உயிர்வாழ்க்கை உனக்கு விரோதமாக இருக்கிறதோ?" என்று முன்னையிலும் அதிககோபங்கொண்டு ஒரு கோலினால் நன்றாகப்புடைத்தான். அவ்வடியைச் சகியாமல் அந்த உத்தமஸ்திரியானவள் உயிர்துறந்து தான் அம்பிகையினிடம் வைத்த பூரணபத்தியால் சிவலோகமடைந்தனள்.

அதுகண்ட அக்கொடியவன் அவளுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனை முடித்து, அப்பெண்கொலைப்பாவம் ஆக்கிரகித்தலால் உன்மத்தனைப்போலத் திரிந்துவந்தனன். இவ்வாறாகியும் தன்காமவெறி தணியாதவனாகி, மனைவியிருந்த வீட்டையும்விற்று அப்பொருளைக்கைக்கொண்டு, தேசசஞ்சாரியாய்ப் பல தேயங்களைச்சுற்றி, பூர்வமியற்றியிருந்த சிறுபுண்ணியத்தினால் மாலதீவனத்துக்குவந்தான். அன்று சிவராத்திரியாகையால், மாலதீவனநாதர் சந்நிதியில்நடக்கும் விசேடத்தைநோக்கி, அன்று சாயங்காலம் கோயிலுட்சென்று, திரண்ட பத்தஜனங்களுக்குள் ஒருபுறத்திலிருக்கிற தாசிசமூகத்தைச்சேர்ந்து, இனியகானம்பாடி மத்தளமுழக்கினான். அத்தாசிகளுக்குள் ஒருத்தி அக்கானத்திற்கு மயங்கி, இவன் வலையிலகப்பட; இவனும் விரும்பிவந்தவிஷயம் அதுவாகையால் அவளழகைப் பருகி மயங்கி, அன்றிரவுமுழுதும் விழித்திருந்தனன். விடியற்காலையில் நம்பெருமானுக்கு நடந்த அலங்கார தீபாராதனைகாலத்தில் வெகு சமூகம் நிரம்பியிருந்ததனாலும், இவன் இரவுமுழுதும் நித்திரையின்றிக் கண்விழித்திருந்ததனாலும் தவறிவிழுந்து, ஜனங்களால் மிதியுண்டு சந்நிதிக்கு எதிரில் தாசிகூட்டத்திற்கு இடையில் இறந்தனன்.

இப்பாதகன் உயிர்துறந்த அப்போதே, யமதூதர்கள் பாசம் சூலம் பிண்டிபாலம் கொடுவாள் முதலிய கொடிய ஆயுதபாணி

களாய்க் கண்களில் தீப்பொறிபறக்கப் பற்களைக்கடித்துக்கொண்டு இக்கொடியபாதகனைக் கட்டுங்கள் குத்துங்கள் அடியுங்கள் எறியுங்கள் என்று கூறிக்கொண்டே சமீபித்து, பாசத்தால் இறுக்கினார்கள். உடனே நந்தியெம்பெருமான் கட்டளைப்படியே சிவகணங்கள் விமானத்துடன்வந்து, அப்பாசத்தி லிருந்தும் அவனைவிலக்கி, விமானத்திலேற்றிச் சிவலோகத்திற்கு அழைத்துக்கொண்டு போகத்துணிதலும், யமபடர்கள் பயந்து தூர விலகி, சிவகணங்கட்கு நமஸ்கரித்து, "கணச்சிரேஷ்டர்களே! இவ்வதமன் பிறந்ததுமுதல் மரித்ததுவரையில் செய்தபாவங்களை எழுதியெழுதி சித்திரகுத்தனும் கையோய்ந்துபோயினான்; அத்தகைய இவனை இவ்விமானத்திலேற்றவும், நீங்கள் உபசரிக்கவும், சிவலோகஞ்சேர்க்கவும் எங்ஙனங்கூடும்." என்று கேட்டார்கள். அதைக் கேட்ட கணங்கள் "ஓ தூதர்களே இவன் குலாசார தருமமுதலியவைகளைவிட்டு அதர்மங்களைக் கைக்கொண்டதும் மகத்தான பாதகங்களைச்செய்ததும் உண்மையேயாயினும் சிவராத்திரிகாலத்து இந்தச்சந்நிதியில் இன்றிரவு முழுதும் விழித்திருந்த விசேஷத்தாலும், அன்பர்கள் பாராயணஞ்செய்த சிவநாம பிரபாவங்களைக் கேட்டிருந்தமையாலும் மகாபுண்ணியனாயினான். இச்சிவநிசியில் எவ்வித இழிந்தகாரியத்தாலாயினும் விழித்திருந்தால் அவன் கைலாயபதிக்குப் பிரியனாய்ச் சமீபித்துவாழ்வான். மேலும், இச்சிவநிசியில் இந்த க்ஷேத்திரத்தில் நியதிதவறாது எவ்விரதமேனும் அநுஷ்டிக்கின்றவனதுபெருமை சிவபெருமானே கூறவல்லவராவர்." என்று தூதர்கட்குக்கூறி, அப்பிராமணனுக்குச் சர்வாலங்காரங்களுஞ்செய்து, விமானத்திலேற்றி உபசாரத்தோடு சிவலோகத்திற்சேர்த்தார்கள்.

"முனிவர்களே! மாலதீவனநாதர் சந்நிதியில் ஒருவித நியமத்தையும் முடிக்காமல் தாசிகாரணமாகப் பொழுதுபோக்கிய ஒருவன் செய்கையே இவ்வாறாயின், புண்ணியசிந்தையுடைய

வர்களாய் இந்தக்ஷேத்திரத்தில் அவ்விரதத்தை அனுஷ்டிப் போர்பலனை யானேை கூறவல்லேன்.'' என்று சூதமுனிவர் சொல்லிமுடித்து, சம்புதாசரும் சித்திரகன்மனும் முத்தியடைந்த சரித்திரத்தை மொழிவாராயினர்.

சம்புதாசரும் சித்திரகன்மனும் முத்தியடைந்தபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சம்புமகிழ் தலங்கடொறும் பணியியற்றிச் சம்புதா சப்பெயர்கொள் பெரியோன் சீர்த்தி, பம்புமுல்லைப் பதியின்க ணரன்பா லன்பாற் பணிபுரிந்து வீடுற்ற டரிசு மிந்த, வம்புவிபோற் றுயர்மயிலைச் சித்ர கன்ம னன்பின்றி முல்லையினு லயத்திற் கற்கள், நம்புபரத் தையின்காலி லுறுத்தா வண்ண நல்குதொகுத் துய்ந்ததுமே னவிற்று வேனால்.

ஞானமிக்கோங்கியநற்றவர்களே ! சிவதருமத்தைச் செய்ய வேண்டித் தன்னில்லம்விட்டுப் புறப்படுகின்றவரும், சிவதருமத்தைச்செய்ய யாசகத்தை மேற்கொண்டேனென்று நாணம் விட்டு யாசிக்கின்றவரும், அடிவைப்புகள் ஒவ்வொன்றிற்கும் அசுவமேதபலனையடைவார். அத்தருமத்தைச் சீலத்துடன் செய்தோர்பெருமையும், அதற்குப்பொருளை உபயோகப்படுத்தினவர் பெருமையும், கூறத்தக்கன அல்லவாகும். சிவதருமத்திற்கு உபயோகமாகியபொருள் ஆலம்விதைபோல விருத்தியடைகின்றது. அத்தருமத்திற்கு உபயோகமானதேகம் சிவதேகமென்றே சொல்லவேண்டும். சிவதருமவிசேடங்களை உள்ளபடி அறிந்துசெய்தவர், சர்ப்பமுதலிய விஷஜந்துக்களாலும், பிசாசு துர்க்கிரகமுதலியவற்றாலும், பீடிக்கப்படமாட்டார். இப்படிப்பட்ட சிவதருமத்திற்கு இடையூறுசெய்கின்றவர் இம்மையிலே

பலதுன்பங்களை யனுபவித்து, மறுமையிலே இரௌரவநரகத்தையடைந்து, கணக்கற்றகாலம் கழித்து, குள்ளநரியாய்ப் பிறப்பார். பல உத்தமக்ஷேத்திரங்களில் ஆராய்ந்துசெய்த பெரிய சிவதருமபலனும், இம்மாலதீக்ஷேத்திரத்தில் செய்த ஒரு சிறுதருமபலனும் சமமாகுமாகையால், இந்த க்ஷேத்திரத்திலே உத்தமகைங்கரியங்களைச் சம்புதாசர் சிரத்தையோடு இயற்றியும், சித்திரகன்மனென்பவன் சிரத்தையின்றி இயற்றியும் முத்தியடைந்த சரித்திரங்களைக் கூறுகின்றோம். கேட்பீர்களாக.

பம்பாநதிக்கரையிலே, பிரமசரியநிலையை அனுஷ்டித்துக்கொண்டு சிவதீக்ஷைபெற்றுச் சிவனடியார்குழாங்களுடன்கூடி விபூதிருத்திராக்ஷமே பூஷணராய்ச் சகல வேதவேதாந்த சாரக்கிரகிதராய்ச் சிவகதைகளைக்கேட்டுக் கசியுஞ்சிரத்தையுடையவராய்ச் சம்புதாசரொன்னும் பெயரோடு பிராமணச்சிரேஷ்டர் ஒருவர்இருந்தார். அவர் சிவாலய ஜீர்ணோத்தாரணஞ் செய்தலே கைங்கரியமாகக்கொண்டு வீடுகள்தோறும் யாசிக்குங்கால், அக்கைங்கரியத்திற்காக எப்பொருள் கிடைப்பினும் தான் அதில் சற்றும் ஆசரியாது, பிராமண இல்லங்கள்தோறும் பிக்ஷை ஏற்றுண்ணுதலுடையராய், தன்முயற்சியாற்சேர்ந்த பொருளைக்கொண்டு தொழிலாளிகட்குக் கூலிகொடுத்து, ஜீர்ணமாயுள்ள மதில் சுவர் கோபுரம் குளம் தூபிமுதலியவைகளைச் சிறுகச்சிறுகப் புதுக்கிவைப்பதோடு தன்பெயரில் ஒருதீர்த்தமும் உண்டாக்குவார். இவ்வாறாகப் பல தலங்கடோறும் சிவபுண்ணியங்களை விசேஷமாகச்செய்துவரும் அச்சம்புதாசர் ஏகாம்பரத்தையடைந்து, அங்கு சிலபணிகளைச் செய்துமுடித்து, மாலதீக்ஷேத்திர விபவங்களை ஒருசிவநேசரால் கேள்விப்பட்டு, சந்தோஷசித்தராய் மாலதீநகரடைந்து, அங்கே ஜீர்ணமாயுள்ள கோயிலைக்கண்டு, இதைப் புதுக்கிவைக்கவேண்டுமென்று ஆசைகொண்டு கல்யாணதீர்த்தத்தில்மூழ்கி, பாசுபதேச்சுரனாயும் சாந்தமத்தியாநாயகியானாயும் நியமந்தவறாது காலங்களில் தரி

சித்துக்கொண்டு, அக்கிரகாரத்திலேயே பிராமணர்கள்வீதிகளில் ஏற்றுண்டு, வீடுகள்தோறும் கைங்கரியத்திற்காக யாசிப்பதேயன்றி, மற்றும் நகரங்களிலும் தேசங்களிலும் அப்போதைக்கப்போது சென்று, பலவாறுயாசித்துவந்து, திருமதிலும் ஆலயமும் கோபுரமும் மற்றுள்ளவைகளும் புதுக்கிக்கொண்டு வருவாராயினர்.

இவ்வாறு நடந்துவரும்போது, மயிலைநகரத்திலே, சித்திரகன்மனென்னும் பெயருடையவனாகிய ஒருபிராமணன் தான் உத்தமகுலத்திற் பிறந்தவனாயிருந்தும், அதமகுலத்தின் கிரியைகளையுடையவனாயிருந்தான். அவன்எந்நேரமும் பாடுந்தொழிலுடையவனாயினும் அவ்விசைத்தமிழை நம்முடையசிவபெருமானுக்குப் பிரீதியாம்படி அவர்சந்நிதியில் ஒருநாளாயினும் ஒருக்ஷண நேரமும் பாடியறியான். உதயாஸ்தமனம்வரையில் தினமும் தாசிகள்வீடே தேடிச்சென்று, அவர்களாற்சன்மானிக்கப்பட்டு, லீலையாகப்பாடுதலும் சிரித்தலும் வெறித்தலுஞ்செய்து, அவர்களை மகிழ்வித்துத் தானுமகிழ்வடைந்து வருவான். இத்துர்க்குணசிரேஷ்டன் ஒருநாள் தனது நல்லூழ் பிடர்பிடித்துத்தள்ள, இத்திருமுல்லைவாயிலையடைந்து, தானுய்யுமாறு பெருமான் கோயில்முதலியவற்றை விசாரியாது பாத்தையர்வீதி எங்குள்ளதென்று கேட்டுச்சென்று, ஒருகிருகத்திலேநுழைந்து, அங்குள்ள ஒருவாலிபப்பெண்ணைக்கண்டு, மதிமயங்கி, அவள்வசப்பட்டுத் தனது பொருளெல்லாம் அவளிடங்கொடுத்து உண்ணுதலும் உறங்குதலும் அவளிடமேகொண்டு சிலகாலம்வசித்தான்.

அத்தாசியானவள் பழிபாவத்திற்குப் பயந்தவளாதலால், "நாம் பெருமானுக்கு அடிமைப்பட்டிருந்தும், அவர்பணிக்கு உதவாமல் நம்மிடம்வரும் வாலிபனையணைந்து காலங்கழிக்கில், பின்பு யமபடர்களால் செம்பினாற்செய்து, அக்கினியிற்காய்ச்சிய உருவங்களைத்தழுவச்சொல்லித் தண்டிக்கப்படுவோமே!" என்

று சிந்தித்து, அச்சங்கொண்டு தினந்தோறும் காலங்களில் கோயிலுக்குச்சென்று, தொண்டுசெய்துவருவாள். அவள் எவ்விடஞ் செல்லினும் காதலாற்பிரியாது தொடரும் இச்சித்திரகன்மன் ஒருநாள் கோயிலுக்குட்போம்போது, அவளுடன்போய், தெய்வகதியாகச் சுவாமிசந்நிதியிலும் அம்பிகைசந்நிதியிலும் தன்னை மறந்து கைகள்கூப்பித்தொழுது, அங்கே திருப்பணிதொடங்கிச்செய்துவரும் சம்புதாசர் சேர்த்துவைத்துள்ள கற்கள் சந்நிதியில் இறைப்புண்டிருந்தபடியால், அவைகள் தனதுபிரியநாயகியாகிய அத்தாசியின் கால்களில் நடனகாலத்து உறுத்துமேயென்ற பரிதாபத்தால் அதிக விரைவாகவெடுத்து, வேறிடத்திற் குவித்தான். இவ்வாறுசெய்த பதிதனாகியஅவன் அக்ஷேத்திரத்தில் வாசம்பண்ணிவந்ததனாலும், சிவதரிசனபலத்தாலும், கற்களை அப்புறங்குவித்தகைங்கரியத்தாலும், அத்தலத்தில் சிலநாள் அவளோடுவசித்து இறந்தபின், முத்தியையடைந்தனன். முனிவர்களே! சிரத்தையின்றிக் கற்களைக்குவித்த அவனே சிவபதவியை இவ்வளவு எளிதிலேயே அடைந்தானாயின், அதிக பத்தியோடு திருப்பணிமுடித்த சம்புதாசர்பெற்ற பெரும்பேற்றை என்னென்றுரைப்போம். நெடுநாள் இங்ஙனம் திருப்பணிகளைக் குறைவின்றிச்செய்து, சிவசாயுச்சியமடைந்தனர் என்றுரைத்தருளித் தொண்டைமான்சக்கரவர்த்திச் சரித்திரத்தைத் தொகுத்துரைப்பாராயினர்.

தொண்டைமான்சக்கரவர்த்தி முத்தியடைந்தபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குலவுபுகழ்த் தொண்டைமான் முல்லைக் காட்டிற் குலவுழியோர் மணியோசை கேட்டுத் திமை, கலவுகுறும் பனையடர்த்

துத் தோற்று மீள்வான் கரிபூருங் காலதையக் கற்பாற் கட்டி, நிலவுமுடிப் பெருமானற் காட்சி யீந்தே நிகழ்ந்தி தேவனையும் விடுக்கச் சென்றவ், வலவர் தமை வென்றரற்குக் கோயில் கண்டு வளருமுத்தி பெற்றதிறம் வகுப்பன் மன்னே.

சிவஞானமோங்கிய தெய்வீகமுனிவர்களே! சோழவளநாட்டிலே, நாகபட்டணத்திலே, அரசுபுரிந்த சோழபூபதியென்னும் அரசன் வேட்டத்தின்மேற் காதல்கொண்டு, அதற்குரிய நாய் முதலியமிருகங்களும், வலைமுதலிய பொருள்களுங்கொண்டு, வேடக்கூட்டங்கள் புடைசூழ, வீரர்முதலிய சமூகங்களோடு இருணிறைந்த பலஆரணியங்கடோறுஞ்சென்று, யானை யாளி சிங்கம் புலி பன்றி முட்பன்றி மான்முதலிய மிருகங்களைக்கொன்று, காலங்கழித்துவருநாளில், ஒருநாள் சேஷமலையைக்கண்டு, அது காடடர்ந்து மிருகங்கள் மிக்குடையதாயிருந்தபடியால், அங்கே வேட்டையாட விருப்பங்கொண்டனன். அப்போதே வேடர்கள் * ஒடியெறிந்து வலையிறுக்கி, இரைதூவி பார்வை மிருகங்களைவிட்டு, பறைதட்டி, கொம்புமுதலியவற்றைமுழக்கி, பதுங்கியிருந்த மிருகங்களை எழுப்புவாராயினர். வீரர்கள் அம்மிருகங்களைத் தப்பியோடாவண்ணம் தமது பாணங்களுக்கு இரையாக்கிச் சந்தோஷசித்தராய்த்திரிய; அரசனும் தனித்துக் கொடிய மிருகங்களைத் தேடிக்கொண்டு, மனோரமணியமாய் விளங்கும் அக்காட்டில் உலாவிவரும்போது, ஒரு தேமாநிழலின்கண்ணே மான்பெடை நின்றாற்போல ஒருகன்னிகைநிற்கக் கண்டனன்.

உடனே, அவ்வரசன் வேட்டையைமறந்து, அக்கன்னிகையினது கேசாதிபாதமளவும் செறிந்துள்ள அதிவிசித்திர அழகின் பெருக்கைக் கண்களாரப்பருகி, இவள் இவ்வனதெய்வமோ! இலக்குமியோ! இரதியோ! இந்திராணியோ! அறியேனென்று

---

* ஒடியெறிதல் - காடுகளைவெட்டிச்சரித்தல்.

ஐயுற்று, அச்சத்தோடே அவளருகிற்சென்று, "ஓநங்காய்! நீயார்? நீ இருக்கத் தவஞ்செய்த தேயம் எது? உன்னைப்பெற அருந்தவமியற்றினவர் யாவர்? நீ யார்வசமாயிருக்கின்றனை" என்று இனியவசனமாகக்கேட்டனன். அவ்வணங்கு சற்று நாணினவளாய்த் தலைகுனிந்து, கால்விரலால் பூமியைக் கீறிக்கொண்டு, "அரசனே! நானோ நாகலோககன்னி: என்னுடைய தந்தை தனுசனென்னும் பெயருடைய நாகராசர்: அவர் கல்வி குணம் அழகு வீரம் முதலியன ஒருங்குடைய பூவுலக அரசனுக்கு என்னை விவாகஞ்செய்விக்க விரும்பியிருக்கின்றார்: என்தந்தையினது உத்தரவின்றி யான் தனித்து இங்கே வார்த்தையாடல் எனக்கடாது: என்பெயர் முதலியவை அறியவிரும்பில், இப்பிலவழியாகச்சென்று, என்தந்தையால் அறிவதை அறியலாமென்று கூறி மறைந்தனள். அவள் மறையவே, அரசன் கலங்கி, மன்மதபாணங்கட்கு இலக்காகி, உள்ளடங்கா விரகனாகி, அவள் சொன்னபடி முயற்சிசெய்ய விரும்பி, ஒருவாறு மனம்வலித்து, சைந்நியங்களை நாடுசேரக் கட்டளையிட்டனுப்பிவிட்டு, தான் பிலத்தின்வழியாக நாகலோகஞ்சென்று, அங்கே தனுஜனென்னும் நாகவேந்தனால் சன்மானிக்கப்பட்டு, தனது எண்ணத்தைத் தெரிவித்தனன். நாகராசன் அரசனுடைய வீர தீர பராக்கிரம குணவிசேடங்களைக்கண்டு, தான் எண்ணியிருந்த சிந்தனை எளிதின்முடிந்தமையால் சந்தோஷசித்தனாய், தன்மகளை நல்ல சுபவோரையில் பாணிக்கிரகணஞ் செய்விக்க; அரசனும் அக்கன்னிகையோடு சுரதலீலா விநோதனாய் வாழ்ந்திருந்தான்.

சிலகாலஞ்சென்றபின், அக்கன்னிகை கருப்பங்கொண்டு சுபவோரையில் ஒரு ஆண்மகவைப்பெற்றுச் சீராட்டி வளர்த்துவர; அரசன் அக்குழந்தையினது அழகு குணம் முதலியவற்றை நோக்கி, மகிழ்ந்து வாழுநாளில் ஒருநாள் தனது இராச்சிய ஞாபகம்வரவே, தான் அரசைப்பிரிந்து வெகுநாளாயினமையை எண்ணித் தன்னபிப்பிராயத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தி

னன். அதையுணர்ந்த அக்கன்னிகை வெதும்பி, வியர்த்துச் சோர்ந்து, "அரசே! என்னை வலியவிரும்பி விவாகமுடித்த நீர், இப்போது பிரியத்துணிந்தது அரசநீதியாமா! அன்றியும், அரசர்க்கரசாகிய உமக்குப்பிறந்த இவன் அவ்வரசசெல்வத்தைத் துறந்து, இங்கிருக்கவிரும்புவனோ? இதற்கென்னசெய்வீர்; கூறும்." என்று முறையிட்டுப்பணிந்தனள். அதுகேட்ட அரசன் திடுக்கிட்டு, "பெண்ணே! என்மூத்த மனைவிக்குக் குமாரனிருக்க; இளையவனாகிய இவன் அரசனாவனோ? ஆகான்; இத்தொண்டைக்கொடியைக் குறிப்பாகச்சுற்றிக் கடலில்எறிந்தால், யாதுங் கவற்சியின்றிக் கரைவருவானாயின், அப்பொழுது இவன் அரசசிம்மாசனத்தில் ஏறுதற்குரியவனாவான்." என்று கூறினான். அதுகேட்டஅவள் துணிந்து அவ்வாறேசெய்ய; குமாரனும் சிவகிருபையால் ※ திரையேந்திவிடுக்கக் கரைசேர்ந்தனன். அதுகண்டஅரசன் ஆச்சரியசித்தனாய்த் தழுவி, அவனைத் தன்பட்டப்பிள்ளையாகக்கொண்டு, கன்னிகையோடு தன்னகரடைந்து, அவ்வரலாற்றையெல்லாம் எல்லோரும்வியக்கக்கூறி, **தொண்டைமான்** என்று திருநாமமிட்டு, கணிதநூலோர்வகுத்த சுபதினத்தில் மகுடாபிஷேகஞ்செய்து, முனிவர்களும் அந்தணர்களும் கவிவாணர்களும் மஞ்சளரிசிதூவி, சக்கரவர்த்தியென்று பட்டப்பெயர்தந்து, ஆசீர்வதிக்க உலகபாரத்தை அவன்றோளிற்சுமத்தி, சிலகாலம் வாழ்ந்திருந்து சிவபதமடைந்தனன்.

அங்ஙனம் அரசுபெற்ற அத்தொண்டைமான்சக்கரவர்த்தியார் † முத்திநகரம் ஏழனுள் ஒன்றாகிய காஞ்சிபுரத்தை இராஜ

※ திரையாற்கரையேறினமையின், திரையன்என்பதும் வழக்கம்; இதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்பாடிய பெரும்பாணாற்றுப் படையானும் உணர்க.

† முத்திநகரம் ஏழாவன:—அயோத்தி மதுரா மாயை காசி காஞ்சி அவந்தி துவாரகை.

தானியாக்கி, நீதிகோடாது தருமங்களெல்லாம் தங்கரத்தில் குடியேறிவாழ, எதிர்த்தோரைவென்று அடுத்தோரைக்காத்துப் பொதுவறச் செங்கோல்செலுத்தி, தந்தையாகிய சோழபூபதியிலும் சிறக்க, 'மகவைக்காக்கும்மாதாவைப்போல, குடிகளைக் காத்துவந்தனர். இவ்வண்ணம் அரசுசெய்து வரும்போது மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் இவைகளின்பிரபாவங்களைப் பெரியோர்களால் கேள்வியுற்று, அவற்றை வழிபட்டுப் புண்ணியங்களையீட்ட எண்ணங்கொண்டு, அரசை அமைச்சர்பால் ஒப்புவித்துவிட்டு, தமது தமையன்மார்களும் நால்வகைச்சேனைகளும் புடைசூழ, நல்ல சுபதினத்தில் புறப்பட்டு, ஒவ்வொருதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பெருமானைத் தரிசித்துத் திருவருள் பெற்று, அவ்வத்தலங்களினும் இயன்ற திருப்பணிசெய்து, வசித்துவருவாராயினர். அக்காலத்திலே, இத்திருமுல்லைவாயிலானது ஜீர்ணதிசையடைந்து முல்லைக்கொடிகளால் மறைபட்டிருக்க; அதனையறியாத அச்சக்கரவர்த்தியார் அவ்வழியாகவரும் போது சூரியாஸ்தமனமானபடியால், சேனாதிபதிகளைநோக்கி, இம்முல்லைக்காட்டில் இரவுவசித்து, உதயத்தில் அப்புறத்திலுள்ள க்ஷேத்திரத்திற்குச் செல்வோமென்று உத்தரவுசெய்தனர். அதுகேட்டசேனாதிபதிகள் சைந்யங்களைநிறுத்தி, அரசருக்கு இருப்பிடமுண்டாக்கித்தர; அரசரும் அந்திக்கடனை முடித்து, உணவுண்டு, அவ்விராக்காலம் சந்திரகாந்தியால் விளக்கமடைந்திருந்தமையாலும், முல்லையினது தளிர் இலை மொட்டு மலர் முதலியவும் மூன்றுயோசனையளவு மணம்வீசுதலாலும், தம்முடைய அயர்வுதீர அரியணைமீதிருந்துகொண்டு, யாத்திரையிலே ஆங்காங்குப் பெருமானருளிய காட்சிவிசேடங்களைப் பதினைந்துநாழிகைவரையிலும் சிந்தித்துக்கொண்டிருந்தனர். இவ்வாறு சக்கரவர்த்தியார் இருக்கும்வேளையில் திசைகளெல்லாம் செவிடுபடும்படி ஒரு மணியோசைகேட்க; அரசர் திடுக்கிட்டுத் தெளிந்து, "இங்கு அருகில் ஏதோ தேவாலயமிருக்கவேண்டும்:

அங்கே அர்த்தஜாமபூசை நடக்கின்றதுபோலும்." என்றுநினைத்து, ஹரஹரஹரவென்று தியானித்து, இருகரமும் உச்சியேற்றி வணங்கியிருந்தனர்.

பின்பு சூரியனுதித்தவுடன் நியமமுடித்து, அமைச்சர்களைக் கூவி விஷயமறிவித்து, "இங்கு அருகில் ஏதோ க்ஷேத்திரமுண்டுபோலும்: அதை வினவுக." என்றுகட்டளையிட; அவர் புடைபரந்து, அங்குள்ளாரை விசாரிக்குங்கால், அவர்கள் மந்திரிகளைவணங்கி, "இங்கே சிவாலயமுதலிய ஆலயமில்லை; இவ்வனத்திற்குச் சமீபத்தில் வேளாளருக்குரிய * இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றுன புழற்கோட்டமென்று ஒரு கிராமம் உண்டு; அதில் நிகரற்ற வல்லமையோடு சகல துர்க்குணங்களுமுடைய ‡ வாணன் ஓணன் என்னு மிருவர்கள் பகைப்புலங்களை வென்று, ஆங்காங்குள்ள உன்னதவஸ்துக்களை அபகரித்து, வெண்கலக்கபாடம் பவளத்தூண் வெள்ளெருக்கந்தூண் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட ஒருகோட்டையையுடையவர்களாய்க் கொடுங்கோலோச்சி, வாழ்கின்ருர்கள். யாங்களும் கடவுள்வழிபாட்டிற்கு நேரமின்றி அவரையே வழிபட்டுக்கொ

* இருபத்துநான்கு கோட்டங்கள்.—புழற்கோட்டம் புலியூர்க்கோட்டம் ஈக்காட்டுக்கோட்டம் மணவூர்க்கோட்டம் செங்காட்டுக்கோட்டம் பையூர்க்கோட்டம் எயிற்கோட்டம் தாமற்கோட்டம் ஊற்றுக்காட்டுக்கோட்டம் களத்தூர்க்கோட்டம் செம்பூர்க்கோட்டம் ஆமூர்க்கோட்டம் ஈதூர்க்கோட்டம் வெண்குன்றக்கோட்டம் பல்குன்றக்கோட்டம் இளங்காட்டுக்கோட்டம் காலியூர்க்கோட்டம் சிறுகாரைக்கோட்டம் படுவூர்க்கோட்டம் கடிகைக்கோட்டம் சந்திரிகைக்கோட்டம் குன்றபத்திரக்கோட்டம் வேங்கடக்கோட்டம் வேலூர்க்கோட்டம் என்பன.

‡ இவர்களைக் குறும்பன் கார்த்தன் என்பதும் வழக்கம்.

ண்டு காலங்கழிக்கின்றோம்.'' என்று அக்கோட்டையின் பெருமையையும் அவர்களின் துர்க்குணங்களையுங்கூறினார்கள். அதையுணர்ந்த மந்திரிகள் இன்றிரவுகேட்ட பேரோசை அக்கதவத்தின் மணியோசையேயாகுமென்று தீர்மானித்து, அரசருக்கு உணர்த்த; அவரும் அச்சிருங்காரமுடைய கோட்டையைக்காண ஆவல்கொண்டு, தமது தமையன்மாரும் சைந்நியங்களும் புடைசூழும்படி யானையின்மேலேறி, இந்திரனைப்போலச் சென்றனர். அவ்வரசர்வரவை வாணன் ஓணன் என்னுமிருவரும் செய்குன்றுகளில் ஏறிப்பார்த்துத் தொண்டைமான் சக்கரவர்த்தியே என்றுணர்ந்து, கடுங்கோபங்கொண்டு, "ஓகோ இவன்தந்தை போர்புரிந்து நம்மைத் துரத்தியதால், நாம் அப்பொழுது அவனது பராக்கிரமத்திற்கு அஞ்சி இங்கேவந்து ஒளித்தோம்; இனி நாம் எளியவராய் இவனுக்கு இடங்கொடுப்பது தகுதியன்று." என்று தாம்பெற்றுள்ள அற்பசெல்வத்தாலும் வைரவக்கடவுளின் உபாசனுபலத்தாலும் வலிந்து எதிர்ந்தனர். அரசர்பெருமான் கருணையால் பலவாறு சாந்தமொழியுரைத்துங் கேளாது மீறி எதிர்த்ததால், தாம் சைந்நியங்கட்கு யுத்தக்குறிப்பைக் காட்டி, தனுவளைத்து நாணேறிட்டு குணத்தொனிசெய்தனர். உடனே இருபடைகளும் கைகலந்து யுத்தஞ்செய்யுங்கால், சக்கரவர்த்தியார் சேனைகள் ஏவியகணைமுத்லியவற்றால், அநேகர் காலறுந்தோரும், கையொடிந்தோரும், குடல்சரிந்தோரும், குருதிவழிந்தோரும், பல்விழுந்தோரும், வில்லொடிந்தோருமாய்மடிய எஞ்சியவர்கள் இடந்தேடி மூலைக்குமூலையோடி ஒதுங்கினார்கள்.

இவ்வாறு சைந்நியங்கள் சக்கரவர்த்தியார் படையினால் கலக்கமடைந்ததையுணர்ந்த வாணனும் ஓணனும் நாணமுடையராகிக் கானுருவண்ணம் சேணிடைமறைந்து அமோகமானபாணங்களைச்சொரிய ; சக்கரவர்த்தியார் அவர்கள் விடும்பாணங்கட்கெல்லாம் மாறுமாறான பாணங்களைவிட்டு, காற்றிற் பஞ்சா

கத் தூற்றிவிட்டனர். இதையறிந்து பரிபவமடைந்தவர்களாய்ப் பிறரறியாவண்ணம் மறைந்து, கோட்டைக்குட்சென்று, வைர வர் சந்நிதியையடைந்து, தமதிருகுறைகளைமுறையிட்டு வழிபட்டு, அக்கடவுட்குரிய மந்திரத்தை உச்சரித்தார்கள். உடனே அம்மந்திரவிசேஷத்தால் அவ்வைரவர் கருணைகூர்ந்து ஓர்பூதத்தைப் படைத்துணையாக அனுப்ப; அதன் சகாயத்தால் பின்னும் போருக்கு அறைகூவிக்கொண்டுவந்தார்கள். சென்றதிசை தெரியாமல் ஓடின அவர்கள் பின்னும் யுத்தத்திற்கு வந்தார்களென்று ஒற்றராலறிந்த அரசர்பிரான் இறும்பூதுகொண்டு, சைந்நியசமூகத்தோடு போர்க்களம்புகுந்தனர். அப்போது அப்பூதமானது மேககர்ஜ்ஜனைபோன்ற பெரியமுழக்கமிட்டு மலைக்குகைபோன்ற வாயைத்திறந்துகொண்டோடி, சைந்நியங்களையெல்லாம் 'பசித்தவன் பழையஅன்னத்தையுண்ணுவதுபோல' உண்டொழித்தது. சற்றுநேரத்திற்குள் கனவிற்கண்ட கந்தர்ப்பநகர்க் காட்சியைப்போல் சைந்நியங்களெல்லாம் அழிய, காவலரும் தமையன்மார்களும் வெருண்டு வெயர்த்து ஓடிப்போனதை அரசர்பெருந்தகையாரறிந்து, அஞ்சுதலையுடையவராய், இதென்னவிபரீதம்; மாயாசாலங்களெல்லாம் இதற்கீடாகாதெனமதித்து, இனிநாம் தனித்திருந்தால் இக்கொடியரால் சிறையிடப்படுவோம். என்று சிந்தித்து, தாமேறியிருந்த யானையைத் தமது பாடிவீட்டையடையுமாறு முல்லைக்காட்டின்வழியாய், விரையச்செலுத்தினர். அத்தருணத்து அங்கே, முல்லைக்கொடிகளின்கீழ் மறைந்துள்ள பெருமான் பகைப்புலத்திற்கு அஞ்சி மீளும் அதிதீவிரமுடைய மாணுக்கருக்குத் தாம் ஆசிரியராய் வலியவந்து ஆட்கொண்டருளுதல்போல, பகைப்புலத்திற்கு அஞ்சிமீளும் அதிதீவிரமுடைய அத்தொண்டைமானையும் வலிந்தாண்டு, தன்னடித் தொண்டராகக்கொள்ளத் திருவுளம்பற்றி, அவர் ஏறிவரும் யானைக்காலைத் தாம் மறைந்துள்ள கொடிகளால் தகைந்தருளினர். கொடிகளால் தகைப்புண்டயானை,

அப்புறம், கால்பெயராதுநிற்றலை அரசருணர்ந்து, "சிறைப்படா வண்ணம், தப்பிப்பிழைத்து உயிரோம்ப நினைவுபூண்ட நமக்கு இத்தன்மையதாகிய, ஓர் இடையூறு நேர்ந்ததே!" என்று சிந்தாக்கிராந்தராய் யானைமேலிருந்தபடியே தமது வாளையுருவி அக்கொடியைவெட்டினர்.

அவ்வெட்டு பெருமான் திருமுடியிற்படுதலால், குருதிபெருகக்கண்ட அரசர் திடீரென்று கீழேஇறங்கிச் சோதித்துப்பார்க்க; இலிங்கவடிவாயுள்ள தேவதேவன் வெட்டுண்டு உதிரத்தால் தோயப்பெற்றிருப்பதைக்கண்டு பயந்து, பெருமூச்செறிந்து, நிலத்திற்சோர்ந்து விழுந்து, பின்றெளிந்தெழுந்து, கண்ணீர் மலையருவிபோல் வடிய, பெருமானை இருகரத்தால் ஆரத்தழுவி "அண்ணலே! இக்கொடியேனது வாளினல் வெட்டுண்டபடியால் இவ்வரிய திருமேனி எவ்வாறுவருந்துகின்றதோ? அந்தோ! அந்தோ! பாவியிலும்பாவியானயான் வேதங்களும் வேதனும் பலநாளுந்தேடியுமுணராத திருமுடியைக் காணப்பெற்றும் இங்ஙனம் காணும்படி பூர்வம் என்னதவறிழைத்தேனே! தெய்வமே! தேவர்விஷயத்தில் அபசாரமியற்றி, யான்மாத்திரம் இரௌரவநரகமடையாமல், என்பரம்பரையையும் அந்நரகத்திலடைவிக்க நேர்ந்தவனாயினேன்! எனதுமூதாதைகளெல்லாம் சிவபத்தரும், சிவபூசாதுரந்தரரும் சிவலிங்கமூர்த்த ஸ்தாபகருமாக வாழ்ந்திருந்து முத்தியடைய, யான்ஒருவன் அவற்றிற்கெல்லாம் முழுவிரோதியாக உதித்தது என்னபாவத்தினலேயோ? சங்கரனே! பூர்வம் வாதவூரடிகள்பொருட்டு மண்சுமந்ததும், பாணபத்திரர்பொருட்டு விறகுசுமந்ததும், அருச்சுனன்பொருட்டு வில்லடிபொறுத்ததும், இத்தகைக்கொடிய வருத்தமாகாவே! தேவரீருக்கு இங்ஙனம் அபசாரமியற்றியும் இன்னும் உயிர்விட்டேனில்லை! என்னை என்னசெய்தால் இப்பாவம்தீருமோ? அறியேன்! என்னுடலை யாரேனும் கொய்து கொய்து காக்கைக்கு இரையாக்காரோ? செக்கிலிட்டுச் சிதை

க்காரோ? உலையிலிட்டு உருக்காரோ? ஆ! ஆ! யான் கொடியன்! கொடியன்! நான் அரசனுகையால், என்னை ஒருவரும் அங்ஙனம் செய்யத் துணியார்: என்னை நானே செய்துகொள்வதே உசிதம்." என்று பலவாறு புலம்பிப் புலம்பி, புரண்டு புரண்டு, கண்ணீர்வாரக்கலுழ்ந்து, உடல்நடுங்க, உரைதடுமாற, உன்மத்தங்கொண்டவனைப்போல ஓடியும், உலாவியும், திகாந்தங்கள் செவிடுபடும்படி அலறியும், மூர்ச்சையாகித் தெளிந்தெழுந்து, தமதுகளத்தில் அவ்வாளைப்பூட்டி அரியத்தொடங்கினர்.

பெருமான் ஈதுணர்ந்து சகியாதவராய் அவனைக் காக்கத் திருவுளங்கொண்டு, பிரத்தியக்ஷமாகி, "அடியவனே! உன்னால் நாம்வெட்டுப்படினும் மாசுஅடையேம்; நாம் எக்காலத்தும் * நிர்மலமணியே" என்று திருவாய்மலர்ந்துகொண்டே எழுந்தருளி, அவர்கரத்தைத் தமது அருமைத் திருக்கரத்தால் பற்றித் தடுத்தருளினர். இங்ஙனம் பெருமான் வாகனஆரோகணமுமில்லாமல் விரையவெழுந்தருளுதல்கண்டு, பின்னேதொடர்ந்தவர்களாய்ச் சுவாமிக்கு வலப்புறத்தில் அம்பிகையும், இடப்புறத்தில் நந்திதேவரும், மற்றைப்பரிசனங்கள் சூழவும்அணுகி, அரசனுக்குக் காட்சிதந்தருளவே; தேவர்கள் தேவதுந்துபி முழக்கிப் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். இவையெல்லாங்கண்டஅரசர் ஆச்சரியசித்தராய், ஆனந்தங்கொண்டு, பலவாறு பெருமான்புகழையும் கருணையையும்பாடிக் கூத்தாடி, திக்குகள்தோறும் ஆனந்தமேலீட்டால் ஓடி, எம்பெருமான் அருமைக் கோலத்தை நாடி, பலதிருநாமங்களாற்றுதித்தனர். தேவதேவர் அத்துதிகளைச் செவிகளிலேற்றருளி, அவனைநோக்கி, "அன்பனே நீ யாதுக்கும் அஞ்சவேண்டாம்; நமது பத்தருக்குள் நீ சிரேஷ்டனுயினை; உன்னைத்தடுத்தாளவேண்டியே இவ்வாறுசெய்

---

* இதற்குப்பரியாயநாமமாக அகளங்கரத்னேசுரர் மாசிலாமணியீசுரர் என்றுவழங்குவர்.

தோம்; நீ இக்குஞ்சாமூர்ந்து, நமது நந்திதேவனைத் துணையா கப் பெற்றுச்சென்று, உன்பகைவர்களைவென்று, நமக்குத் திரு ப்பணிசெய்து, இவ்வாரணியத்தையும் முன்போலவே நகரமா க்கி, வாழ்ந்திருந்து நமது பதவியை அடைவாய்.'' என்று திரு வாய்மலர்ந்தருளிக் கணங்கள்புடைசூழ அம்பிகையோடு அந்தர் த்தானமாயினர்.

ஆதொண்டைச்சக்கரவர்த்தியார் யானையேறிச்சென்று, பகை வர்கோட்டையை முற்றுகைசெய்ய; நந்தியெம்பெருமான் உங் காரசப்தத்திலேயே சேனைகளையும் வைரவர்விடுத்தபூதத்தை யும் அழித்தனர். அதுகண்டு உக்கிராவேசத்தோடு எதிர்த்த வாணன் ஓணனென்னும் இருவரையும் சக்கரவர்த்தியார் அதி சுலபமாகவே யமபுரஞ்சேர்த்து, கோட்டையுட்சென்று, அதன் சிருங்காரங்களையெல்லாம் நோக்கி வியந்து, அங்கே அரியவஸ் துக்களா யுள்ளவைகளையெல்லாம் கைக்கொண்டு, திருமுல்லை வாயிலை அடைந்தனர். நந்தியம்பெருமான் இப்பொழுதும் அத்தலத்திலே சிவபெருமான் காட்சிதந்தருளியபோது இடப் புறமாகநின்ற கோலத்தையும், அரசனுக்குத் துணைசென்றதை விளக்குமாறு, அக்குறும்பர்கோட்டையை நோக்கிக்கொண்டு வீற்றிருக்குங் கோலத்தையும் உடையவராய் எழுந்தருளியிருக் கின்றனர்.

பின்பு, சக்கரவர்த்தியார் விதிப்படி கல்யாணதீர்த்தத்தில் ஸ்நானமுடித்துப் பெருமானையும் முல்லைக்கொடியால் மறை பட்டிருந்த அம்பிகையையும் சேவித்துக்கொண்டிருக்கும்போ து, முன்பு அஞ்சியோடிய சைந்நியங்களும் தமையன்மார்களு ம் வந்துசேரவே, அவர்களோடு அந்தக்ஷேத்திரத்திலேயே சில காலம்வாசஞ்செய்துகொண்டு, தமது இராஜதானியிலிருந்து வேண்டுந்திரவியங்களைவரவழைத்து, சுவாமிக்கும் அம்பிகை க்கும் கருப்பக்கிருகங்கள்கட்டுவித்து, குறும்பர்கோட்டையி

லிருந்து கொண்டுவந்தவைகளில் வெள்ளெருக்கந்தான் மிக அரியவஸ்துவாக இருந்தமையால், அவற்றை அந்தராளமண்டபத்திலமைத்து, அந்தமண்டபத்தோடு மஹாமண்டபம் பத்திமண்டபம் கல்யாணமண்டபம் அலங்காரமண்டபம் நிருத்தமண்டபமுதலியனவும், பரிவாரதெய்வங்கட்குச் சிற்றாலயங்களும் வகுத்து, குறும்பர்கோட்டையுள் எழுந்தருளியிருந்த வைரவக்கடவுளையும் தேவதேவன் கட்டளைப்படியே கோயிலுக்குள் காவற்கடவுளாக ஸ்தாபித்து, ஆலயம்வகுத்து, பிராகாரம் கோபுரம் நந்தனவனம் உய்யானவனம் முதலியனவும் விதிப்படியமைத்து, கல்யாணதீர்த்தம் இந்திரதீர்த்தம் அக்கினிதீர்த்தம் யமதீர்த்தம் நிருதிதீர்த்தம் வருணதீர்த்தம் வாயுதீர்த்தம் குபேரதீர்த்தம் ஈசானதீர்த்தம் சூரியபுஷ்கரணி சந்திரபுஷ்கரணி என்னும் அருமைத்தீர்த்தங்களையும்புதுக்கி, மாலதீவனமென்னும் நாமத்தை மாலதீபுரமெனமாற்றி, சுவாமிக்கு **நிர்மலமணீசுரர்** எனவும், அம்பிகைக்கு*இ**லதாமத்யாம்பிகா** எனவும், திருநாமங்களைச்சாற்றி, மாடவீதிகளும் புகழாவரணவீதிகளும் ஆவணவீதிகளும், ஆதிசைவர் அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர் முதலியோர்களுக்குத் தனித்தனிவீதிகளும்வகுத்து, அவரவர்களையும் குடியேற்றி, சுபவோரையமைந்தசுபதினத்தில் பெருமான் கட்டளைப்படியே கும்பாபிஷேகமுடித்து, மகோற்சவமும் செய்வித்தனர். அத்தருணத்து ஆதொண்டைச்சக்கரவர்த்தியாரது தமையனாகிய சோழனும் சந்நிதிக்குவடபுறத்தில் குணதிசைமுகமாக குசலவபுரீசருக்குஎதிரில் ஓர்சிவலிங்கந்தாபித்து, **சோழபுரீசர்** என்று திருநாமஞ்சாத்தி வழிபட்டனன். இங்ஙனம் சக்கரவர்த்தியார் நித்தியநைமித்திகங்களையும், மாத

---

* இதற்குப்பரியாயநாமமாக **கோடியிடையம்மை** என்றும், அகளங்கரத்னேசுரர் என்பதற்கிணங்க **அகளங்காரத்னநாயகி** என்றும் வழங்குவர்.

விழாமுதலிய விழாக்களையும், குறைவிலாது நடத்திக்கொண்டு, சிலகாலம் வசித்திருந்து முடிவில் சிவபதமடைந்தனர்.

முனிவர்களே! இம்மாலதீவனமான்மியத்தை யாவர் சிந்தையோடு திருக்கோயில் நதீதீரம் மண்டபம் வனம் சுத்தகிருகம் முதலியஇடங்களில் பாராயணஞ்செய்கின்றார்களோ அவர்கள் எவ்வளவு கீழ்மையோராயினும் கொலையாதி பஞ்சமகாபாதகங் களினீங்கி, இம்மையில் புகழ் செல்வம் ஆரோக்கியம் போகம் புத்திரப்பேறு முதலியவை குறைவறப்பெற்று, மறுமையிலே சிவபோகமே காணியாகக்கொண்டுவாழ்ந்து, சிவசாயுச்சியத் தையடைவார்கள். இதுசத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

வேத மோங்குக வேந்தனு மல்குக
கோதனங்கொண்டன் மாரியோ டோங்குக
நாதன் பொற்கழ லுடிடு மன்பர்க
ளேத மற்றே யிலங்க வுலகெலாம்.

ஆசாரியர்திருவடிகளேசரணம்.

உ

கணபதிதுணை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அருளிச்செய்த திருவலிதாயத் தேவாரம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனறூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே. (க)

படையிலங்குகரமெட்டுடையான்படிறாகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வன்னுறைகோயின்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசும்வலிதாயம்
அடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே. (உ)

ஐயனெய்யனணியன்பிணியில்லவனொன்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடையேந்தவல்லான்றிருமாதோடுறைகோயில்
வையம்வந்துபணியப்பிணிதீர்த்துயர்கின்றவலிதாய
முய்யும்வண்ணநினைமின்னினைந்தால்வினைதீருந்நலமாமே. (ங)

ஒற்றையேறதுடையானடமாடியோர்பூதப்படைசூழப்
புற்றினாகமரையார்த்துழல்கின்றவெம்பெம்மான்மடவாளோ

டுற்றகோயிலுலகத்தொளிமல்கிட வுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மதுவேசரணாவதுபாடும்மடியார்க்கே. (௪)

புந்தியொன்றிநினைவார்வினையாயினதீரப்பொருளாய
வந்தியன்னதொருபேரொளியானமர்கோயிலயலெங்கு
மந்திவந்துகடுவன்னொடுங்கூடிவணங்கும்வலிதாயஞ்
சிந்தியாதவவர்தம்மடும்வெந்துயர்தீர்தலெளிதன்றே. (௫)

ஊனியன்றதலையிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரியின்னுரிபோர்த்துழல்கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறைவைத்தவெம்மாதிமகிழும்வலிதாயந்
தேனியன்றநறுமாமலர்கொண்டுநின்றேத்தத்தெளிவாமே. (௬)

கண்ணிறைந்தவிழியின்னழலால்வருகாமனுயிர்வீட்டிப் [யின்
பெண்ணிறைந்தவொருபான்மகிழ்வெய்தியபெம்மானுறைகோ
மண்ணிறைந்தபுகழ்கொண்டடியார்கள்வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான்கழலேத்தநம்முண்மைக்கதியாமே.()

கடலினஞ்சமமுதுண்டிமையோர்தொழுதேத்தநடமாடி
யடலிலங்கையரையன்வலிசெற்றருளம்மானமர்கோயின்
மடலிலங்குகமுகின்பலவின்மதுவிம்மும்வலிதாய
முடலிலங்குமுயிருள்ளளவுந்தொழவுள்ளத்துயர்போமே. (௮)

பெரியமேருவரையேசிலையாமலைவுற்றாரெயின்மூன்று
மெரியவெய்தவொருவன்னிருவர்க்கறிவொண்ணாவடிவாகு
மெரியதாகியுறவோங்கியவன்வலிதாயங்தொழுதேத்த
வுரியராகவுடையார்பெரியாரெனவுள்கும்முலகோரே. (௯)

ஆசியாரமொழியாரமண்சாக்கியரல்லாதவர்கூடி
யேசியீரமிலராய்மொழிசெய்தவர்சொல்லைப்பொருளென்னேல்
வாசிதிரவடியார்க்கருள்செய்துவளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடையாரடியாரெனப்பேணும்பெரியோரே. (௧௦)

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருண்மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுண்ஞானசம்பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே.(கக)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

தொண்டைநாட்டிலே

பாடியெனவழங்கும்

திருவலிதாயக்ஷேத்திரமான்மியம்.

அநாதிமுத்தசித்துருவாய்விளங்கும் சதாசிவமூர்த்தி ஆன்மாக்களை உய்வித்தலினிமித்தம், பளிங்குநிறமுடையதாய் வடகீழ்த்திசையைநோக்கி உச்சியில்விளங்கும் ஈசானமுகத்தையும், பொன்னிறமுடையதாய்க் கீழ்த்திசையைநோக்கிவிளங்கும் தற்புருட முகத்தையும், பயங்கரத்தோடு கருநிறமுடையதாய்த் தென்றிசையைநோக்கி வலத்தோண்மேல் விளங்கும் அகோர முகத்தையும், செந்நிறமுடையதாய் வடதிசையைநோக்கி இடத்தோண்மேல் மாதர்முகம்போல்விளங்கும் வாமதேவமுகத்தையும், வெண்ணிறமுடையதாய் மேற்றிசையைநோக்கிப் பிடரிமேல் விளங்கும் சத்தியோசாதமுகத்தையும், ஒவ்வொருதிருமுகத்திலும் சோமசூரியாக்கினிகளென மும்மூன்றுவிழியாகப் பதினைந்துவிழிகளையும், கொன்றை சந்திரன்முதலிய அணிந்த சடைமுடியையும், வேல் அபயம் சூலம் மாத்திரைக்கோல் துடி என்பனவற்றையேந்திய வலக்கரங்களைந்தையும், வரதம் மாதுளம்பழம் பாம்பு செபவடம் நீலோற்பலம் என்பனவற்றையேந்திய இடக்கரங்களைந்தையும், இவ்வாறே இலக்கணமமைந்த முப்பத்திரண்டு உறுப்புக்களையும், இரண்டுதிருவடிகளையும், பதி

னெட்டு வயதையுங்கொண்ட பளிங்குருவத்தை உடையவராய், யாவர்க்கும் வினைகளைச்சேதித்து, மெய்யுணர்வளித்துக்கொண்டு, சதாசிவ தத்துவத்திலே, பதுமாசனத்தில் விளங்குவர்.

இங்ஙனம்விளங்கும் அக்கடவுள் சிருட்டிகாலத்திலே, சத்யோசாத முகத்தினின்றும் கௌசிகஇருடியை யுதிப்பித்து, அவர் பொருட்டாக அந்தமுகத்திலே காமிகம் யோகஜம் சிந்தியம் காரணம் அசிதம் என்னும் ஐந்தாகமங்களையும், வாமதேவ முகத்தினின்றும் காசிபஇருடியை யுதிப்பித்து, அவர்பொருட்டாக அந்தமுகத்திலே தீப்தம் சூக்குமம் சகச்சிரம் அம்சுமான் சுப்பிரபேதம் என்னும் ஐந்தாகமங்களையும், அகோரமுகத்தினின்றும் பாரத்துவாஜஇருடியை யுதிப்பித்து, அவர்பொருட்டாக அந்தமுகத்திலே விஜயம் நிசுவாசம் சுவாயம்புவம் ஆக்கிநேயம் வீரம் என்னும் ஐந்தாகமங்களையும், தற்புருட முகத்தினின்றும் கௌதமஇருடியை யுதிப்பித்து, அவர்பொருட்டாக அந்தமுகத்திலே இரௌரவம் மகுடம் விமலம் சந்திரஞானம் முகவிம்பம் என்னும் ஐந்தாகமங்களையும், * ஈசானமுகத்தினின்றும் அகத்தியஇருடியை யுதிப்பித்து, அவர்பொருட்டாக புரோற்கீதம் இலளிதம் சித்தம் சந்தானம் சருவோக்தம் பாரமேசுவரம் கிரணம் வாதுளம் என்னும் எட்டாகமங்களையும் தோற்றுவித்து, அவ்வவற்றின்படியே சமயம் விசேடம் நிருவாணம் ஆசாரியாபிடேகம் என்னும் சிவதீக்ஷைகளைச்செய்து, ஆதிசைவராக்கி, உலகத்தை நல்வழிப்படுத்துமாறுஅவ் வைவர்களுக்கும் கட்டளையிட்டனர்.

அவர்கள் அவ்வாறே அந்தணர் அரசர் முதலியோர்க்கு சமயதீக்ஷைமுதலிய சிவதீக்ஷைபுரிந்து, இருவினையொப்பும் மலபரிபாகமும் வருவித்து, ஞானமுதிர்ச்சியையுடைய ராக்கினர்.

---

* ஈசானமுகத்தினின்றும் ஆத்திரேயஇருடியை யுதிப்பித்ததாகவும் ஆகமத்திலுண்டு; அவர் கோத்திரத்தாரும் உளர்.

இந்த இருடிகள் கோத்திரமைந்தும் முறையே சிவ † கோசரம் சிகாகோசரம் சோதிகோசரம் சாவித்திரிகோசரம் வியோமகோசரம் எனப்பெயர்பெறும். இவ்வைந்து கோத்திரத்தும் உதித்தவரே ஆதிசைவர்; பிரமதேவர்முகத்திற்றோன்றிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷைபெற்றவர் மகாசைவர்; சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரியரும் வைசியரும் அநுசைவர்; சிவதீக்ஷைபெற்ற சூத்திரர் அவாந்தரசைவர்; சிவதீக்ஷைபெற்ற அநுலோமர் பிரவரசைவர்; சிவதீக்ஷைபெற்ற மற்றையோர் அந்தியசைவர். இவற்றை, "அரியசதா சிவனென்போ னனுதிசைவ னவன்பா லவதரித்த சிவமறையோ ராதிசைவ ரிவர்பால், உரியசிவ தீக்கைபெற்ற பூசுரர்மா சைவ ருயர்ந்தவரசன்வணிக னநுசைவ ராவார், பெரியகுவ ளைப்புயத்தோ னவாந்தரசை வன்சீர் பெருசவன்ன ளுதியநு லோமர்பிர வரராம், விரியவணி மிசையொழிந்தோ ரந்தியசை வத்தோர் விரித்திடுமேழ் சைவவித மிவையெனநூல் விளம்பும்.,, என்னுஞ் செய்யுளானு முணர்க. இதுநிற்க.

மேற்கூறிய அவ்விருடிகளுள் பாரத்துவாசஇருடிஎன்பவர் அன்பர்களுக்கு அநுக்கிரகித்துக்கொண்டு இத் தொண்டைநாட்டிலே சஞ்சரிக்குங்கால், பற்பல விருக்ஷசமூகங்களாலும் பகையின்றிவாழும் பற்பல பசுபக்ஷிகளாலும் நீர்வள நிலவளங்களாலும் நிகரின்றிச் செழிப்புற்றுவிளங்கும் ஒருதெய்வீகம்பெற்ற தபோவனத்தைக்கண்டு, அதியற்புதமுடையவராய் உவகைமேற்கொண்டு, அதை விட்டகலமனமில்லாமையால் அங்கே தம்பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதில் ஸ்நானமுதலிய நியதிமுடித்து, ஆசனத்தமர்ந்து, சிவபெருமானை இதயத்திருத்தி எண்ணிறந்தகாலம் செயற்கரியமாதவஞ் செய்துகொண்டிருந்தனர். அக்காலத்திலே, ஒருநாள் சிவபெருமான் திருவுள்ளமகி

† கோசரம்-கோத்திரம்.

ழ்ந்து, விஷ்ணுமூர்த்திமுதலிய தேவகணங்களும் வசிட்டமுனிவர் முதலிய முனிகணங்களும், நந்திதேவர்முதலிய பிரமதகணங்களும், புடைசூழ்ந்து துதித்துவர, அரம்பையர் நடிக்க, அன்பர்கள் ஹரஹரஹரவென்று கோஷிக்க, இடபவாகனத்திலாரோகணித்து, உமாதேவியாரோடு திருக்காட்சி தந்தருளலும்; அவர் நிஷ்டைதெளிந்தெழுந்து, அடியற்ற மரம்போல வீழ்ந்து, பன்முறை சாஷ்டாங்கமாகப்பணிந்து, வலம்வந்து கூத்தாடி, இரு கைகளும் சிரசிலேறிக்குவிய, கண்ணீர் பெருக, உடல்புளகிக்க, உள்ளங்குழைய, "தேவதேவ மகாதேவ சம்போ சங்கர சதாசிவ தயாநிதே" என்று நாத்தழும்பேறப் பலவாறு துதித்துநிற்க; பெருமான் கருணைகூர்ந்து, "தவத்தால் வாடிய தநயனே! நினது அன்பின் நிலைமைக்கு மகிழ்ந்தனம்; வேண்டிய வரங்களைப் பெறக்கடவாய்." என்று கட்டளையிட்டனர்.

அது கேட்ட பாரத்துவாசர் "எளியேனிடத்தும் எம்பெருமான் வைத்த கருணையை என்னென்று வியப்பேன்." என்று புகழ்ந்து, அன்புமேலிட்டு ஆனந்தக்கூத்தாடி, "எந்தையே! அடியேனையாட்கொண்டது மெய்ம்மையேல் இவ்வாறே ஜகன்மாதாவாகிய உமாதேவிசகிதராய்ப் பரிவாரங்களோடு அடியேனுடைய பூசையை அங்கீகரித்து இத்தலத்திலே எக்காலத்தும் சாநித்தியராய் எழுந்தருளி இருத்தல்வேண்டும்; அன்றியும் என்னுடையபூசையை உரிமையாகக் கொண்டு வீற்றிருந்தருளுதலால் தேவரீருக்குப் * பலிதாயநாதரெனவும், இத்தலத்திற்

---

*பலிதாயநாதர்-பூசையை உரிமையாகக்கொண்டவர்; பலி-பூசை; தாயம் - உரிமை. பலிதாயமென்பது தமிழில் வலிதாயமென்றுயிற்று. திருபலீசுரர் என்பது திருவல்லீசுரரென இக்காலத்து மருவி வழங்குகின்றது. இத்தலபுராணம் முற்றுங் கிடைக்கவில்லை; கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் தயைசெய்தனுப்பில் வந்தனத்தோடேற்று அச்சிட்டு வெளிப்படுத்துவேன்.

குப் பலிதாய க்ஷேத்திரமெனவும், இத்தீர்த்தத்திற்கு பாரத்துவாச தீர்த்தமெனவும் பெயர்வழங்கவேண்டும்; இதன்றியும், இத்தீர்த்தத்தில்மூழ்கி தேவரீரைவழிபடுவோர் எத்தன்மையரோயாயினும் அவர் சகலபாவங்களினின்றுநீங்கி இகபர மோக்ஷங்களை எளிதிலடையவும் வேண்டும். இவையே அடியேனுடைய வேண்டுகோள்" என்று விண்ணப்பித்துப் பிரார்த்திக்க; அக்கடவுள் அவர் பிரார்த்தனைக்கிரங்கி, அங்ஙனமே அவர்பூசனையை அங்கீகரித்து, ஜகன்மாதாசமேதராய்ச் சயம்புமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு, பரிவாரங்களோடு வீற்றிருந்தருளினர்.

பின்பு அத்தலத்திலே, பிரமவிஷ்ணுக்களும் பிரகஸ்பதிமுதலியதேவர்களும் அநுமார்முதலியவர்களும் வழிபட்டு, வேண்டிய இஷ்டசித்திகளையடைந்தனர். பிற்காலத்திலே, இந்நாட்டையாண்ட ஒருசோழராஜாவானவர் இத்தலமகிமையை உணர்ந்து, வலிதாயநாதருக்கும் ஜகன்மாதாவுக்கும் மற்றைப்பரிவாரங்கட்கும் கருப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் கோபுரம் திருமதில் ஐந்துபிராகாரம் முதலியவைசெய்வித்து, பாரத்துவாசதீர்த்தம் அநுமதீர்த்தமுதலிய தீர்த்தங்களையும் புதுக்கி, கும்பாபிஷேகம்புரிவித்து, நித்தியநைமித்திகங்களையும் விழாக்களையும் நடாத்தினர். இத்தலம் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அருளிய தேவாரமும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழும் பெற்றதாய், இத்தொண்டைநாட்டிலே, தேவாரம்பெற்ற முப்பத்திரண்டு க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவிளங்குகின்றது.

வேண்டுகோள்.

இங்ஙனம் தெய்வீகமுற்றுப் பாடிபெற்றுவிளங்கும் இத்தலம், சிலநாளாய் ஜீர்ணதசையையடைந்து நித்தியபூசையுமில்லாமலிருந்து தற்காலம் நித்தியபூசையும்பிரதோஷவுற்சவமுதலிய சிலவுற்சவங்களும் நடத்தப்பட்டுவருகின்றது; இது சென்னையி

லிருந்து திருவள்ளூருக்குப் போகும் நடைமார்க்கத்திலே, கொ ன்னூருக்கு மேற்கில் ஒருமயில் தூரத்திலுள்ளது; இதற்கு இரெயிலில் கொன்னூர் ஸ்டேஷனில் இறங்கியும்வரலாம்; ஆகையால், சைவாபிமானிகளாயும் சிவபுண்ணியங்களிற் சிந்தனையுடையவர்களாயுமுள்ள அன்பர்கள் சகலரும்வந்து இத்தலத்தைத்தரிசித்து, இயன்றஅளவு திருப்பணிக்குறைகளை நிறைவேற்றி, இச்சிவபுண்ணியங்களைக் கைக்கொள்ளுதல் உத்தமோத்தமமாகும். சுபம்.

முரிந்து வீழ்ந்தன வெடித்தன வுடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணிய நான்மடங் குறுவார்.
